# உதயன்

சுடர் 30 | கதிர் 329 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஐப்பசி 4, புதன்கிழமை 21.10.2015



POWER LOTTO இன்றைய சுப்பர் பரிசு ரூ.50,181,132/-
தேசிய லொத்தர் சபை


# படை அதிகாரிகளை தண்டிக்க வேண்டும்

## மனித உரிமை மீறல்களை அரசு பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவ வேண்டும் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, ஒக்ரோபர் 21
இலங்கைப் படையினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். எனவே போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டுமென மெக்ஸ்வல் பரணகம தலைமையிலான காணாமற்போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

2013ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வல் பரணகம தலைமையிலான காணமற்போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்தது. இந்த ஆணைக்குழுவுக்கு 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர், இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டது.

குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது. எனினும் விசாரணை அறிக்கை குறித்து எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த மாதம் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை அரசு அளித்த வாக்குறுதியை அடுத்து நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் பரணகம ஆணைக்குழுவின் 178 பக்கங்களைக் கொண்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

★ சனல்4 ஊடகத்தின் 'நோ பயர் சோன்' ஆவணப்படம் உண்மையானது. ஆவணப்படத்தின் குற்றச்சாட்டுக்கள் குறித்து நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இராணுவ விசாரணைகள் நம்பகமானதாக அமையாது. எனவே சர்வதேச ரீதியிலான கண்காணிப்புடன் கூடிய நீதிமன்ற விசாரணைகளின் ஊடாகவே பக்.24

## ரவிராஜ் படுகொலையின் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவு

கொழும்பு, ஒக்.21
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர், பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டபோது, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இதனை அறிவித்ததாகச் சந்தேக நபர்கள்தரப்புசட்டத்தரணி ஸ்ரீலால் தன் தெனிய தெரிவித்தார்.

இதன்போது, ரவிராஜ் கொலை பக்.24

## திறைசேரி உண்டியல் மூலம் கடன் பெறும் எல்லை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.21
திறைசேரி உண்டியல்களை விநியோகம் செய்து அதன் ஊடாகக் கடன் பெற்றுக் கொள்ளும் தொகைக்கான வரையறையை அரசு 400 பில்லியன் ரூபாவினால் உயர்த்தியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்றில் நிதி அமைச்சரினால் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் திறைசேரி உண்டியல் விநியோகத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்ச அளவு அரசகடன்தொகை 850 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க, நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்த யோசனையின் ஊடாக இந்தத் தொகை 1250 பில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. பக்.24

## பாடசாலை சென்ற சிறுமியைக் காணவில்லை

ஒட்டுசுட்டான், ஒக். 21
ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சென்ற சிறுமியைக் காணவில்லை எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலகத்தினரின் உதவியுடன் நேற்றுத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த சிவநாதன் சுகிந்தினி (வயது 14) என்ற சிறுமியையே காணவில்லை என பக்.24

## ஹெரோயின் வைத்திருந்த இளைஞனுக்கு 3 வருட கடூழியச் சிறை

மன்னார், ஒக். 21
மன்னாரில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த இளைஞனுக்கு மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

மன்னார் பள்ளிமுனையில் பொலிஸார் நேற்றுமுன்தினம் திடீர் சோதனையில் ஈடுபட்டபோது, இளைஞன் ஒருவரிடமிருந்து, 30 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளனர். இதனையடுத்துக் குறித்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர், மன்னார் நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, அவரை நேற்று வரைக்கும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். பக்.24

# முன்னாள் அமைச்சரின் நிறுவனம் நீதிமன்றின் உத்தரவில் சீல் வைப்பு

## சட்டவிரோதமான முறையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை நடத்திய குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஒக்.21
முன்னாள் அமைச்சர் ஒருவரது எனக் கூறப்படும், ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு முன்பாக அலுவலகத்தைக் கொண்டுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை நிறுவனமொன்று சட்டவிரோதமான முறையில் ஒளிபரப்புச்சேவைகளை நடத்தி வந்த குற்றச்சாட்டில் நீதிமன்றின் உத்தரவில் முடக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்திலிருந்த பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன. அந்த நிறுவனத்துக்கு உரிமையாளரெனக் கூறப்பட்ட நபரும் நேற்றுக் கைது செய்யப்பட்டு 10 மில்லியன் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் ஈ.பி.டி..பி அலுவலகத்திற்கு முன்பாக, அலுவலகத்தைக் கொண்டுள்ள குறித்த தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை நிறுவனம் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் பக்.24

## பாலியல் லஞ்சம் கோரிய விவகாரம்: ஆதாரங்கள் இல்லை என்கின்றது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.21
இந்திய வீட்டுத் திட்டத்துக்கு நிதி வழங்குவதை விரைவுபடுத்தப் பயனாளிகளிடம் பாலியல் லஞ்சம் கோரப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.

இந்த விடயம் தொடர்பில் பயனாளி ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்து விடயம் பூதாகரமானது. அதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாங்கள் மேற்கொண்ட விசாரணைகளில் பாலியல் லஞ்சம் தொடர்பான முறைப்பாட்டை நிருபிப்பதற்கான சரியான சாட்சியங்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி இந்த விடயத்தில் நிரபராதியாகவே காணப்படுகின்றார் - என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் மகீஸ் ஜொனி தெரிவித்துள்ளார்.

அவருக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு பாரதூரமானது என்பதை நாங்கள் கவனத்திற் கொண்டிருக்கின்றோம். குற்றம் நிகழ்ந்திருக்கின்றது என்பதை முறைப் பாடு செய்தவர் விசாரணையில் கூறியிருப்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்ந்தும் பழைய இடத்திலேயே பணியாற்றுவதில் பிரச்சினைகள் ஏற்படலாம். அதனால் அவர் வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

விரிவு பக் 03

# மூன்று விசாரணைகளின் அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார் பிரதமர்


## ஜெனிவாத் தீர்மானம் குறித்து நாளை விவாதம்

கொழும்பு, ஒக்.21
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்திய மூன்று முக்கிய விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கை, மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வல் பரணகம ஆணைக்குழு, நிசங்க உடலகம ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைளே நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக, நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ள நிலையிலேயே, இந்த அறிக்கைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை, ஜெனிவாவில் இலங்கையின் பக்.24




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காட்டு யானையின் தாக்குதலில் கர்ப்பிணியும், கணவனும் சாவு

மட்டக்களப்பு, ஒக்.21

மட்டக்களப்பு அம்பாறை வன ஜீவராசிகள் திணைக்கள நிர்வாகத்துக்கு உட்பட்ட தாந்தாமலை, மகிளடியூற்று நாற்பது வட்டைப் பகுதியில் காட்டு யானை தாக்கி கணவனும் கர்ப்பிணி மனைவியும் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு காட்டு யானை கிராமத்திற்குள் புகுந்து இவர்களின் வீட்டைத் தாக்கியுள்ளது.

வீடு நொறுக்கப்பட்டதில் வீட்டினுள் இருந்த மனைவி தம்பிராசா சுயமலர் (வயது-17) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். வீட்டை விட்டு வெளியில் தப்பி ஓட எத்தனித்த கணவன் மோகனதாஸ் (வயது-30) என்பவரையும் காட்டு யானை விரட்டிச் சென்று தாக்கியுள்ளது. அவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் திருமணமாகி பத்து மாதங்களேயாகின்றன என்றும் உயிரிழந்த மனைவி 3 மாதக் கர்ப்பிணியாக இருந்தார் என்றும் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ற)





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதை ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வை மாவட்ட செயலகத்தில் வைத்து மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் ஆரம்பித்து வைத்தார். புகையிலை, மது மற்றும் ஏனைய போதைப் பொருள் பாவனைகளினால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறும் விதமாக இடம்பெற்ற இந்த விழிப்புணர்வுப் பேரணி யாழ். பஸ் நிலையம் வரை சென்று நிறைவடைந்தது. (ற-5)

# 28 ஆயிரம் பனை விதைகள் தீவகத்தில் இம்முறை நடுகை

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

தேசிய பனம் விதை நடுகை செய்யும் திட்டத்தில் இந்த முறை தீவுப் பகுதியில் 28 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படுகின்றன என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் எஸ். கோகுலதாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய பனம் விதை நடுகை செய்யும் திட்டத்தில் குடாநாடு முழுவதும் சுமார் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட பனம் விதைகள் நடுகை செய்யப்படுகின்றன.

இதில் தீவுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 28 ஆயிரம் வரையிலான பனம் விதைகள் நடுகை செய்யப்படுகின்றன. நெடுந்தீவில் 11 ஆயிரமும், ஊர்காவற்றுறையில் 10 ஆயிரமும், வேலணையில் 2 ஆயிரமும், காரைநகரில் 5 ஆயிரமுமாக பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த காலப் போரால் குடாநாடு முழுவதுமே பனைகள் கூடுதலாக அழிக்கப்பட்டுள்ளன. அதில் தீவுப்பகுதியில் கூடுதலான பனைகள் அழிக்கப்பட்டும் உள்ளன. பனைகள் கூடுதலாக அழிக்கப்பட்ட இடங்களில் தேசிய பனம் விதைகள் நடுகை செய்யும் திட்டத்தில் அந்தந்தப் பிரதேசங்களில் முன்னுரிமை அடிப்படையில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யும் பணிகள் தொடர்ந்து நவம்பர் மாதம் வரைக்கும் இடம்பெறும். இந்தத் திட்டத்துக்கு பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் பூரண ஆதரவு தரவேண்டும். - என்றார். (ற-17)

# இந்திய மீனவரை கட்டுப்படுத்தக் கோரி தபாலட்டைகள் அனுப்பும் போராட்டம்

## யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கை கடற்படப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்தக் கோரி கையொப்பமிடப்பட்ட தபாலட்டைகளை அனுப்பும் போராட்டம் வடமாகாண மீனவர்களால் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் முற்பகல் 11மணியளவில் யாழ்.மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளன அலுவலகத்தில் வடமாகாண மீனவர் சங்க பிரதிநிதிகள் கையொப்பத்துடன் ஆரம்பமானது.



இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து வடக்கு மீனவர்களால் கையொப்பமிடப்பட்ட 20 ஆயிரம் தபாலட்டைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, கடற்தொழில் அமைச்சு, வடமாகாண முதலமைச்சர், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளன தலைவர் அ.எமிலியான்பிள்ளை, மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனத் தலைவர் நூர் முஹமட் ஆலம், கிளிநொச்சி மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளன தலைவர் ஜோசப்பிரான்சிஸ், முல்லை மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளன தலைவர் ஏ.மரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு தபாலட்டைகளில் கையொப்பம் இட்டனர். (ற-21)





புள்ளி விவரவியல் தினத்தை முன்னிட்டு 'சரியான தரவுகள் சரியான வாழ்வு' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு நேற்று இரண்டாவது முறையாக கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் முற்பகல் 9.30 மணியளவில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலாளர்கள், புள்ளிவிவரவியல் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், பாடசாலை மாணவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். உலக புள்ளி விவரவியல் தினம் 2010 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. (ற-21)

# 70 புள்ளிகளை பெற்ற மாணவர் அனைவருக்கும் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு பாடத்திற்கு 35 புள்ளிகள் என்ற அடிப்படையில் 2 பாடங்களுக்கும் மொத்தமாக 70 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அனைவரும் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவே கருதப்படுவார்கள் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக மாத்திரமே மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 3 லட்சத்து 33 ஆயிரத்து 472 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 2 லட்சத்து 54 ஆயிரத்து 490 பேர் சித்தியடைந்துள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் சான்றிதழ்கள் தபால்மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல் லஞ்சம் கோரியதற்கு ஆதாரம் இல்லை

## விசாரணைகளில் தெரியவந்துள்ளன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

இந்திய வீட்டுத் திட்டத்துக்காக பாலியல் லஞ்சம் கோரப்பட்டது என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒக்ரோபர் முற்பகுதியில் கிளிநொச்சியிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்துக்கு எழுத்து மூலமான ஒரு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. வீடமைப்புத் திட்டத்துக்குரிய கொடுப்பனவை விரைவுபடுத்த பாலியல் லஞ்சம் கோரப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முழங்காவிலில் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தைப் பெறும் பயனாளி ஒருவராலேயே மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் காத்திரமான கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதனால் இந்த முறைப்பாடு தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களை விசாரணைக்காக நியமித்தார். இவர்கள் விசாரணை நடத்திய போதும் அதன் முடிவு பெறப்படவில்லை.

அதன் பின்னர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகப் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள், யாழிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பிரதிநிதி மற்றும் பெண்கள் அடங்கிய குழுவினர் விசாரணைக்காக நியமிக்கப்பட்டனர்.

பக்கம் 1 விரிவு

ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி விசாரணை ஆரம்பமானது. முறைப்பாட்டைத் தெரிவித்த நபர் உள்ளிட்ட 15 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 9 பேர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களாவர். குறித்த குழு தங்கள் விசாரணை அறிக்கையை ஒக்ரோபர் 16ஆம்திகதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தக் குழு அதனுடைய தீர்மானத்தில், முறைப்பாடு தொடர்பில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில்நுட்ப அலுவலர் முறைகேடாக நடந்ததை நிரூபிக்கக் கூடிய நம்பத்தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதைக் கண்டறிந்தது. அத்துடன் முறைப்பாட்டில் முப்பரிமாணத் தன்மை இருக்கின்றது என்று கண்டறிந்த குழு இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில், வெளிப்படைத் தன்மையுடன் அணுகப்பட வேண்டும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நம்புகின்றது. இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் கூட, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரின் அறிவுத்தலுக்கு அமைய, விசாரணை அறிக்கை, இலங்கையின் சட்டம் - ஒழுங்கு - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது. அவர்கள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். - என்றுள்ளது.

(ந-5)

## சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு கழிவகற்றலில் ஒத்துழையுங்கள்

### நல்லூர் பிரதேச சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.21

சூழல் மாசடைவதைத் தவிர்க்கும் வகையில் கழிவுகளை அகற்ற ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்கு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

நல்லூர் பிரதேச சபைக்கு கழிவகற்றலுக்கான சீரான இடம் இல்லாததால் கழிவகற்றல் செயற்றிட்டத்தைப் புதிய முறையில் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளோம்.

அதன்படி உக்கக்கூடிய கழிவுகளை அந்தந்த வீடுகளில் முடியுமானவிடத்து பசளையாக்குதல் அல்லது புதைத்தல், எரித்தல் போன்ற வழிமுறைகளின் மூலம் முகாமை செய்யுமாறும், உக்க முடியாத கழிவுப்பொருள்களை பிரதேச சபை உத்தியோகத்தர் களால் வழங்கப்படும் 3 வர்ண பைகளில் - மஞ்சள் நிறப் பையில் கழுவித் துப்புரவு செய்யப்பட்ட கண்ணாடிகள் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள், தகரப்பேணிகளையும், பச்சை நிறப் பையில் - கழுவித் துப்புரவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள் களையும், கபில நிறப் பையில் பொலித்தீன், சொப்பிங் பைகள் மற்றும் உக்க முடியாத இலத் திரனியல் பொருள்களையும் இட்டும் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளோம். இது குறித்து பிரதேச சபை உத்தி யோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வூட்டும் செயற்பாட்டில் ஈடுபடுவர்.

**அறிவுறுத்தல்களை மீறுபவர்கள் மீது 1987ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் சட்டத்தின் பிரகாரம் அந்தந்த இடத்திலேயே அபராதம் விதிக்கப்படும். தேவைப்படும் இடத்து சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்தப் பகுதி மக்களுக்கு முன்னறிவித்தல் வழங்கி மாதத்தில் இருதடவைகள் கழிவுகளைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் கழிவுகள் வீசுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். மீறுபவர்கள் மீது 1987ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் சட்டத்தின் பிரகாரம் அந்தந்த இடத்திலேயே அபராதம் விதிக்கப்படும். தேவைப்படும் இடத்து சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. -என்றார். (ந-ரி5)




அழியாத துயருடனே ஆண்டொன்றில்....

அமரர் குமாரசூரிய
ராஜவடிவேல் சந்திரகாசன்
(B.A (Hons)
(சமாதான நீதிவான். அபிவிருத்தி உத்தியோகத்தர்
காணி அபிவிருத்தித்திணைக்களம்-
யாழ்ப்பாணம்.)

உயிராகி உலகில் 02.10.1982
துயராகி நினைவில் 21.10.2014



சரவிழி நீர் சொரிந்து
இருவிழிகள் பூத்திருந்து
காலமெல்லாம் உனையெண்ணிக்
கதறியழ வைத்தாயோ!
பட்டங்கள் பதவியெனப்
பல்கலையில் நீ சிறந்து
உச்சங்கள் கண்டதனால்
உவந்திருந்த வேளையிலே........
கெட்டதொரு சொப்பனமாய்
கேடு வந்து சேர்ந்ததையா!
உலகிருக்கும் கோயிலெல்லாம்
உனையெண்ணித் தவமிருந்தும்
பலனின்றிப் போனதுவோ
பாலகனே உனை இழந்தோம்
அழியாத நினைவுடனே
ஆண்டொன்று ஆனாலும்
மறையாது உன் துயரம்
காலங்கள் நீண்டாலும்......

உன்பிரிவால் துயருறும்
அன்புச் சகோதரர்கள்
...கோயிலடி.
...வடக்கு, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21
சீனாவின் ஒத்துழைப்பையும் - உதவியையும் எதிர்பார்த்து இருக்கின்றோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற சீனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதித் தலைவரும் சீன தேசிய மக்கள் காங்கிரஸ் நிலையியற் குழுவின் பிரதித் தலைவருமான சாங் பாஓவென் உள்ளிட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவைச் சந்தித்த வேளையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.



இன்று கொழும்பு முதல் நாட்டின் நாலா திசைகளிலும் பயணிக்கின்றபோது சீன அரசின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களை நாம் காணமுடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, சீனாவின் அபிவிருத்தித் திட்ட உதவிகளுக்கு நன்றிகளும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் எதிர்காலத்திலும் இலங்கை அரசு, சீன அரசின் தொடர்ச்சியான உதவிகளை எதிர்பார்க்கின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டில் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கும் சீன அரசின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு அமைக்கின்ற போதெல்லாம் அரசுக்கும் கம்னியூஸ்ட் கட்சிக்குமிடையிலான உறவுகள் பலம் அடைந்திருப்பதையும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேசரீதியில் சீனா, இலங்கைக்கு வழங்கிவரும் தொடர்ச்சியான உதவிகளுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனக் கப்பல்கள் இலங்கை வருவதற்கு அனுமதி கோரினால் பரிசீலிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்த நிலையிலும், சீனாவிடம் கடன்களை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டிருந்த நிலையிலுமே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற-5)

## கலைமாணி பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம், ஒக்.21
கடந்த வருடம் நடைபெற்ற கலைமாணி - 2011 (வெளிவாரி) இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது.

இந்த முறை 247 வெளிவாரி மாணவர்கள் கலைமாணிப் பட்டம் பெறுவதுடன் அவர்களில் 10பேர் இரண்டாம் வகுப்புச் சித்தியும் பெற்றுள்ளனர்.

மாணவர்கள் தமது பட்டப் பெறுபேற்றை இன்று புதன்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணைப்பாளர்கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

பட்டம் பெறுவோர் பட்டியலை www.jfn.ac.lk/codl எனும் இணையத்தள முகவரியூடாகவும் பார்வையிடலாம். (ற-ரி6)

## யாழ். நீதிமன்றத் தாக்குதல் சம்பவம்; 8 சந்தேகநபர்களுக்கு நேற்று பிணை



யாழ்ப்பாணம்,ஒக். 21
கடந்த மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டட தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 சந்தேகநபர்களையும் பிணையில் செல்லுமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

புங்குடுதீவு மாணவியின் படுகொலையைத் தொடர்ந்து யாழ் நகரப்பகுதியில் நடத்தப்பட்ட கடையடைப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதங்களால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி தாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக ஐந்து வழக்குகள் பொலிசாரால் தொரடப்பட்டன.

நீதிமன்றத் தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய மூன்று வழக்குகள் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டன. இந்த வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் 27 பேருக்கு ஏற்கெனவே நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டிருந்தது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 சந்தேகநபர்கள் அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் பிணை கோரிக் கடந்த தவணை ஆவணங்களுடன் சத்தியக்கூற்றை அணைத்திருந்தனர். நீதிவான் பெ.சிவகுமார் தனது கட்டளையில் சந்தேகநபர்கள் தொடர்ச்சியாக 5 மாதங்கள் விளக்கமறியலில் இருந்து வருவதையும் அதனால் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பாதிப்படைவதையும் நீதிமன்றம் கருத்தில் கொள்வதாகத் தெரிவித்து அவர்களுக்குப் பிணை வழங்கினார்.

மூன்று வழக்குகளிலும் ஒவ்வொரு சந்தேக நபரும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான கிராம சேவகரினதும் பிரதேச செயலரினதும் சான்றிதழை முற்படுத்தும் ஐந்து நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பிணையாளிகளின் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் 9 மணி முதல் 12 மணிக்கு இடையே யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறும், நீண்ட காலம் விளக்கமறியலில் இருந்ததை ஒரு பாடமாகக் கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறு பொதுச் சொத்துக்களைச் சேதமாக்கக் கூடாது என்றும், குற்றச்செயல்களில் ஈடுபட்டால் பிணை நிபந்தனை இரத்துச் செய்யப்பட்டு வழக்கு முடியும் வரையில் விளக்கமறியலில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடனும் பிணை வழங்கப்பட்டது. வழக்கு விசாரணைகள் டிசம்பர் மாதம் 8 ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன. (ற-103)











## தமிழினியின் புகழுடல் நேற்று நல்லடக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.21
திரண்டிருந்த மக்கள் கண்ணீர் சிந்தி விடையளிக்க நேற்று கோரக்கன்கட்டு இந்து மாயானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியின் புகழுடல் அடக்கம் செய்யப்பட்டது.

தமிழினியின் உடல் பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அங்கு முன்னாள் போராளி வெற்றிச் செல்வி தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் , தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் செயலாளர் செ.கஜேந்திரன், வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோர் உரையாற்றினர். வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் இரங்கல் உரையை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரனேசன் வாசித்தார்.

இறுதிக் கிரியைகளின் பின்னர் திரண்டிருந்தவர்கள் கண்ணீர் சிந்தப் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

1972ஆம் ஆண்டு பிறந்த தமிழினி என்று அழைக்கப்படும் சிவகாமி 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். பின்னர் பல பொறுப்புக்களை வகித்து 2009 ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவின் அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பதவி வகித்தார். இறுதிப் போரின் பின்னர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டார். அதன் பின்னர் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் திருமண பந்தத்தில் அவர் இணைந்திருந்த நிலையில் நோயின் தாக்கத்தால் கடந்த 18ஆம் திகதி அதிகாலை உயிர் நீத்தார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் அழுத்தங்களை சரியாகக் கையாள்கின்றது அரசு

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை பிரதமர் ரணில் தலைமையிலான எமது அரசு மிகச் சரியாகக் கையாள்கின்றது. கலப்பு நீதிமன்ற முறைமையில் எவ்வாறான சர்வதேச உதவிகளை பெறுவது என்பதை அரசே தீர்மானிக்கும். அதில் வெளியாள்களுக்கு இடமில்லை - இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசு கவனம் செலுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கலப்பு நீதிமன்ற முறைமை மூலமாக சர்வதேச தலையீட்டுக்கு அரசு இடமளிக்கின்றது என்று மகிந்த அணியினர் தொடர்ச்சியாக குற்றம் சுமத்திவரும் நிலையில் அது தொடர்பிலும், அரசியல் கைதிகளின் விடு தலை தொடர்பிலும் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பிலான பிரேரணை பற்றி கடந்த காலத்தில் இருந்தே பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கலப்பு நீதிமன்ற முறைமையில் இலங்கையின் சுயாதீன செயற்பாடுகள் பாதிக்கப்படும் எனவும், சர்வதேச விசாரணையே பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் ஒரு தரப்பினர் கருத்துக்களை பரப்பி வருகின்றனர். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒரு சிலரும் இந்த கலப்பு நீதிமன்ற விசாரணை முறைமை சர்வதேச கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும் என்ற கருத்துக்களையும் முன்வைத்துள்ளனர்.

ஆனால் இந்தக் கலப்பு நீதிமன்ற முறைமை சர்வதேச விசாரணை அல்ல. அதேபோல் இந்த விசாரணைகளின்போது சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனூடாக ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளையே குறிப்பிட்டுள்ளனர். அதைத் தவிர வேறு எந்த வித சர்வதேச தலையீடுகளும் இந்த விசாரணைகளின் போது இடம்பெறமாட்டாது. அவ்வாறு இருக் கையில் நாட்டில் மக்களை குழப் பவும் அரசின் மீது முரண்பாட்டுக் கருத்துக்களை ஏற்படுத்தவுமே முயற்சிக்கின்றனர்.

இலங்கை தொடர்பில் இன்று பலமானதொரு சர்வதேச அழுத்தம் ஏற்படவும் எமது இராணுவத்தினர் மீதான விசாரணைகளை மேற்கொள்ளவும் பிரதான காரணம் மகிந்த ராஜபக்சவாகும். அன்று நாம் எமது இராணுவத்தை காப்பாற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். அதேபோல் சர்வதேச விசாரணை தேவையென சர்வதேச தரப்பு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்த காலகட்டத்தில் இலங்கையில் பலமான உள்ளக பொறிமுறைகளைக் கையாண்டிருந்தால் இன்று இவ்வாறான அழுத்தங்கள் ஏற்பட்டிருக்காது. ஆகவே எம்மீது குற்றம் சுமத்தும் மகிந்த அணியினர் முதலில் மக்களிடம் மன் னிப்புக்கோர வேண்டும்.

அன்று சரியான வேலைத்திட்டங்களை கையாண்டிருந்தால் இன்று நாம் அனைவரும் இலகுவான முறையில் எமக்கு எதிரான அழுத்தங்களைச் சமாளித்திருக்க முடியும். ஆனால் இன்று பிரதமர் ரணில் மற்றும் எமது அரசு இந்த விடயங்களை மிகச்சரியாகவே கையாண்டு வருகின்றது. அதேபோல் இப்போது முன்வைக்கப்படிருக்கும் கலப்பு நீதிமன்ற முறைமையிலும் எவ்வாறான சர்வதேச உதவிகளை அல்லது சர்வதேச தலையீட்டை அனுமதிப்பது என்பது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை அரசே மேற்கொள்ளும். இதில் வேறுயாரும் தீர்மானம் எடுக்க முடியாது.

கேள்வி:- இராணுவத்தை விசாரணைக்கு உட்படுத்தும் வேலைத் திட்டத்தை அரசே மேற்கொள்கின்றது என்று மகிந்த தரப்பு குற்றம் சுமத்தி வருகின் றதே?

பதில்:- எமது இராணுவத்தை விசாரணைக்கு உட்படுத்த எந்தவித தேவையும் எமக்கு இல்லை. ஆனால் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு அமைய இந்த சம்ப வங்களுடன் தொடர்புடைய நபர் களை விசாரிக்க வேண்டியது எமது கடமையாகும். இலங்கையின் சட்டம் அனைவருக்கும் சமமானது. அதேபோல் அனைவரும் எமது சட்டங்களுக்கு கட்டுப்பட்டாகவேண்டும். மேலும் இலங்கை இராணுவம் மீது சர்வதேச அமைப்புகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலும், இந்த விசாரணை முறைமைகள் தொடர்பிலும் நானே இராணுவத்தை தெளிவுபடுத்தி வருகின்றேன். அதே போல் இவர்கள் தொடர்பிலான சட்ட உதவிகளையும் எமது அரசு முன்னெடுத்து வருகின்றது.

கேள்வி:- அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- ஜனாதிபதி மற்றும் நீதியமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர். அவர்கள் நல்ல முடிவுகளை எடுப்பார்கள். (ற)

## பொது மன்னிப்பு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்ட விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பது அநீதியானது என அந்தக் கட்சியின் ஊடகச் செயலாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிராக உடனடியாக நீதிமன்றச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இது சட்டமா அதிபருக்கு உரிய பொறுப்பு. அது மாத்திரமல்லாது இது நல்லாட்சி அரசினதும் பொறுப்பு.

அனைவருக்கும் சட்டம் நியாயமானதாகவும் தார்மீகமாகவும் நிலைநாட்டப்பட வேண்டும். அப்படியில்லாது குழுக்கள், அணிகள் அல்லது அரசியல் பிரிவினைவாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றுள்ளது. (ற)





உடல் நோய்கள் பலவற்றுக்கும் பிரதான காரணமாக அமைவது, முறையற்ற ஆகார ஜீரண செயன்முறையே...

உணவு ஜீரணச் செயன்முறையை கிரமமாக்குவதன் மூலம் உங்கள் சுகவாழ்வு பாதுகாக்கப்படும்.

தினமும் ஸ்வஸ்த திரிபலா பாவிப்பதன் மூலம் ஆகார ஜீரண செயன்முறை சீராகும்.

தினசரி பாவனை மூலம்
- உணவு ஜீரண செயற்பாடு கிரமமாகவும் முறையாகவும் நடைபெற உதவும்.
- வயிறு ஊதல் மற்றும் மலக்கட்டு நீங்கி மல வெளியேற்றம் கிரமமடையும்.
- ஈரலை பாதுகாத்து அதன் தொழிற்பாட்டை மேம்படுத்தும்.
- கண்பார்வையை மேம்படுத்தும்
- குருதி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும்
- சருமத்தின் மினுமினுப்பை அதிகரிக்கும்
- வயதுக்கு முன் மூப்படைதலை தடுத்து, இளமையை பேண உதவும்
- அதி உடற்பருமன், கொலஸ்டரோல், பெருவயிறு ஆகிய காரணங்களால் ஏற்படும் உபத்திரவங்களை கட்டுப்படுத்த உதவும்
- விஷ பதார்த்தங்களையும் கழிவுகளையும் உடலிலிருந்து வெளியேற்ற உதவும்

ஸ்வஸ்த திரிபலா பாவனை உபதேசம்
- சுகநலத்தையும் இளமையையும் பேணுதலுக்கு தினமும் 1-2 வில்லைகள் வீதம், நாளொன்றுக்கு இரு தடவைகள்.
- அதிக புளிப்புத்தன்மை, வயிற்று எரிவு, ஜீரணக் குறைவு மேலும் மானசீகத் தாக்கங்கள் காரணமாக ஏற்படும் கோளாறுகளுக்கு இரு (2) வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு இரு தடவைகள்
- மலக்கட்டு, மலம் வெளியேறுவதில் கிரமமற்ற நிலைகளில் 2-4 வில்லைவரை இரவு உணவுக்கு பின்பு பயன்படுத்தவும்

"வேலைப்பளு நிறைந்த உங்களுடைய ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கு...."

லிங்க் நெச்சுரல்

ஸ்வஸ்த

திரிபலா



கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் போன்ற பசும் மூலிகைகளாலான ஆயுர்வேத தயாரிப்பு.




Herbs proven in Ayurveda practice

முன்னணி பாமசி, தேசிய ஆயுர்வேத கடைகள் மற்றும் முன்னணி சுப்பர் மார்க்கட்டுகளில் பெற்றுக் கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு 0711-950101

LINK லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொலைபேசி : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தன்னம்பிக்கை மனதில் மேலோங்கி நிற்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும்.உடல்நலனில்அக்கறைசெலுத்துவதுஅவசியம். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**இடபம்:** நண்பரின் பேச்சால், அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் உயரும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் இலாபம் காண்பீர்கள். தாயின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும்.

**கடகம்:** குறுக்கிடும் சிரமத்தை சமயோசிதமாக முறியடிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். ஆதாயம் உயரும். வெகுநாளாக காணாமற்போன பொருள் கைக்கு வந்து சேரும். பிள்ளைகள் வகையில் திடீர்ச் செலவு ஏற்படலாம்.

**சிங்கம்:** பணிகளை நிறைவேற்றுவதற்கு விடாமுயற்சி தேவைப்படும்.உங்கள்நலன்விரும்புபவரின்ஆலோசனை கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானது. அரசு சார்ந்த உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**கன்னி:** எதிலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது. தொழில் மற்றும் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக் கும். வெளியூர் பயணத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது

**துலாம்:** பெற்றோர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பிள்ளைகளுக்காக ஆடம்பரச் செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவார்கள்.

**விருச்சிகம்:** உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். பணியாளர்கள்பாதுகாப்புநடைமுறையைப்பின்பற்றுவது நல்லது. அரசியல்வாதிகள் புதிய பதவியைப் பெறமுயற்சிப்பார்கள்.

**தனுசு:** எளிய முயற்சியிலும் பல மடங்கு நன்மை உண்டாகும். தொழில் மற்றும் வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். உடன்பிறந்தவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து மகிழ்வீர்கள். பெண்கள் குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை செலுத்துவர்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் சொந்த விடயம் பற்றிப் பேச வேண்டாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி இலாபம் கூடும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். நேரத்துக்கு உண்பதால் உடல்நலம் சீராக இருக்கும்.

**கும்பம்:** மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் வளர்ச்சியும் ஆதாயமும் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவார்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். இலாபம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவார்கள்.

# ஆயிரம் வாரங்களை கடந்த ஷாருக்கானின் படம்



உலக சினிமா வரலாற்றில் முதன்முறையாக ஆயிரம் வாரங்களைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கும் தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே படத்தில் வரும் ராஜ் கதாபாத்திரம் பெண்மை கலந்த கதாபாத்திரம் என்பதால் அந்தப் படத்தில் நடிக்க முதலில் மறுத்ததாக 20 ஆண்டுகளுக்குப் பின்னர் நடிகர் ஷாருக்கான் தற்போது தெரிவித்துள்ளார்.

ஷாருக்கான், கஜோல், அனுபம் கெர், கரண் ஜோஹர் ஆகியோரின் நடிப்பில் அறிமுக இயக்குநரான ஆதித்யா சோப்ரா இயக்கிய காதல் படம் தில்வாலே துல்ஹனியா லே ஜாயங்கே (துணிச்சல் உள்ளவன் மணமகளைத் தூக்கிச் செல்வான் என்பது இந்த தலைப்பின் தமிழ்ப் பொருளாகும்).

காதல்ரசம் சொட்டும் அருமையான கதையம்சம், செவிக்கினிய பாடல்கள், ஆக்ரோசமானசண்டைக்காட்சிகள்போன்றவற்றால் 1995 ஆம் ஆண்டு வெளியான இந்தப் படம் பெரும் வெற்றியீட்டி வசூலையும் அள்ளிக் குவித்தது. இந்தியாவையும் கடந்து ஷாருக்கானின் புகழ் வெளிநாடுகளிலும் பரவ இந்தப் படத்தின் வெற்றி மிகப்பெரிய காரணமாக அமைந்தது.

இரசிகர்களின் வேண்டுகோளின்படி, வெளியீடு செய்யப்பட்ட நாளில் இருந்து மும்பையில் உள்ள மராத்தா மந்திர் திரையரங்கில் இந்தப் படம் கடந்த 20 ஆண்டுகளுக்கும்மேலாக தொடர்ந்து திரையிடப்பட்டு வருகிறது. ஆயிரமாவது வாரத்தைக் கடந்து தில்வாலே துல்ஹனியா லே ஜாயங்கே தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

திரையரங்கில் 3 வாரம் ஓடினாலே வெற்றி நடைபோடுவதாகச் சொல்லப்படும் இந்தக்காலத்தில் உலகின் எந்தமொழித் திரைப்படமும் இதுவரை சாதித்திராத, இனியும் சாதிக்க முடியாத ஒரு உச்சக்கட்டச்சாதனையை தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே என்ற திரைப்படம் செய்துள்ளது.

இந்த நிலையில், இந்தப் படத்தில் வரும் ராஜ் என்ற கதாநாயகன் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ள முதலில் தாம் மறுத்துவிட்டதாக நடிகர் ஷாருக்கான் தற்போது தெரிவித்துள்ளார்.

தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே படத்தின் 20 ஆண்டுகள் கால சாதனையைக் கொண்டாடும் வகையில் ஒருமணி நேரம் ஓடக்கூடிய குறும்படமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. படத்தில் இடம் பெறாமல் வெட் டுப்பட்ட காட்சிகள், இரண்டாம் கதாநாயகியாக நடித்த ஜூஹி சாவ்லா நடிப் பில் படமாக்கப்பட்டு, வெளிவராத சில காட்சிகள், துவாயை மட்டும் சுற்றியபடி, மேரே காபோன்மே ஜோ ஆயே (என் கன வில் நீவந்த வேளை) எனத் தொடங்கும் பாடல் காட்சியில் நடிக்க கதாநாயகி கஜோல் மிகவும் தயக்கம் காட்டியது, கிளைமாக்ஸ் காட்சியில் ஒரு சண்டை இடம் பெற்றே தீரவேண்டும் என்று ஷாருக்கான் பிடிவாதம்செய்தது, போன்ற சுவாரஸ்யமான பதிவுகள் இந்தக் குறும் படத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தப் படத்தில் நடிப்பதற்கு முன்னதாக டரர், பாஜிகர், அன்ஜாம் போன்ற அதிரடி ஆக்ன் படங்களில் நடித்து தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிக்கொண்ட ஷாருக்கான், பெண்மை கலந்த நளினத்துடன் கதாநாயகன் ராஜின் கதாபாத்திரம் சித்தரிக்கப்பட்டிருந்ததால் அந்தக் கதாபாத்திரத்தை ஏற்று நடிக்க முதலில் மறுத்துவிட்டேன் என இந்தக் குறும்படத்தில் தனது கருத்தை பதிவு செய்துள்ளார்.

பின்னர், நடிக்கச் சம்மதித்து, படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்னர் எனது சகோதரியின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் மிகவும் சோகமாக இருந்தபோது, இந்தப் படத்தின் காட்சிகள் படமாக்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்த கஜோல், அனுபம் கெர், துணை இயக்குநராக பணியாற்றிய கரண் ஜோஹர், நடன இயக்குநராக இருந்து, இயக்குநராக உயர்ந்த ஃபரா கான், ஆடை வடிவமைப்பாளர் மணிஷ் மல்ஹோத்ரா ஆகியோரும் இந்தப் படத்தை உருவாக்கியகாலத்தில் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை இந்தக் குறும்படத்தில் பதிவு செய்துள்ளனர்.

# கோழிக்கறியும் குதிரைக்கறியும்



ஒருவன் அசைவ உணவு விடுதிக்குச் சென்று கோழிப் பிரியாணி கேட்டான். அந்தப் பிரியாணியைச் சாப்பிட்டுப் பார்த்தான். அந்தப் பிரியாணியிலிருந்த கோழிக்கறியுடன் வேறு கறி கலந்திருப்பது போல் தெரிந்தது. உடனே உடனே பரிமாறுபவனை அழைத்து, இது கோழிக்கறி மாதிரித் தெரியவில்லையே... இதனுடன் குதிரைக்கறியும் கலந்திருப்பது போல் தெரி கிறதே... என்றான். உணவு பரிமாறுபவனை முதலில் மழுப்பினான். அதட்டிக் கேட்டதும், ஆமாம் சார்! வாசனைக்காகக் கோழிக்கறியு டன் கொஞ்சம் குதிரைக் கறியும் சேர்ப் போம் என்றான்.


எவ்வளவு கலப்பீர்கள்? என்று உணவு பரிமாறுபவனது சட்டையைப் பிடித்தான் அவன்.

சம அளவு சார்! என்றான் உணவுபரிமாறுபவன்

சம அளவுன்னா... எவ்வளவுடா... என்றான் அவன். சட்டையை விடுங்க சார்! இது கூடத் தெரியாதா உங்களுக்கு?


சம அளவுன்னா ஒரு கோழிக்கு ஒரு குதிரை தான் சம அளவு. அந்த அளவில்தான் கலப்போம் என்றான் உணவு பரிமாறுபவன் அவ்வளவுதான் சாப்பிட வந்த அவன் மயக்கம் போட்டு விழுந்தான்.


## பேஸ் புக்கில் பிடித்தவை...
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015

யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்

2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைப்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் ர.மதுர்ஷன்
161 புள்ளிகள்



செல்வன் ச. மேனஹன்
160 புள்ளிகள்

எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட **அதிபர் ச.விக்கினேஸ்வரி** அவர்களையும் ஆசிரியர் **வை.துஸ்யந்தி** அவர்களையும்,மாணவச் செல்வங்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்

- ★ ர. அபிஷான் - 146,
- ★ செ.விவேதினி - 142
- ★ கே.சாதுசா - 118
- ★ ந.நிதுஷன் - 113

வாழ்த்துவோர்: பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/அனலைதீவு தெற்கு,அ.த.க. வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை
மாணவி
**தங்கராசா கிருசாயினி**



அவர்கள் 2015ஆம் ஆண்டு நடை பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும்,பெற்றோருக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்த இவர் பலசாதனைகள் படைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார்,சித்தப்பாமார்,சித்திமார், மாமாமார், அத்தைமார்,அப்பப்பா, அப்பம்மா, அண்ணாமார்,அக்காமார், தம்பிமார், தங்கைமார் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

புத்தூர் மேற்கு,
கலைமதி வீதி.

(65400)(11,15,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



"தெய்வநிழல்",மல்வம் உடுவிலைச் சேர்ந்த சதீஸ்- ஜெகதா தம்பதிகளின் புத்திரியும்
**யா/ உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவியுமாகிய**
**செல்வி சாம்பவி**
2015ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகள் பெற்றுச் சித்தி யடைந்தமையையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம். அவர் மென்மேலும் அம்பாளின் அருளால் பல சிறப்புக்கள் பெற்றுக் கல்வியில் முன்னேற வேண்டும் என வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா(சாதுஜன்), அம்மப்பா(ஜெயராஜா), அம்மம்மா(சாரதா), அப்பப்பா (சின்னப்பு), அப்பம்மா(தவமணி), மாமா(சதீஷன்), சித்தி(சஞ்சுதா) மற்றும் சித்தப்பாமார், அத்தைமார்.

"தெய்வநிழல்" மல்வம் உடுவில், சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவனும்
**தயாபரக் குருக்கள் தமயந்தி**
தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனுமாகிய
**செல்வன் ஜதுஷனன்**



அவர்கள் 2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தினையும் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார். இவரை மென் மேலும் சிறந்த பெறுபேறுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் JP
பிரமந்த வல்லை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் (பேரன்)
அம்மம்மா,மாமாமார்,மாமிமார்,
சித்தப்பாமார், சித்திமார்

தகவல்:
சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் JP
பேரன்

(64157)(11,15,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை -2014 சாதனையாளர்கள்



| சி.விநோஜிதன் | சி.அஸ்வின் | அ.ஹம்சத்வனி | அ.சகாப்தன் |
|---|---|---|---|
| 151 | 165 | 150 | 162 |

தரம் 5 இற்கு கல்வி கற்பித்த திருமதி பொன்மதி இராஜேஸ்வரனையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற இருபது மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை -2015 சாதனையாளர்கள்



| த.தர்மிதன் | சு.அட்ஜயன் | ர.சாதுர்சன் | சி.ஆர்நிகன் |
|---|---|---|---|
| 179 | 160 | 158 | 153 |

தரம் 5 இற்கு கல்வி கற்பித்த திருமதி சிலம்புச்செல்வி மகேஸ்வரன் ஆசிரியரையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 18மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ப.மா.ச, பா.அ.ச
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி,கரவெட்டி.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015



வலமிருந்து இடம்
திருமதி.பரமேஸ்வரி செல்வநாயகம் (அதிபர்)
செல்வி.ஜெயகுமார் சாருமதி - 183 (மாவட்டநிலை -28)
(வலய நிலை - 02)
செல்வன். செல்வநாயகம் தமீசன் - 169 ( மாவட்டநிலை - 310)
திருமதி. கௌசலா அனுச்செல்வன் (வகுப்பாசிரியர்)

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விவரம்

| | |
|---|---|
| செல்வி. ம.கஸ்மிலா | 146 |
| செல்வன். வி.பிரசன்னா | 150 |
| செல்வன்.பா.ஆருஷன் | 127 |
| செல்வன். ஆ.திருக்குமரன் | 102 |

மாணவர்கள் இந்தப் பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டிய **பாடசாலை அதிபருக்கும்** அயராது உழைத்த ஆசிரியர் திருமதி.**கௌசலா அனுச்செல்வன்** அவர்களுக்கும் நன்றிகள்ளயும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
பழைய மாணவர் அபிவிருத்தி சங்கம்

(சீ 13978)(11,15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வடமராட்சி கிழக்கில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,ஒக்.21

வடமராட்சி கிழக்கில் ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில் 18 கிராம அலுவலர் பிரிவிலும் 32 வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன. இதில் முழுமையான நிறைவு பெற்ற இரண்டு வேலைத்திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் கடந்த வாரம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்துள்ளார். வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். செம்பியன் பற்று தெற்கு கிராம கிராம சேவகர் பிரிவில் எட்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக் கப்பட்ட பொதுநோக்கு மண்டபமும், மாமுனை கிராமத்தில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உள்ள பிரார்த்தனை மண்டபம் ஐந்து லட்சம் ரூபா செலவிலும் நிர்மாணம் செய்யப்பட்டன.

இவ்வாறு நிறைவு பெற்ற இந்த இரண்டு வேலைத்திட்டங்களில் கட்டடத் தொகுதியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி, வடமாகாண சபை உறுப்பினர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ-17)

# விஜயதசமியை முன்னிட்டு விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.21

வீணாகான குரு பீடத்தின் ஏற்பாட்டில் விஜய தசமியை முன்னிட்டு வாகனங்களுக்கான பூசையும், வாகன சாரதிகளுக்கான மன ஒருமைப்பாட்டு வழிப்படுத்தலும் நாளை வியாழக்கிழமை சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களால் பெருமளவானோர் சாவடைவதுடன், பலர் பெரும் காயங்களுக்கும் உள்ளாகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் காலத்தில் விபத்துக்கள் அற்ற நிலை ஏற்பட விஜய தசமி அன்று மிகச் சிறப்பான முறையில் கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களுக்கான பூசையும் வாகன சாரதிகளுக்கான மன ஒருமைப்பாட்டு வழிப்படுத்தல் நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் வாகனச் சாரதிகள் வாகனங்களுடன் வருகைதந்து பிரார்த்தனையிலும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு வீணாகான குருபீடத்தின் ஸ்தாபகர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார். (ஐ)

சிறுப்பிட்டி மண்ணின்

## சாதனையாளரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்



சர்வதேச ரீதியில், இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுநலவாய அமைப்பு நாடுகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் பழுதூக்கல் விளையாட்டு நிகழ்வில் முதலாம் இடத்துக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்ற எம்

மண்ணின் மைந்தன் புகழ்பூத்த வில்லிசைக் கலைஞன் க.சத்தியதாஸ் அவர்களின் செல்வப் புதல்வன் விஸ்ணுகாந்த் அவர்கள் இப் பெருமைமிக்க சாதனையோடு, கல்விப்புலத்தில் மேலும் சாதனைகளை நிலை நாட்டி சிறப்புடன் திகழ சிறுப்பிட்டி கருணாகடாட்சி மனோன்மணித் தாயின் பாதங்களைப் பணிந்து பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வல்லையப்புலம்
அருள்மிகு ஸ்ரீ கருணாகடாட்சி மனோன்மணி அம்மன் தேவஸ்தானத்தினர்
சிறுப்பிட்டி மத்தி.

(64256)(11.1517)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015ஆம் ஆண்டிற்கான
"பிரதீபா பிரபா"
விருதினைப் பெற்ற எமது
பாடசாலையின் பகுதித்
தலைவரும் சிரேஷ்ட
ஆசிரியருமான
செல்வி.குணறஞ்சினி
தாமோதரம்பிள்ளை
(SLTS - I)
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம். (சி15972) (11.15)

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாக்கியராஜா பிரதீபன்
(வட பிராந்தியசிரேஷ்ட இணைப்பதிகாரி - இலங்கை சமூக பாதுகாப்பு சபை)





யாழ் மாவட்டத்தின்
இணைப்பதிகாரியாகவும்,
முல்லைத்தீவு, கிளிநொச்சி
மாவட்டங்களின் பதில்
இணைப்பதிகாரியாகவும்
கடமையாற்றி தற்போது வட
பிராந்திய சிரேஷ்ட
இணைப்பதிகாரியாகப் பதவி
உயர்வு பெற்றமையையிட்டு
மகிழ்ச்சியடைவதுடன் அவரது
பணி மேலும் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.
இலங்கை சமூக பாதுகாப்பு சபை
உத்தியோகத்தர்கள்
கிளிநொச்சி, முல்லைத்தீவு

(64231)(14.15)

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING

UNIVERSITY COLLEGE

## VACANCIES

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

- **Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)**in Building Services Technology, Construction Technology, Farm Machinery Technology, Mechatronics Technology , Production Technology (Mechanical & Manufacturing Engineering), Food Technology, Hospitality Management, Cosmetology
- **Demonstator**in Building Services Technology, Farm Machinery Technology, Food Technology, Mechatronics Technology and Production Technology
- **Lab Assistant** in Farm Machinery Technology, Food Technology and Mechatronics Technology

**1. LECTURER (PROBATIONARY)**

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

**OR**

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

**OR**

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

**AND**

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

**OR**

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

**AND**

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

**AND**

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

**OR**

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

**AND**

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Salary Scale**: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 -13 x790 – 8 x 1050 – 52895p.m
**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.

**2. SENIOR LECTURER- GR II**

**Qualifications:**

1. (i) Candidates shall possess the academic qualifications required for Lecturer (Probationary)

**AND**

(ii) A Master Degree obtained after a full-time course of study of at least two academic years (or an equivalent part-time course of study) with a research component by way of thesis/dissertation or a Doctoral Degree.

**OR**

(iii) Master degree of a minimum duration of 20 months with a substantial research component or Master Degree with at least 60 Carnegie Credit units with not less than 15 credit units of research by way of thesis/dissertation in the relevant field/ discipline or a Doctoral Degree.

**OR**

(iv) Professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka and experience in a recognized and mercantile establishment (which are not considered at the time of recruitment to the category of Lecturer (probationary) as will be approved by the Board of Governors of the University of Vocational Technology upon the recommendation of Board of Management of University College through the Admission, Accreditation and Quality Assurance Council of the University of Vocational Technology

**AND**

2. At least six (06) years' experience in one or more of the following:
   (i) Teaching at University Level or / Higher Educational Institution
   (ii) Professional experience in a recognized mercantile establishment
   (iii) Research relevant to his/her field of specialization in a recognized Institution
   (iv)Post Graduate Studies

**Salary Scale** : U-AC 3 (II) - 2006A-. Rs. 39,755 – 5 x 790 – 8 x 1050 – 52,895p.m
**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.

**3. ASSISTANT REGISTRAR**

**Qualifications:**

(i) A Degree with First or Second Class of a recognized University /Higher Educational Institute.

**OR**

(ii) A degree of a recognized University with a Postgraduate Degree /Postgraduate Diploma in Administration or Management of a recognized University/Higher Educational Institute.

**Salary Scale** : U-EX 1 2006A- Rs. 26,020 - 3X 585 - 21 X 645 – 41,320 p.m
**Age Limit** - 22 – 45yrs
**Selection Procedure**: Written competitive Examination & Interview.

**4. DEMONSTRATOR**

A Degree in the relevant filed

**Salary Scale** : U-AC-12006A Rs.21,370p.m (Fixed)
**Age Limit** - 22 – 45yrs
**Selection Procedure**: Through an Interview.

**5. LABORATORY ASSISTANT**

Persons who have sat for the G.C.E. (O/L) Examination and passed a minimum of 02 subjects

**AND**

National Vocational Qualification (NVQ) Level 4 in the relevant field.

**Salary Scale** :U- PL3- 2006A – Rs.15,650 – 10X140 – 10 X155 – 10X185 -12 X200 – 22,850p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure** Through a Trade test & Interview.

**6. MAINTENANCE TECHNICIAN**

(a) Having passed the G.C.E. (O/L) Examination in six subject in one sitting with credit passes for 04 subject including;
   (i)Sinhala/Tamil
   (ii)English Language
   (iii)Mathematics

(b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Papers' at the G.C.E.(A/L) Examination.

**AND**

(c) Not below National Vocational Qualification (NVQ) Level 5 in Electronics, Electrical, Multi Media, Instructional Material Development, Mechanical& ICT.

**Salary Scale** : U-MT-12006A Rs 16,535-7X155-11X185-10X245-13X320-26,265p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Written competitive Examination & Interview.

**Nature of Appointment:**

✓ Demonstrator - Temporary with entitlement to EPF & ETF. Period of appointment is limited to one year
✓ All Other Posts - Permanent with entitlement to EPF & ETF

❖ **Other Government Approved Allowances.**

- Specimen Application form and further details are available at**www.univotec.ac.lk.** Duly filled applications forms indicating academic and professional qualifications should have sent to **"Chief Executive Officer, University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **30th October 2015**.
- Desired **post applied** should indicate clearly on the top left hand corner of the envelope
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an**advance copy** to the address given above
- Only short listed applicants will be called for the written examination and or for the interview.

11.10.2015


(C/15979)(10.15.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் - குஞ்சுக்குளம் வீதி புதிய பாலம் விரைவில் பாவனைக்கு

மன்னார்,ஒக்.21

மன்னார்-குஞ்சுக்குளம் பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், குறித்த பாலத்தை மக்கள் பாவனைக்கு வழங்கி வைக்கும் முகமாக பரீட்சார்த்தமாக உபயோகத்துக்கு விடப்பட்டது. குறித்த நிகழ்வை மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசபிரிய நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரதிப்பணிப்பாளர் றியாஸ், முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர் மயூரன், மன்னார் வீதி அபிவிருத்தி திணைக்களத் தின் பொறியியலாளர் ரகு மற்றும் குஞ்சுக்குளம் உள்ளிட்ட அரச திணைக் களங்களின் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டுள்ளனர். இதற்கென இடர் முகாமைத்துவ அமைச்சால் 35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பால வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.



மன்னார்-மதவாச்சி பிரதான வீதியுடன் இணையும் குறித்த குஞ்சுக்குளம் வீதியில் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டிருந்த பாலம் தாழ்வாகக் காணப்பட்டதால் மல்வத் ஓயா பெருக்கெடுக்கும் காலங்களில் வீதிக்கு குறுக்காக வெள்ளம் ஊடறுத்து சென்று குறித்த வீதி முழுவதுமாக நீரில் மூழ்குவது வழமையாகும். இதனால் குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களும் நீரினால் சூழப்பட்டு குறித்த கிராமங்களுக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் துண்டிக்கப்படும் நிலையில் அந்தக் கிராம மக்களுக்கான உணவுகள் ஹெலிகொப்டர் மூலமாகவே வழங்கப்பட்டு வந்தன. இதனால் ஆண்டு தோறும் இடம் பெறும் வெள்ள இடரால் சுமார் 800 குடும்பங் கள் பாதிக்கப்பட்டு வந்தன.

இந்த நிலை தொடர்ந்து வந்த நிலையில் அந்தக் கிராம மக்கள் நெடுநாள்களாக மேற்கொண்டு வந்த வேண்டுகோளுக்கு இணங்க, வெள்ள இடரில் இருந்து குறித்த கிராமங்களைப் பாதுகாக்க இந்த வீதியில் அமைந்துள்ள பாலத்துக்கு அருகில் புதிய பாலம் ஒன்றை அமைப்ப தற்கு கடந்த வருடம் வேலைகள் ஆரம்பிக் கப்பட்டு தற்பொழுது நிறைவுபெற்றுள்ளன.

இந்த நிலையில் மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ளதால் அதற்கு முன்னர் குறித்த பாலத்தை வைபவரீதியாக திறந்து வைப்பதற்கு பரீட்சார்த்தமாக உபயோகத்துக்கு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றுண்டி நிலையத்தை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் திறந்து வைத்தார். தொடர்ந்து பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார். (ஐ)

## மன்னாரில் விபத்து

மதவாச்சி- மன்னார் வீதியில் நேற்றுக் காலை நடைபெற்ற விபத் தில் மீன் ஏற்றிச் செல்லும் குளிரூட்டும் வாகனம் ஒன்று உயிலங்குளம் கள்ளியட்ட காட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளாகியது. குறித்த வாகனம் மதவாச்சியில் இருந்து சென்று கொண்டிருந்த போது உயி லங்குளம் கள்ளியட்டகாட்டுப் பகுதியில் கட்டாக்காலி மாடு ஒன்று வீதியின் குறுக்காகப் பாய்ந்ததால், வாகனத்தின் சாரதி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வாகனம் வீதியை விட்டு விலகி பற்றைக் காட்டுக்குள் பாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

வாகனம் பற்றைகாட்டினுள் மாட்டிக்கொண்டதால் வாகனத்தைச் செலுத்திச்சென்ற சாரதி வாகனத்தில் இருந்து வெளியில் வரமுடி யாது பல மணி நேரம் வாகனத்துக்குள் ளேயே இருந்துள்ளார். இதனை அறிந்து கொண்ட ஊர் மக்கள் குறித்த வாகனத்தையும் வாகனத் தின் சாரதியையும் மீட்டுள்ளனர். விபத்தில் சிக்கிய சாரதி தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி உயிர்தப்பியுள்ளார். (ஐ)

## விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி,ஒக்.21

கிளிநொச்சியில் உள்ள தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்வதற்கான மதிப்பீடுகள் மாவட்ட கைத் தொழில் அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் மாவட்டத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்களிடமிருந்து கோரப்பட் டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் உரிய விண்ணப்பங்களை மாவட்டச் செயலகத்தில் பெற்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு மாவட்ட மாகாண தேசிய நிலைகளில் நடத்தப்படுமென்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.21

நெடுந்தீவில் ஆரம்பப் பிரிவு மாணவர்களை அதிக புள்ளிகள் பெறவைப்பதற்கான செயற்பாட்டுத்திட்டம் மாதாந்தம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்துக்கு அமைய நேற்று முன்தினம் நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் தரம் 3, தரம் 4 மாணவர்களுக்கான சுற்றாடல் பாடச் செயற்பாட்டுச் செயலமர்வு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் நெடுந்தீவில் உள்ள எட்டுப் பாடசாலைகளையும் சேர்ந்த 74 மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-7)

## ப.நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கு இயக்குநர் சபை தெரிவு

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ. கூட்டுறவுச் சங்கத்துக்கு இரு பெண்கள் ஓய்வுபெற்ற மூன்று பணியாளர்கள் உட்பட ஏழுபேர் கொண்ட இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ள னர். யாழ்.மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேஷ் தலைமையில் கடந்த சனிக் கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத் தில் கடந்த கால இயக்குநர் சபை உறுப் பினர் உட்பட இரு குழுக்களாக 14 பேர் போட்டியிட்டனர். இந்தத் தேர்தலில் மா.செல்வராஜா, ஆ.அப்புத்துரை , திருமதி முருகையா சிவநிதி, நா.துரைச்சாமி, திரு மதி இ.சுமதி, யோ.டயானந்தன், எஸ்.சுந் தரராஜா ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-115)


**வேலையாள்கள் தேவை**

இருபாலாருக்குமான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:
சாஜிராம்ஸ் தையலகம்
பேருந்து நிலையம் அருகில், சுன்னாகம்

**BUSINESS ENGLISH CLASSES**

ஆரம்பம்- விஜயதசமி அன்று
வங்கி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், நிதி நிறுவனங்களிலும் காப்பீட்டு நிறுவனங்களிலும் வேலை செய்பவர்கள் ஆகியோருக்கான வகுப்புகள்
தொடர்பு: 077 240 3135

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் அமைந்துள்ள தென்னை மரங்களுடன் கூடிய 8 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.
தொடர்பு : 077 886 3346

**கார் விற்பனைக்கு**

Suzuki , Celerio (Auto) NPCAG XXXX இலக்க முடைய வைத்தியரின் பாவனையில் உள்ள 2015 June பதிவு செய்யப்பட்ட glistening metallic grey நிறமுடைய கார் விற்பனைக்குண்டு. (4900km)
தொடர்பு: 076 885 7953 (64103)(11,15,16)

**தேவை**

நல்ல நிலையிலுள்ள DIO- HONDA- SILVER COLOUR MOTOR BIKE தேவை.
தொடர்பு : 021 221 7500
077 853 6808



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. INTERNATIONAL CERTIFICATES பெறலாம். வெளிநாடொன்றில் இருக்கும்போது
- பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகின்றோம்.

விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

**விதை உருளைக்கிழங்கு கொள்வனவுக்கான கேள்வி கோரல்**

யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து) 2015/2016 பெரும் போக செய்கைக்காக கேள்விகளைக் கோருகின்றது.

| இல. | பொருள் விவரம் | இனம் | அளவு | |
|---|---|---|---|---|
| 01 | விதை உருளைக்கிழங்கு | றெல்லசோடா | 125 m+ | 25 Kg பெட்டி5000 |
| 02 | விதை உருளைக்கிழங்கு | சசி | 40 m+ | 25Kg பெட்டி1600 |
| 03 | விதை உருளைக்கிழங்கு | அனோவா | 8 m+ | 50Kg பெட்டி160 |
| 04 | விதை உருளைக்கிழங்கு | செவிஒலா | 3 m+ | 50Kg பெட்டி 60 |

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் உள்ளடக்கிய தங்களால் வழங்கக்கூடிய இனம், அளவு,விலை, காலம் ஏனைய சலுகைகள் உள்ளடக்கிய மூடிய கூறுவிலையை தலைவர் யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாசம் சிட்கோ கட்டடத் தொகுதி,பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ 04.11.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டு கொள்கின்றோம்.

இ.தெய்வேந்திரம்
தலைவர்

தி.சதீஸ்குமார்
செயலாளர்
(64235)(12,15,17)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விழா இன்று

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் நவராத்திரி விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கக் கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் விசேட பூசை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன. (ஐ–17)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

சோமசுந்தரம் இராசையா

திதி:- வளர்பிறை நவமி

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளில் - நாம்
வாழ்கின்றோம்.

தோற்றம் : 29.12.1941

மறைவு: 11.11.2013

குடும்பத்தினர்
அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.


## ஐந்து பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கி வைப்பு

முல்லைத்தீவு,ஒக்.21

மாணவர்கள் மத்தியில் கல்வி வளர்ச்சியையும் வாசிப்புப் பழக்கத்தையும் அதிகரிக்கச் செய்வதற்காக வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஐந்து பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு வடமாகாண சபை நிதியிலிருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை வழங்கியுள்ளார். மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலைக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும், பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்துக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும், பாலி நகர் குமாரசாமி ஆரம் பப் பாடசாலைக்கு 15ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும், வழங்கப்பட்டுள்ளன. துணுக்காய் பிரதேசத்திலுள்ள கோட்டைகட்டிய குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும்,உயிலங்குளம் அரச தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல்களை கடந்த வியாழக்கிழமை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் வழங்கி வைத்தார். (ஐ–115)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 67 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு த.யசிந்தன் தலைமையில் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரனும், ஒன்றியத் தலைவர் ந. பிரபாகரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.யாழ். கிளைக்குட்பட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்கள் அன்றைய தினம் முழுவதும் தொழிலாளர் நிலையங் களை மூடி தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் த.யசிந்தன் தெரிவித்துள்ளார்.(ஐ–ரி6)

## மீள் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தால் 2015 ஆம் ஆண்டு 2 ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் வழங்குமாறும், மேலதிக விவரங்களுக்கு உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளு மாறும் உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (ரி6)

## வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிப்பு

சாவகச்சேரி,ஒக்.21

உலக விழிப்புலன் அற்றோரைக் கௌரவிக்கும் வகையில் அனுஷ்டிக்கப்படும் வெள்ளைப் பிரம்பு தினம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 15 ஆம் திகதி கைதடி விழிப்புலனற்றோர் தொழிற் பயிலகத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட உதவி ஆளுநர் லயன் வைத்திய கலாநிதி வி.தியாகராஜா கலந்து கொண்டார். இதன் போது ஏ- 9 வீதியிலிருந்து விழிப்புலனற்றோர் மேள வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டனர். (ஐ-9)

## மகாஜனாவின் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஒக்.21

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-422)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் செல்வி
தங்கம்மா நல்லதம்பி
(ஓய்வு நிலை அதிபர்)

தோற்றம் 02.01.1927

மறைவு: 21.09.2015

கடந்த 21.09.2015 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு செல்வி தங்கம்மா நல்லதம்பியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.10.2015) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

எமது குலவிளக்கின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அன்புவாசம்", அர்செடி,நீர்வேலி (64150)(11,15,17) குடும்பத்தினர்.



5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசையா கார்த்திகேசு
(இளைப்பாறிய வடமாகாண [illegible] பொறுப்பதிகாரி)

தோற்றம் 01.02.1939

மறைவு 15.11.2010

தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
என்றும் உம் நினைவுகளுடன் நாம்....

குடும்பத்தினர்.

30/2, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.



31 ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர் க. கணபதி (ஜெகபதி)

கடந்த 21.09.2015 சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் க.கணபதி அவர்களின் திடீர் மறைவையொட்டி நேரிலும் தொலைபேசியினூடாகவும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்கள், போசன உதவிகள் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபங்களைத்தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.10.2015) புதன்கிழமை பகல் 12 மணியளவில் இல.131, ஸ்டேசன் வீதி(பொற்பதி சந்தி) ,கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள

கஜன் திருமண மண்டபத்தில்

நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தொடர்பு: 077 256 5676

கொக்குவில். (64210) (14,15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாட்ஸ்-அப் குறுந்தகவல்கள் இனி கூகுள் ட்ரைவில்



அன்ராயிட் இயங்கும் தொடுபேசிகளில் வாட்ஸ்-அப் அரட்டை, குறுந்தகவல்கள், புகைப்படங்கள், காணொளிகள் ஆகியவற்றை கூகுள் ட்ரைவில் சேமித்துப் பாதுகாத்துக் கொள்ளலாம்.
அதோடு, வேறொரு புதிய சாதனத்துக்கும் அதை இடமாற்றம் செய்துகொள்ள முடியும். இந்தப் புதிய வசதி இன்னமும் சில மாதங்களில் நடைமுறைக்கு வரும். ஆகவே வாட்ஸ்-அப் செற்றிங்ஸ் பக்கத்தை அடிக்கடி பரிசோதியுங்கள்.
வாட்ஸ்-அப் நிறுவனமும் இதே தகவலைப் பகிர்ந்துள்ளது.
உங்களின் குறுஞ்செய்திகள் மற்றும் படங்களை, கூகுள் நிறுவனத்தில் சேமித்து வைக்கலாம். உங்களது அலைபேசி தொலைந்துவிட்டாலோ அல்லது நீங்கள் வேறு தொடுபேசிக்கு மாறினாலோ, உங்களின் சற் தகவல்கள் பத்திரமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

## புதிய அப்பிளிகேஷனில் அதிரடி வசதியை வழங்கும் யாகூ

தேடல் இயந்திர சேவை, மின்னஞ்சல் சேவை உட்பட மேலும் பல சேவைகளை வழங்கிவரும் யாகூ நிறுவனம், இந்த மாதம் தனது 18 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது.
இந்த நிலையில் அப்பிளின் ஐ.ஒ.எஸ், மற்றும் கூகுளின் அன்றோயிட் சாதனங்களுக்காக புதிதாக அறிமுகம் செய்யப் பட்ட அப்பிளிக்கேஷனில் புதிய வசதியைத் தந்துள்ளது.
யாகூ எக்கவுண்ட் கீ என அழைக்கப்படும் இந்த வசதியின் ஊடாக யாகூ மின்னஞ்சல் முகவரிகள் அல்லாத ஏனைய சில நிறுவனங்களால் வழங்கப்படும் மின்னஞ்சல் கணக்குகளையும் கையாளக்கூடியதாகக் காணப்படுகின்றது. இது தொடர்பான தகவல்களை உத்தியோகபூர்வமாக தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அந்த நிறுவனம் குறித்த வசதியை விளக்கும் காணொளி ஒன்றையும் வெளியிட் டுள்ளது.

## 2016ஆம் ஆண்டை ஆக்கிரமிக்கும் வினோத தொடுபேசிகள்



பல்வேறு தொழில்நுட்பங்களைத் தன்னகத்தே கொண்ட தொடுபேசிகளுக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்புக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் அடுத்த வருடம் சம்சுங் மற்றும் எல்ஜி நிறுவனங்கள் ஓ.எல்.இ.டி தொழில் நுட்பத்தை உடையதும் மடிக்கக்கூடியதுமான திரையைக் கொண்ட தொடுபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள் ளன.
இவற்றில் சம்சுங் நிறுவனம் ஸ்னாப் 820 செயலி உடையதும் பிரதான நினைவகமாக 3ஜ்பீ ரம் உடையதுமான தொடுபேசியை அறிமுகம் செய் யவுள்ளது.
இது தவிர அகற்ற முடியாத மின்கலம் மற்றும் நிலையான சேமிப்பு நினைவகம், மைக்ரோ எஸ்டி கார்ட் மூலம் அதிகரிக்கக்கூடிய நினைவகம் என்பவற்றைக் கொண்டதாகவும் இந்தத் தொடுபேசிகள் வடிவமைக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரிஸ்சந்திர வழங்கும் சிவப்பரிசி மற்றும் வெள்ளையரிசி இடியப்பம்

ஹரிஸ்சந்திர என்ற நாமம் மிகச் சிறப்பானதாகவும் முழுமையான உணவுடன் ஒத்ததாகவும் இருப்பதன் காரணமாக, சந்தையில் இது மறுக்கப்பட முடியாத வகையில் முன்னணி வகிக்கின்றது. பல விடயங்கள் மாறி விட்டன. ஆனால், நாம் மாறவில்லை. மிகச்சிறந்த பொருட்கள் சேர்த்து அன்புடனும் கரிசனையுடனும் பார்த்துப் பார்த்து பழைய பாரம்பரிய முறையில் இந்த இடியப்ப கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. ஹரிஸ்சந்திரவிடமிருந்து பெற்றுக் கொண்டதனால், அது இயற்கையும் ஊட்டச்சத்தும் மிக்க உணவு என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.




மேலதிக விபரங்களுக்கு,
இணையத்தளம்: www.harischan
www.facebook.com/harischandramills
தொலைபேசி: 011 2 685 734 / 041 2 224 701
ஈ-மெயில்: info@harischandramills.com

விலை - ரூ 100/- இலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீதான தடையை நீக்குவதற்கு நடவடிக்கை

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

நியூயோர்க், ஒக். 21
ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கு மாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உரிய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.
அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கு இடையிலான ஈரானின் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே குறித்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.



ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தம் குறித்துத் தொடர்ந்து இரண்டு ஆண் டுகளாக அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் பேச்சு நடத்தி வந்தன. இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தால் அந்த விடயம் முடிவுக்கு வந்தது. (ற)



தாய்லாந்தின் பூகட் தீவில் வருடாந்த திருவி...
சைவ உணவையே உண்பதை வழக்கமாகக்...
கன்னங்கள் துளைக்கப்பட்டு ஆயுதங்கள் ெ...

# நிலைப்பாடுகளை தெளிவுபடுத்துங்கள்

## பலஸ்தீன, இஸ்ரேல் தலைவர்களைக் கோருகின்றார் ஜோன் கெரி

நியூயோர்க், ஒக்.21
பலஸ்தீனின் ஜெருசலம் நகரில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் தமது நாடுகளின் நிலைப்பாடுகள் குறித்து பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் தெளிவுபடுத்த வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.
மெட்ரிட்நகரில்ஸ்பெயின்நாட்டுவெளிவிவகார அமைச்சர் ஜோஸ் மானுவல் கார்சியாவுடன் ஜோன் கெரி நேற்றுமுன்தினம் சந்திப்பொன்றை மேற்கொண்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



ஜெருசலத்தில் பலஸ்தீனியர்கள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு இடையில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அங்கு நாளுக்கு நாள் தாக்குதல்களும் மோதல்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு நாம் இடமளிக்க முடியாது. எனவே தமது நிலைப்பாடுகள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் மிக விரைவில் தெளிவான ஒரு விளக்கத்தை முன்வைக்க வேண்டும் - என்றார்.
ஐ.எஸ். தீவரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் முன்னெடுக்க வேண் டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜோன் கெரி அங்கு கருத்து தெரிவித்தார். (ற)

# 5ஆவது முறை...
# நண்டு உண்ணு...

நியூயோர்க், ஒக்.21
அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தி... நண்டு உண்ணும் வித்தியாசமான போ... குறித்த போட்டி கடந்த சனிக்கிழமை நடை... மாரத்தான் பகுதியில் உள்ள ஒரு உணவு ... காலப்பகுதி (சீசன்) தொடங்குவதால் கடந்த ... நண்டு உண்ணும் போட்டியை நடத்தி வருகி... இவ்வருடம் குறித்த போட்டியை நடத்தியுள்... ஒவ்வொரு மேசையிலும் பெரிய அளவி... பட்டிருக்கும். அவற்றை வேகமாக முதலி... என்பது போட்டியின் விதி. இம்முறை இடம்... முதல் முதியவர்கள் வரை 30 பேர் கலந்... இறுதியில் ஆரோன் என்பவர் 14 நிமிடத்... வெற்றிபெற்றார். அவருக்கு நிகழ்ச்சி ஏற்ப... பாராட்டினர்.

# அமெரிக்காவி...
# விமானம் மீது...

நியூயோர்க், ஒக்.21
அமெரிக்காவின் அதி நவீன போர் விமானமான எவ் -16 ஆப்கன் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
100 மில்லியன் டொலர் மதிப்புள்ள இந்த விமானம் ஆப்கனின் சயித் கரம் மாவட்டத்தில் உள்ள பக்தியா மாகாணத்தில் தாக்குதலுக்கு இலக்காகியது என்று தீவிரவாதக் குழுவொன்று தனது டுவீற்றரில் பதிவிட்டுள்ளது.
இந்தநிலையில் அந்தத் தகவலை அமெரிக்க இராணுவத் தளபதிகள் நேற்று...

று... இந்... ண... கப்... இந்... ன் ... சே... கின்... ன ... தன... போ... என்...



அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தின் போனிக்ஸ் நகரில் ஏற்பட்ட புழுதிப் புயலே இது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இந்தப் புழுதிப் புயல் 103 கிலோமீற்றர் [illegible] அதனால் அங்கு போக்குவரத்து உட்பட இயல்பு நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. (ற-ரி4)

### பிரேஸிலில் வெடிப்புச் சம்பவம்: 8 பேர் காயம்

பிரேஸிலில் பழமை மிக்கதும் -மிகப் பெரும் நகரமுமான ரியா டி ஜெனிரோவில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் ஒன்றில் எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர். சுமார் 50க்கும் மேற்பட்ட கட்டடங்கள்சேதமடைந்துள்ளன. உணவகம் ஒன்றிலேயே இந்த வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்த வெடிப்புச் சம்பவத்தை அடுத்து சுமார் 65 தீயணைப்பு வீரர்கள் மற்றும் 20 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் கிசிச்சை பெற்று வருகின்ற நிலையில் குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகிலுள்ள குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்புக்கருதிவெளியேற்றப்பட்டுள்ளனர். குறித்த விடுதியில் ஏற்பட்ட வாயுக் கசிவே இந்த வெடிப்புச் சம்பவத்துக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. (ற)



பிலிப்பைன்ஸைத் தாக்கிய கோப் சூறாவளி...
அங்கு பெய்த கடும் மழை காரணமாக ...
நிரம்பியுள்ளன. அதனால் நகரங்களுக்குள்...
கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





...திருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தத் தீவில் சீனர்கள் அதிகம் வாழ்கின்றனர். அவர்கள் இதனைத் தூய்மைப்படுத்தும் திருவிழாவாகக் கருதுகின்றனர். அதன்போது அவர்கள் ...மாகக் கொண்டுள்ளனர். கன்னத்தில் துளைகளை எற்படுத்தி அவற்றுள் நீண்ட ஆயுதங்கள் , பெரிய பொருள்களைச் செருகி இந்தச் சடங்கைச் செய்கிறனர். கோவில் தொண்டர்களினால் ...கள் செருகப்படுகின்றன. இந்த ஊர்வலத்தில் ஆண்களே அதிகம் பங்கெடுக்கின்றனர். (ற-ரி4)

## ...றையாக நடந்த ...ணும் போட்டி!

...ணத்தின் மாரத்தான் என்ற பகுதியில் ...ா போட்டியொன்று இடம்பெற்றுள்ளது. ... நடைபெற்றுள்ளது.

...ணவு விடுதி, ஒக்ரோபர் மாதத்தில் நண்டு ... கடந்த 4 ஆண்டுகளாக இந்த மாதத்தில் ...தி வருகின்றது. ஐந்தாவது முறையாகவும் ...த்தியுள்ளது.

... அளவிலான 25 நண்டுகள் வைக்கப் ... முதலில் சாப்பிட்டு முடிக்க வேண்டும் ... இடம்பெற்ற போட்டியில் இளைஞர்கள் ... கலந்துகொண்டனர்.

... நிமிடத்தில் 25 நண்டுகளை சாப்பிட்டு ...சி ஏற்பாட்டாளர்கள் பரிசுகளை வழங்கிப் (ற)

# எபோலா தொற்றுக்குள்ளான தாதியின் உடல்நிலை சீராகிறது

## வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன

லண்டன், ஒக்.21

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் சேவையில் ஈடுபட்டிருந்த வேளை எபோலா தொற்றுக்குள்ளான மருத்துவ தாதி போலின் கவெர்கியின் உடல் நிலை முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இந்தத் தகவலை லண்டன் குயின் எலிசபெத் பல்கலைக்கழக மருத்துவமனை வெளியிட்டுள்ளது.

36 வயதான கவெர்கி மருத்துவப் பணியில் ஈடுபட்டிருந்தபோது எபோலா தொற்றுக்கு உள்ளாகினார். அதன் பின்னர் சிகிச்சை பெற்றுமீண்டும்பணிக்குத்திரும்பியிருந்தார். அதன்பின்னர் அவர் மீண்டும் எபோலாத் தொற்றுக்கு உள்ளானார்.

தற்போது வைத்தியசாலையில் விசேட தனிப்பிரிவில் அவருக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கவெர்கியின் நண்பர்கள், உறவினர்கள் என 58 பேருக்கு 40 வகையான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி4)



## ...வின் நவீன ...து தாக்குதல்

...றுமுன்தினம் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் ஜெட் விமானத்தின் குண்டு வீசும் 2 'டிராப்' தாங்கிகள் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. இருப்பினும் விமான விமானத்தை பத்திரமாகத் தளத்தில் தரையிறக்கியுள்ளார். தாக்குதலின் போது விமானியும் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற)




...றாவளியால் 9 பேர் உயிரிழந்துள்ளனர். ...மாக ஆறுகளின் அணைக் கட்டுக்கள் ...க்குள் வெள்ளம் புகுந்துள்ளது. ஆயிரக் ...வெளியேறி வருகின்றனர். (ற-ரி4)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெருகிவரும் சிறுநீரகச் செயலிழப்பும்

## கட்டுப்பாடற்ற பரசிற்றமோல் குளிகையின் பாவனையும்



மருத்துவர்
சி.யமுனாநந்தா

இலங்கையில் சிறுநீரக செயலிழப்பு நோய்கள் வடமத்திய மாகாணத்தில் முதலில் அவதானிக்கப்பட்டது. இது 1991 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் இரு மடங்காக அதிகரித்தது.

மேலும் அது பொலனறுவை, மொனராகலை, பதுளை போன்ற மாவட்டங்களுக்கும் பரவியது. தற்போது சிறுநீரகச் செயலிழப்பு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் அதிகரித்துக் காணப்படுகின்றது.




பொதுவாக வயது முதிர்ந்தவர்களில் ஏற்படக்கூடிய இந்த நோய் இன்று சிறு குழந்தைகளிலும், 20 வயதினரிலும், 30 வயதினரிலும், 40 வயதினரிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்த நோய்க்கு ஏதுவான அடிப்படைக் காரணங்களாக விவசாய இரசாயன நச்சுக்கள் உணவுச் சங்கிலி வழியேயும் நீரின் ஊடாகவும் உடலில் சென்று தாக்கம் செலுத்தி இருக் கலாம்.

இது ஒரு பொது வெளிப்படையாக அமைந்தாலும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள சகல மக்களும் இந்தநோயால் பாதிக்கப்படவில்லை. ஆனால் எல்லா வயதினரும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் எல்லா வயதினரும் கட்டுப்பாடின்றி பயன்படுத்தும் மருந்து எது என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு கிடைக்கும் விடையாக, எல்லாக் கடைகளிலும் விற்கப்படும் மருந்து, மருத்துவரின் ஆலோசனை இன்றி பயன்படுத்தப்படும் மருந்து, வைத்தியசாலைகளில் அதிகமாக வழங்கப்படும் மருந்து என்ற வகையில் பரசிற்றமோல் அல்லது பனடோலை நோக்க வேண்டி உள்ளது.

பரசிற்றமோல் சிறுநீரக நோயை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கு ஆம் என்ற பதில் பலருக்கும் அதிர்ச்சியாக அமையலாம். ஆனால் அது உண்மை.

சாதாரணமாக காய்ச்சலின்போது உடல் வெப்பநிலையை தணிக்க 10 - 20 My/ml செறிவில் பரசிற்றமோல் பயன்படும். ஆனால் இந்தச் செறிவு 300 Mg/ml ஆகக் கூடின் 50 வீத சிறுநீரகக் கலங்கள் இறந்துவிடும்.

மேலும் பரசிற்றமோலின் அனுசேபத்துக்குத் தேவையான நொதியங்கள், விவசாய நச்சுப் பொருள் பாவனை உள்ள இடத்தில் செயலிழக்கும் சாத்தியம் அதிகம். இந்த நிலையில் பரசிற்றமோல் , சிறுநீரகத்தை பாதிக்கும் தன்மை அதிகம். மேலும் பரசிற்றமோலின் இடைவிளைவாக உருவாகும் Phenacetin கடினமான சிறுநீரக நஞ்சுத்தன்மை உடையது. இதனைப் பல நாடுகள் தடை செய்து உள்ளன.

> பரசிற்றமோலின் அனுசேபத்துக்குத் தேவையான நொதியங்கள், விவசாய நச்சுப் பொருள் பாவனை உள்ள இடத்தில் செய லிழக்கும் சாத்தியம் அதிகம். இந்த நிலையில் பரசிற்றமோல் , சிறுநீரகத்தை பாதிக்கும் தன்மை அதிகம்.

எனவே பரசிற்றமோல் பாவனையை நாம் மீள் பரிசீலனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. குறிப்பாக சிறுநீரக செயலிழப்பு அதிகம் நிகழ்கின்ற இடங்களில் பரசிற்றமோல் பாவனையை கட்டுப்படுத்துதல் அவசியம். நாம் வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் பரசிற்றமோல் உபயோகிதலைத் தவிர்த்தல் வேண்டும்.

# யட்டகம்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்துக்கு புலமைப்பரிசில்கள் அன்பளிப்பு

**சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் தமது நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கையின் ஓர் அங்கமாக யட்டகம்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்திற்கு கடந்த மாதம் 28ஆம் திகதி இடம்பெற்ற புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டது.**

கடந்த பல பத்து வருடங்களுக்கு முன்னர் பிரதேச ஆய்வாளரான பாஹியன் என்ற சீனத் தேரர் ஒருவர் இந்த பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் அவரது பெயரான பாஹியன்கல என்ற பெயர் இந்தக் கிராமத்துக்கு வந்துள்ளது. குறித்த பகுதியில் தற்போது சீன அரசு வீட்டுத் திட்டமொன்றை மேற்கொண்டு இந்த பகுதியிலுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த தேரரது பல நினைவுச் சின்னங்கள் இந்த கிராமத்தில் காணப்படுவதனால் யட்டகம்பிட்டி வித்தியாலயத்திற்கு இந்த நிறுவனம் ஒரு கட்டடத்தை அமைத்து அன்பளிப்புச் செய்துள்ளதுடன் இது இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள நீண்டகால உறவினை வலுப்படுத்தும் வகையில் அமைந் துள்ளது.

இலங்கை - சீனாவுக்கு இடையிலுள்ள தொடர்ச்சியான உறவினை நினைவுகூரும் விதமாக சீன அரசின் கீழுள்ள சீன இயந்திரப் பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் யட்டகம்பிட்டி வித்தியாலய வளாகத்துக்குள் ஞாபகப் பலகையொன்றும் அமைக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டதுடன். அந்த பாட சாலையின் அதிபர் இந்திரஜித் ஜனக்க சேனாதீர உள்ளிட்ட ஆசிரியர்களும் மாணவ மாணவிகளுடன் முன்னாள் கல்விப் பணிப்பாளர் கே.டீ. [illegible] பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான ஏ.உதம்புர்வல ஆசியோ ரும் கலந்து கொண்டனர்.




இந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் குழுவினால் கடந்த இறுதித் தவணையின் போது சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களில் மூன்று சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து 10,000 ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் ச்சியேன் ஹாஜென், "எமது நிறுவனம் [illegible] நிறுவனமாகும். [illegible] நாடுகளில் பல்வேறு [illegible] திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. [illegible] வகையில் இலங்கை ஒரு முக்கிய நாடாகும். இதனால் இலங்கையின் மின்சாரம் மற்றும் நீர்வளங்கள் மேம்பாடு தொடர்பில் பல்வேறு விதங்களில் கூடுதலான பங்களிப்பை நாம் வழங்கி நாடு என்ற ரீதியில் அபிவிருத்தியை நோக்கிய பயணத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின் றோம்". எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யட்டகம்பிட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் கருதுகையில், இவ்வாறான அடிப் படை வசதிகள் குறைந்த மற்றும் குறைந்த வருமானம் பெறும் பாடசாலைகளுக்கு உதவி [illegible] சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு தனது [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி விவசாயிகளின் ஆதங்கம் நிறைவு செய்யப்பட வேண்டும்

வடமாகாணத்தில் பொதுச்சந்தைகளை முதலமைச்சரின் கீழ்வரும் உள்ளூராட்சி அமைச்சின் நிர்வாகத்தில் செயற்படும் பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் நிர்வகித்து வருகின்றன. முக்கியமான ஒரு வருவாயைப் பெறும் ஒரு வழிமுறையில் பொதுச் சந்தைகளின் மூலம் விவசாய விற்பனைப் பொருள்களின் மீது வரி வசூலிக்க வேண்டியது உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள சபைகளின் முக்கிய பணியாகும். இதனால் பெருந்தொகையான வருவாய் விவசாயிகளிடமிருந்து பெறப்படுகிறது. இவ்வாறான வருமானத்தை தரகர், ஒப்பந்தகாரர் மூலம் பொறுப்பற்ற வழியில் பெறக்கூடாது. உள்ளூராட்சி சபைகளுக்கு வருவாயைப் பெறவேண்டும் என்பதுதான் குறிக்கோளாக இருக்கிறதாகக் கருத வேண்டியுள்ளது. 1980க்கு முன்னர் வடபகுதி சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து விற்பனைப் பொருள்களுக்கான வரியை நேரடியாக சபைகளின் வருமான வரி அறவிட்டார்கள், வசூலித்தார்கள். கிளிநொச்சி, சுன்னாகம், மருதனார்மடம், சாவகச்சேரி சந்தைகளில் நான்கு பக்க வாசல்களிலும் வரி அறவிட்டார்கள் பொருள்களை, தராசில் எடைபோட்டு உரிய வரியை அறவிட்டார்கள். அப்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை நிர்வாகம் செயற்பட்டது. கூடுதலான வருமானமும் சபைகளுக்குக் கிடைத்தது. போர்க்காலச் சூழ்நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அந்தக்கால வருவாய்த்துறை நேரடியாக பணியாளர்களை அமர்த்தி வரி அற விட்டது. அந்தக் காலத்தில் பொருள்களின் கழிவு நடைமுறை கிழங்கு வகைப் பொருள்களுக்கு மட்டும் நடைமுறையில் இருந்தது. மண், ஈரலிப்புத் தன்மைக்கு ஏற்ப அறவீடு செய்யப்பட்டது. யாழ். மாவட்டத்தில் பிரதேச சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக நடைமுறை இருக்க வில்லை. ஆகவே, பிரதேசசபைகள் நிர்வாகச் சுமையைக் கருத்தில் எடுத்து உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி பெற்று, சந்தைகளை குத் தகைக்கு விட்டு வருமானத்தைப் பெறுகின்றன. சபைகள் நேரடியாக வரி அறவீட்டுக்கென பணியாளர்களை நியமித்து நடைமுறைப் படுத்துவதனூடாக வடமாகாண சபை இரண்டா யிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக் கூடியதாய் இருக்கும். இந்த நடைமுறையை பிரதேசசபைகள் நடைமுறைப்படுத்த வட மாகா ணசபை உடன் நடவடிக்கை மேற்கொள்வத னூடாக விவசாயிகள், உற்பத்தியாளர்கள், நுகர்வோர் பயன்பெறக் கூடியதாக இருக்கும் என்பது உறுதி. பிரதேசசபைகளில் வரி மேற் பார்வையாளர்கள், அறவீட்டாளர்கள் என்ற பணிநிலைகள் நடைமுறையில் இருக்கிறது. தற் போது சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் தராசுடன் ஒரு சி.ஆர். கொப்பியில் தங்கள் தேவைகளுக்காக பதிந்து பணத்தைப் பெற்று வருகின்றனர். விவசாயிகளுக்கு வரி அறவீட்டுக்கான பற்றுச்சீட்டு வழங்கப் படுவதில்லை. தரகர்கள் விவ சாயிகளிடமிருந்து பொருள்களை எடுத்துச் சென்று ஒப்பந்தகாரர் தராசில் போடுகின்றனர். அவர்கள் கூறுவதுதான் நியாயமாக இருக்கிறது. 2009க்கு முன்னர் நெடுங்கேணி விவசாய உற்பத்தியாளர் சங்கம் அந்தப் பகுதி விவசாய உற்பத்திகளை வாகனங்கள் மூலம் கிளிநொச்சி சந்தைக்கு கொண்டு வந்து பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட உழவர் சந்தையில் சுதந்திரமாக விற்பனை செய்து வந்தது. இதற்கு அப்போது யு.என்.டி.பி. அனுசரணை வழங்கியது குறிப் பிடத்தக்கது. எனவே, மாகாணசபையும் அதன் கீழ்வரும் உள்ளூராட்சி அமைச்சு நிர்வாகமும் மிகுந்த அர்ப் பணிப்புடன் விரைந்து செயற்பட்டு வடபகுதி விவசாயிகளின் ஆதங்கத்தை நிறைவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

*சி.கி.ஆறுமுகம்*
*விவசாயியும், சமூக செயற்பாட்டாளரும்*

# தமிழினம் என்றும் இலவு காத்த கிளிதானா?

மனித உயிர்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கவேண்டிய ஐ.நா.சபை முள்ளிவாய்க் கால் பேரவலத்தின்போது கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அமெரிக்காவும் இந்தியாவும் இந்த இன அழிப்பின் முக்கிய பங்காளிகளாக செயற்பட்டவர்கள். பயங்கரவாத முத்திரை குத்தி கொடிய போருக்கு துணை போன வர்கள் எம் இனத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆக்கபூர்வமாக எதுவும் செய்யவில்லை. இனியும் செய்யப் போவதில்லை. ஒவ்வொரு வருடமும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றுவதுடன் இவர்களின் கதை முடிந்து விடுகிறது. ஆட்சிப் பொறுப்பில் இருந்து மகிந்தவை இறக்குவது மட்டுமே இவர் களின் குறியாக இருந்தது. இதற்கு நாங்களும் துணை புரிந்தோம். முடிவு அமெரிக்காவுக்குச் சாதகமான மைத்திரி அதிகாரத்தில் இருக்கின்றார். இவரால் தமிழருக்கு ஏற்பட்ட நன்மை என்ன? ஆயிரக்கணக்கான எம் உறவுகள் சொந்தக் காணிகளை இழந்து அடுத்தவர் வீடு களிலும் அகதி முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் துயர் துடைக் கும் சிந்தனை மைத்திரிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. படைகளின் செயற்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்ல முடியாது. குறிகாட்டுவான் படகுத்துறையிலும் கூட படையினரின் அடாவடித்தனம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த இலட் சணத்தில்தான் ஆட்சி மாற்றம் இருக்கின்றது. குற்றவாளிகளைப் பாதுகாப்பதே இவர்களின் குறி.




நிலைமை இவ்வாறு இருக்க எமது தலைமைகள் மௌனம் காப்பது வேதனை தருகின்றது. வலியைச் சுமந்தவர்கள், சுமப்ப வர்கள் நாங்களே. எனவே மௌனம் காப்பது பொருத்தமானதல்ல.

*ப.யேசுபாதம், மாயவனூர், வட்டக்கச்சி*




நன்றி: மவ்பிம

# ஏவலாளி ஒருவர் முடிவுகள் வேறு வேறு

சாட்சியங்கள் எதுவுமற்ற போரை நடத்தி முடித்த பெருமையில் மகிந்த அரசு வெற்றிக் கொண் டாட்டங்களைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. தமிழ் மக்கள் பொருமிக் கொண்டிருந்தனர். தங்கள் உறவுகளின் சாவுகளை எந்தக் கடவுள்களும் தடுக்க வில்லை, ஆகக் குறைந்தது சாகடிக்க உத்தரவிட்டவர்களையாவது தண்டிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் சாட்சிகள் இல்லை என்ற பெருமிதத்தில் இருந்த அரசுக்கு, வயிற்றில் புளியைக் கரைத்தது போன்று ஓர் ஆவணப் படம் வெளிவந்தது. சனல் - 4 தொலைக் காட்சி 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற முதலாவது ஆவணப் படத்தை வெளியிட்டது. ஆவணப் படம் வெளிவந்ததுதான் தாமதம், இலங்கை அரசு குய்யோ முறையோ என்று அலறியடித்துக் கொண்டு அந்த ஆவணப்படத்தை மறுத்தது.

அது போலியான ஆவணப் படம் என்று அறிக்கை விட்டதுடன் மாத்திரம் நிற்காமல் அதனையும் தாண்டி, சனல் - 4 ஆவணப் படத்தில் தோன்றிய ஒன்றிரண்டு முகங்களை வைத்துக் கொண்டு தானும் ஓர் ஆவணப் படத்தை வெளியிட்டது. இதே காலத்தில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று தனது விசாரணைகளை நடத்தி முடித்து அறிக்கை வெளியிடத் தயாராக இருந்தது.

அந்த ஆணைக்குழு தனது ஏவலாளிகளைத் திருப்திப் படுத்த, சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப் படம் பொய்யானது என்பதை தன்னுடைய பரிந்துரையில் பக்கம் பக்கமாகச் சொல்லியிருந்தது. அதனை விட, அந்த ஆவணப் படத்தின் ஒவ்வொரு கூறுகளையும் ஆராய்ந்து பொய்யென்று சொல்லியிருந்தது.

இவையெல்லாவற்றையும் எங்களில் பலர் மறந்தும் விட்டோம். இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டு அதே மகிந்த ராஜபக்ச இன்னொரு ஆணைக்குழுவை நியமித்தார். ஆணைக்குழுக்கள் நியமிப்பது ஒன்றும் ஜனாதிபதிகளுக்கு புதியவையும் அல்ல, புதினமானவையும் அல்லவே.

அந்த ஆணைக்குழுவும் விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்தது. அந்த ஆணைக்குழுவுக்கு 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மேலதிக பொறுப்பொன்றும் வழங்கப் பட்டது. அதாவது போரின் இறுதிக் கட்டத்தில் நடை பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்யுமாறும் மகிந்தவினால் பணிக்கப்பட்டது. அதற்கமைய அந்த ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டது.

மகிந்தவின் காலத்தில் சில மாதங்கள் விசாரணை மேற் கொண்டாலும், மைத்திரியின் காலத்திலேயே அந்த ஆணைக்குழு தனது விசாரணையை முடித்து அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில், சனல் - 4 ஊடகத்தில் இலங்கையின் கொலைக் களங்கள், போர் தவிர்ப்பு வலயம் மற்றும் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்ட ஒளிப்படம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நம்பக் கூடியவையாக உள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மகிந்தவின் காலத்தில் தனது பரிந்துரைகளை சமர்ப்பித்த சி.ஆர்.டி.சில்வா (இப்போது உயிருடன் இல்லை) ஆணைக்குழு எந்த விடயத்தை பெரும் பிரயத்தனப் பட்டு மறுத்து - மறுதலித்து - பொய்யென்றுரைத்ததோ, அதே விடயத்தை மைத்திரி காலத்தில் பரிந்துரைகளை சமர்ப்பித்த மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு உண்மைத் தன்மை உடையனவாக இருக்கலாம் என்று சொல்லியிருக்கின்றது. இதனூடாக இலங்கையின் நீதியை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். மக்ஸ்வெல் பரணகம கூட, உண்மைதன்மை உடையவையாக இருக்கலாம் என்றுதான் சொல்லியிருக்கின்றார் என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். ஆனாலும், உண்மை எப்போதும் தண்ணீரில் இருக்கும் பந்தைப் போன்றது. எவ்வளவுதான் அமுத்தி வைத்திருந்தாலும் அது தண்ணீரின் மேல் வந்தே தீரும். அதேபோன்று இலங்கையின் இறுதிப் போரில் நடந்த சம்பவங்களையும் எப்படி மூடிமறைத்தாலும் அவையும் வெளியில் வந்தே ஆகும்.

நீதியான போர்க் குற்ற விசாரணைகள் இடம் பெறுமாயின் போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மைகள் வெளிவந்தே தீரும். இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று சனல்-4 ஊடகத்தின் ஒளிப்படங்கள் உண்மைத் தன்மை கொண்டதாக இருக்குமென்று கூறியுள்ள நிலையில் பக்கச் சார்பில்லாத விசாரணையொன்று இடம் பெறுமாயின் குற்றம் புரிந்தவர்கள் தப்பித்துக் கொள்ளவே முடியாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கலப்பு நீதிமன்ற யோசனை சபையேறும் வாய்ப்பு வருமா?

**நா**ட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட போர்க் குற்றங்களை விசாரித்து, அவற்றில் சம்பந்தப்பட்டிருந்த தரப்பினருக்குத் தண்டனை கள் வழங்கப்பட வேண்டும். அதற்கெனக் கலப்பு நீதிமன்றம் ஒன்றை நிறுவியாக வேண்டும்.

மேற்கண்ட சிபார்சைப் பரிந்துரைத்து உள்ளது, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்திய, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு.

வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரின் போது, அதன் இறுதிக் கட்ட வேளையில், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றமையை நம்புவதற்கான ஆதாரங்கள் உள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதாம்.

ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதனை நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கவும் ஏற்பாடாகி இருந்தது.

உயர் நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூவர் கொண்ட ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2013ஆம் ஆண்டில்- அது உருவாக்கப்பட்டது.

2014 ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கும் அதற்கு ஆணை வழங்கப்பட்டிருந்தது.

இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில், போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் மேற்கொள்ளப்பட்டன என்று, நம்புவதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும், (பிந்திய) பிரஸ்தாப அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏதுவாக கலப்பு நீதிமன்றமே உகந்த ஒன்றாக அமையும் என்றும் அறிக்கையில் பரிந்து உரைக்கப்பட்டுள்ளதாக, சாடைமாடையான தகவல் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எங்கள் நாட்டின் சட்ட வரையறைகளுக்கு முரண்படாத வகையில், விசாரணை மன்றம் ஒன்றை அமைத்து, குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் அறிக்கையில் ஊன்றித் தொட்டுக் காட்டப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதேவேளை-

மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு, தனக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவற்றுக்கு இதுவரை தீர்வு எதனையும் காணவில்லை என்று கடந்த வாரத்தில் அறிவித்திருந்தது.

இதுவரை தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்திருந்தன.

ஆணைக்குழுவின் அதிகாரம் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வந்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் காணாமற்போனோர், காணாமற் போகச் செய்யப்பட்டோர் விவகாரம் பூதாகரமாக மாறி, அவர்களின் வரவைத் தங்கள் இதயங்களில் இருத்தியவாறு--

அல்லும் பகலும் அனவரதமும் எதிர்பார்த்து ஏங்கும் பெற்றோர்களினதும் உறவுகளினதும் நிலைமையை எழுத்தில் வடிக்க இயலாது.

சிறுதுளி மனிதாபிமானமோ, மனித நேயமோ இல்லாத 'இராட்சதப் போக்கில்' அரசும் அதன் அதிகாரிகளும் காலத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கொள்ள இயலாத இன்னல்களுடன், இதனையும் ஒன்றாகச் சேர்த்துப் புதிய அரசும் புலுமாசு விடும் போக்கு மேலெழுகிறது; ஆக்கபூர்வமான செயற்பாடு எதனையும் காணோம். இலங்கையில் தமிழராகப் பிறந்த குற்றத்துக்கான தண்டனைகளில் இதுவும் ஒன்றா.....?

# தமிழ் மக்களுக்கான தீர்வு எவ்வாறு அமையப் போகின்றது?

மு.ஈழத்தமிழ்மணி



**பொ**துத்தேர்தலுக்குப் பின்னர் நாட்டின் தேசிய அரசானது தமிழர்களின் பிரச்சினைகளை தட்டிக்கழிக்க முற்பட்டுள்ளது. மைத்திரி ஆட்சியில் தமிழ் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ வழியேற்படுமென நம்பியிருந்தாலும் தற்போது அவர்கள் நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் வாக்குகளே ரணிலும் – மைத்திரிபால சிறிசேனவும் ஆட்சியை பலமாகக் கொண்டு நடத்துவதற்கு முக்கிய காரணமாகவுள்ளன. தமிழ் மக்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர் என்பதை மனம் திறந்து சொல்லுகின்ற நாட்டின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி தமிழ் மக்கள் மத்தியில் பலவிதமான விமர்சனங்களைக் கொண்டு வந்துள்ளது.

தற்போதைய தேசிய அரசெனக் கூறப்படுகின்ற நல்லாட்சிகூட முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவின் எதேச்சாதிகாரப் போக்கையே பின்பற்றுவதாகத் தெரிகின்றது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை தேசிய அரசானது செவிமடுப்பதாகத் தெரியவில்லை. நியாயமான கோரிக்கைகளை தேசிய அரசு கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கைகளைத் தொடர வேண்டும். காலதாமதப்படுத்துவது என்பது மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பது மைத்திரி அரசு அறியாததொன்றல்ல.

மைத்திரி அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சரான விஜயதாச ராஜபக்ச தமிழ் அரசியல் கைதிகள் என எவருமில்லை வேறுகுற்றங்களைச் செய்தவர்களே சிறையிலுள்ளனர் என்று தெரிவித்திருந்தார். தமிழ் அரசியல் கைதிகள் தங்களை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யக்கோரி கால வரையறையின்றி உண்ணா நோன்பை மேற்கொண்டனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் செயலாளர் நாயகம் செய்யித் அல்ஹுசெயின் அறிக்கை ஆகியவற்றில் அரசியல் கைதிகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ள விடயத்தையும் தாண்டி நீதி அமைச்சர் இவ்வாறு கூறியிருந்தமை தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தையுண்டாக்கியது.

மகிந்த அரசின் காலத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுவிக்கக்கோரி சிறைகளில் உண்ணா நோன்பு இருந்த காலங்களில் அப்போதைய அமைச்சர்களும், சிறைச்சாலை மேலதிகாரிகளும் உண்ணாவிரதத்தைக் கைவிட்ட பின்னரே கைதிகள் சம்பந்தமான முடிவுகளை சட்டரீதியாக எடுப்போமென தெரிவித்திருந்தனர். உண்ணாவிரதம் இருந்த கைதிகள் மகிந்த அரசு காலத்தில் பல தடவைகளில் தாக்கப்பட்டிருந்தனர். இருவர் சித்திரவதைக்குள்ளாகி பின்னர் உயிரிழந்தனர். அடக்கு முறைக்குள் நசுக்கப்பட் டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மைத்திரி ஆட்சியிலும் தங்களுக்கு விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் மீண்டும் உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசு அளித்த உறுதிமொழிக்கு ஏற்ப பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தை நீக்குவதனூடாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ் அரசியல் கைதிகளின் உண் ணாவிரதப் போராட்டத்துக்கு மத்தியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி ஆட்சியில் வடமாகாணத்தில் உள்ள தேசிய அரசில் அங்கம் வகிக்கின்ற முக்கிய அமைச்சர் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காடுகளை அழித்து முஸ்லிம் மக்களைக் குடியேற்றுகின்ற நடவடிக்கைகளும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சில தமிழ் இளைஞர்களும் படைத்தரப்பினரால் விசாரணை செய்யப்படுகின்ற சம்பவங்களும் மீண்டும் தொடருவதற்கான வகையில் மகிந்தவின் ஆட்சியைப்போல் தொடருகின்றன என்பதை அண்மைக்கால நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

படையினர் கிளிநொச்சி – பூநகரிப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான பரமன்கிராய், பூநகரியில் உள்ள 16 ஏக்கர் நிலத்தை தங்களது படை நடவடிக்கைகளின் தேவைகளுக்காக மக்களின் அனுமதியின்றி ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். காணிகளைச் சுவீகரிக்கின்ற நடவடிக்கையின் ஆரம்பமாக 13ஆம் திகதி காணியை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் முயற்சி மேற்கொண்டபோது காணி உரிமையாளர்களின் கடும் எதிர்ப்பால் அது முறியடிக்கப்பட்டது. இரண்டாவது தடவையாகவும் காணிகளை அளவிடுகின்ற பணியை மேற்கொள்ள முற்பட்டபோது அதுவும் தோல்வியில் முடிந்திருந்தாலும் மீண்டும் காணி சுவீகரிப்பு முயற்சி இடம்பெறலாம். இந்த விடயத்தில் படைத்தரப்பு உறுதி யாகவுள்ளது. அரசின் மறைமுக ஆதரவுடன் இது நடைபெறுகின்றதா? என காணி உரிமையாளர்களால் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் கொத்தம்பியாக் கும்பத்தில் உள்ள 600 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம் மக்கள் குடியேற்றப்பட்டு வருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனால் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு அரச அதிபருக்கு தெரியாமல், பிரதேச செயலாளரின் அனுமதி இல்லாமல், முல்லைத்தீவில் சில இடங்களில் மீள் குடியேற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மகிந்த ஆட்சியின் போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல ஏக்கர் காணிகள் அரசின் ஆதரவோடு அமைச்சரின் முக்கியஸ்தர் ஒருவரால் அழிக்கப்பட்டு அவரது ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. அமைச்சரின் செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகாரங்களை ஒருசிலர் கையில் எடுத்துள்ளதால் பலவிதமான பிரச்சினைகள் உருவாகியுள்ளதாகவும், மாவட்டத்தின் அரச அதிகாரிகளுக்குத் தெரியாமல் எவ்வாறு காடுகளை அழித்து மீள்குடியேற்றம் செய்யமுடியும் எனவும் சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

காடழிப்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவ டிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரி முன்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்தும் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரியால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாதா? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மகிந்த ஆட்சியின் செல்வாக்குடனும், அதிகார பலத்துட னும் சில அரசியல்வாதிகள் வடபகுதியில் மேற்கொண்ட மோசடி நடவடிக்கைகள், காடழிப்புக்கள் மைத் திரி ஆட்சியிலும் தொடருவதற்கு மறைமுக அங்கீகாரம் வழங்கப்பட் டுள்ளதா....?

நல்லாட்சியில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் வழக்கு சம்பந்தமாக அழைத்துள்ளனர்.

மைத்திரி ஆட்சியிலும் தமிழர்கள் மீதான விரோதப்போக்கு தொடர்வது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு நேர்மாறானதாகவே அமைந்துள்ளது. மைத்திரி அரசு பதவிக்கு வந்த காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீது நல்லெண்ணத்தை ஓரளவு வெளிப்படுத்தியிருந்தாலும் அது முழுமை பெறவும் இல்லை. தமிழ் மக்கள் நம்பிக்கையடையவுமில்லை.

வலி.வடக்கு மீள்குடியமர்வு சம்பந்தமாக பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு படையினர் மறுத்து வருவதாகக் கூறப்படுகின்றது. 1000 ஏக்கர் காணிகள் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தாலும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு சம்பந்தமாக அசமந்தப் போக்குடனேயே மைத்திரி அரசு செயற்படுகிறது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணி சுவீகரிப்பு, காணாமற் போனோர் விவகாரம் போன்றவைகளே அரசுக்கு தொடர்ந்து தலையிடி கொடுக்கின்ற பிரச்சினைகளாகும். தமிழ் மக்களும் இந்தப் பிரச்சினையை என்றும் கைவிடப் போவதில்லை ஒருபோதும் கைவிடவும் மாட்டார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மைத்திரி அரசு நல்ல முடிவை எடுத்தேயாக வேண்டும். இல்லையெனில் இந்தப்போராட்டம் தொடர்ந்து பெரும் விஸ்வரூபமாக மாறும்.

மகிந்த தரப்பினர் இந்தப் போராட்டங்களை நசுக்கியதுபோல், ஒடுக்கியதுபோல், தேசிய அரசால் ஒடுக்க முடியாது. இன்றைய தமிழ் மக்களது நியாயமான போராட்டங்களுக்கு முடிவு ஒன்று ஏற்பட்டே ஆக வேண்டும். பதிலளித்தாக வேண்டும். நல்லாட்சியின் பதில் தமிழ் மக்களுக்கு என்னவாக அமையும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
**ரெங்கன்**

## டுபாய் வங்கியில் மேலும் ஏழுபேருக்கு இரகசியக் கணக்கு

# இளம் அரசியல்வாதியின் தம்பியும் அதில் ஒருவர்

# விவரங்கள் விரைவில் அம்பலமாகும்



டுபாயிலுள்ள எமிரேட்ஸ் தேசிய வங்கியில் இலங்கையின் முன்னாள் மிக முக்கியமான பிரமுகரின் மகனாகிய இளம் அரசியல்வாதியின் இரகசியக் கணக்கில் பணம் வைப்பில் இடப்பட்டிருப்பது பற்றிய தகவல் ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பத்து நாள்களுக்கு முன்பே தற்போது அரசின் உயர் நிலையிலுள்ளவர்களுக்கு கிடைத்திருந்தது. அந்த இரகசியக் கணக்கின் விவரங்களைப் பெற்று சம்பந்தப்பட்ட நபரை பகிரங்கப் படுத்துவதானது, தேர்தல் சமயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியவர்களின் தலைமைகளிலுள்ள கட்சிகளுக்கு பயனளிப்பதாக இருக்கும் என்றும் கருதப்பட்டது. அதன்பேரில் அந்த இரகசியக் கணக்குப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து சம்பந்தப்பட்ட நபர்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்பட்டிருந் தது. இந்தப் பொறுப்பு மனித உரிமைச் செயற்பாட்டாளரும் ட்ரான்ஸ்பேரன்சி இன்ரநஷனல் அமைப்பின் முன்னாள் பணிப் பாளருமான சட்டத்தரணி ஜே.சி. வெலியமுனவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் கடந்த பல வாரங்



களாக அவர் இரகசியமாகச் செயற்பாட்டில் இறங்கி இருந்துள்ளார். அவருடைய பணி, இவ்வாறு இரகசியக் கணக்கில் இருக்கும் பணத்தை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவது, அத்துடன் சுதந்திரக் கட்சிக்கும், ஐ.தே.கவுக்கும் தங்கள் எதிரிகளுக்கு எதிரான அரசியல் வலுச்சேர்க்கும் ஆயுதமாக அதனைப் பயன்படுத்துவதற்கு உதவுவதுமாகும். ஆனால், பொதுத் தேர்தலுக்கு முன்னதாக எதையும் சாதிக்க வெலியமுனவினால் முடியாமல் போய்விட்டது.

டுபாய் வங்கியில் இலங்கை இளம் அரசியல்வாதிக்கு இருக்கின்ற இரகசியக்கணக்குத்தொடர்பாகச்செயற்படுவதற்கு வெலியமுனவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால ஆவணம் ஒன்றை வழங்கியிருந்தார். அதை வைத்துக்கொண்டு டுபாய் அதிகாரிகளுடன் தொடர்பாடல் மேற் கொள்ள அவருக்கு வசதியாக இருந்தது. டுபாய் ஆட்சியாளருக்கு ஜனாதிபதி அனுப்பியிருந்த விண்ணப்பம் ஒன்றுக்கு மேலதிகமாக இந்த முயற்சியும் அமைந்திருந்தது. வெலியமுன இதன்பேரில் கொழும்புக்கும் டுபாய்க்குமிடையில் பல முறை பயணங்களை மேற்கொண்டிருந்ததுடன், முதல் காரியமாக இலங்கை சார்பில் அங்கு செயற்படுவதற்கென சட்டத்துறை நிறுவனம் ஒன்றையும் வாடகைக்கு அமர்த்தியிருந்தார். அந்த நிறுவனம் அளித்திருந்த உறுதிமொழியால் ஊக்கம் பெற்றிருந்த அவர், அரசுத் தலைவர்களுக்கும் அவ்வப்போது தகவல்களை வழங்கி வந்திருந்தார். சிறிது காலத்துக்குப் பின்னர் அவருடன் தில்ருக்‌ஷி டயஸ் விக் கிரமசிங்கவும் இணைந்து கொண்டார். உள்ளூரில் பல்வேறு நிறுவனங்களுக்கான ஆலோசகர் என்ற முறையில் அவர் அதில் செயற்பட்டிருந்தாலும், உண்மையில் இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக அவர் விளங்குகின்றார்.

**வேறு ஏழு பேருக்கும் இரகசியக் கணக்குகள்**

இந்த நிலையில் பல்வேறு மார்க்கங்களில் அவ்வாறான இரகசியக் கணக்கு இருப்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அது மட்டுமன்றி குறித்த அரசியல்வாதியின் தம்பி உட்பட வேறு ஏழு பேருக்கும் அவ்வா றான இரகசியப் பணவைப்புஇருப்பது தெரியவந்துள்ளது. அரசியல் கட்சிகள் தங்களுக்குத் தகவல் வழங்குவதற்கென ஆள்களை எதிர்த் தரப்புகளுக்குள் வைத்திருப்பதென்பது பொதுவான வழக்கமாக இருப்பதால், இந்த விடயங்கள் பல தரப்புக்களிலும் இரகசிய பேச்சுக்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலமாக பரப்பப்பட்டுவிட்டன. இவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப் படும்சங்கதி முன்னாள் மிகமுக்கிய பிரமுகருக்கும் தெரியவந்துள்ளது. ஒரு பொது நிகழ்வொன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அந்த மிகமுக்கிய பிரமுகர் சந்திக்க நேர்ந்தபோது, இந்த விடயத்தைக் கிளப்பியிருக்கிறார். இந்த விடயத்தை அரசுத் தலைவர்களிடம் பிரதமர் தெரிவித்தாலும், எதிலும் பட்டுக் கொள்ளாமல் இருந்து விட் டார்.

வெலியமுன தாம் இரகசியமாக ஓர் இளம் அரசியல்வாதியின் டுபாய் வங்கி இரகசியக் கணக்கை அறிந்துகொள்ள எடுத்துவந்த முயற்சிகள் முன்கூட்டியே முன்னாள் மிகமுக்கிய பிரமுகருக்கும் அவரது குடும்பங்களுக்கும் தெரியவந்து விட்டிருந்தது. எனவே, இவ்வா றான இரகசியங்கள் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் விரிவாகத் தெரிய வந்துள்ள நிலையில் இலங்கைப் பொதுமக்களுக்குத்தான் தெரியாமல் போய்விட்டது. அதுவும்கூட நாட்டின் செல்வங்களைக் கொள்ளையிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் எந்தவித நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை என்று புகார்கள் கிளம்பியுள்ள இந்தக் காலகட்டத்தில் என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த சில வாரங்களில் அரசுக்குக் கிடைத்துள்ள செய்திகளின்படி குறித்த இளம் அரசியல்வாதி அந்தக் கணக்கிலிருக்கும் பணத்தை உக்ரேனில் உள்ள ஒரு வங்கிக்கு மாற்றத் தொடங்கியிருக்கிறார் என் பது தெரியவந்துள்ளது. செய்ச்சல்ஸ் மற்றும் பஹாமாஸ் வங்கிகளுக்கும் பணம் அகற்றப்படுவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கிடைத் துள்ளன. டுபாய் வங்கியில் ஆரம்பத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகக் காணப்பட்ட கணக்கு இப்போது 500 மில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறைந்து காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது. மேற்கொண்டும் ஏதும் நடவடிக்கைகளில் இறங்குவதற்கு முன்னர் டுபாயிலுள்ள சட்டத்துறை நிறுவனத்தின் மூலம் அங்கு வங்கியிலுள்ள இரகசியக் கணக்கை உறையச் செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பது என்று அரசு தரப்பில் முதலில் ஆலோசிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் மேற்கொண்டும் பணம் வேறு இடத்துக்கு மாற்றப்படுவதைத் தடுக்க முடியும் என்றும் கருதப்பட்டது.

கடந்த ஞாயிறன்று இந்த விடயம் டுபாய் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது சட்டத்தரணி வெலியமுன மற்றும் டில்ருக்‌ஷி டயஸ் விக்கிரமசிங்க ஆகியவர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்தார்கள். அரசு ஏற்பாடு செய்திருந்த நிறுவனத்தின் சட்டத்தரணிகளும் அவர்கள் தரப்பில் பிரசன்னமாகியிருந்தார்கள்.

வழக்கு விசாரணையின்போது அந்த நாட்டு சட்டமா அதிபர் இந்த விடயம் பகிரங்கமாகி விட்டமையை எடுத்துக் காட்டியதுடன், இலங்கைப் பத்திரிகைகளில் விமர்சனங்கள் வந்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். அதனால் இது வரை குற்றவியல் வழக்காக கருதப்பட்டுவந்த இந்த வழக்கை இனிமேல் சிவில் வழக்காக நீதிமன்றம் மாற்றி விடக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

**நீதிமன்றம் நிராகரித்தது**

டுபாயிலுள்ள சட்ட நிறுவனம் மூலம் இலங்கை இளம் அரசியல்வாதியின் டுபாய் வங்கியிலுள்ள நிதியை உறையச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியை நீதிமன்றம் இப்போது நிராகரித்து விட்டமை தெரியவந்துள்ளது.

இதற்குக் காரணம் அந்த நாட்டுச் சட்டமா அதிபர் முன்வைத்திருந்த வாதங்களாகும். அதில் குறித்த இளம் அரசியல்வாதி இலங்கையில் எந்த ஒரு வழக்கிலும் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கவில்லை. அவரது எந்த ஒரு நீதிமன்றத்திலும் அவருக்கு எதிராக வழக்கு எதுவும் நடத்தப்படவில்லை. அதற்கும் மேலாக அவர் தொடர்பாக புலன்விசாரணைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவும்கூட இல்லை என்று அவர் வாதிட்டிருந்தார்.

இந்த விதமான ஒரு நிலைமை ஏற்படும் என்று இலங்கை தரப்பில் ஆலோசிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் குறித்து பொது மக்களுக்கு அரசு தரப்பில் ஒரு விளக்கம் வழங்கப்படுவது அவசியம் என்று பல அமைச்சர்கள் கருதினார்கள். ஜனாதிபதித் தேர்தலின்போதும், பிறகு பொதுத் தேர்தலின்போதும் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் படி இது வரை எவருமே தண்டிக்கப்படாத நிலையில் தாங்களே பொது மக்களை எதிர்நோக்க நேர்கிறது என்று அவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்கள். பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டிருப்பது தொடர்பாக அரசு தீவிரமாக அக்கறை செலுத்தி வருகின்றது என்பதை வெளிப்படுத்த இது நல்ல சந்தர்ப்பமாக இருக்கும் என்பதும் அவர்களின் கருத்தாக இருக்கின்றது.



வழக்குத் தொடர்பான சில தகவல்களை வழங்க முடியுமா? என்று ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது ஜனாதிபதி மைத்திரிபால, சட்டத்தரணி வெலியமுனவிடம் தொலைபேசியில் வினவியபோது அதற்கு அவர் சாதகமான பதில் தரவில்லை. வழக்கின் முன்னேற்றத்தை அது பாதிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பெரு நாட்டில் லீமா நகரில் நடந்த உலகவங்கி மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு திரும்பியிருந்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னைய ஆட்சியுடன் தொடர்பு கொண்டிருந்த ஏழு பேருக்கு டுபாய் வங்கியில் இரகசியக் கணக்கு இருப்பதை வெளிப்படுத்தினார். அவர்களின் பெயர்களை வெளியிடாவிட்டாலும் குறித்த இளம் அரசியல் வாதிக்கும் அவரது சகோதரருக் கும் அங்கு ஏனையவர்களைப் போலவே இரகசியக் கணக்கு இருக்கிறது என்று அமைச்சர் கூறினார்.

**நாமல் ஏன் துள்ளிக் குதிக்கிறார்?**

பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் போது பி.பி.ஸி.சிங்கள சேவையில் வெளியான ஒரு செய்திக்கு நாமல் ராஜபக்ச பதில் அளித்துள்ளார். தமக்கு அப்படியான இரகசியக்கணக்கொன்றும் இல்லையென்று மறுத்துள்ளார் என்பதை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. நாங்கள் அந்தக் கணக்கு வைத்திருப்பவரின் பெயரை வெளியிட வில்லை. இவர் ஏன் துள்ளிக் குதிக்க வேண்டும்? வேறு ராஜபக்சக்களும் இருக்கிறார்களே என்றார் அமைச்சர். புலனாய்வுகள் தொடர்கின்றன. விரைவில் இந்த இரகசியக் கணக்குகளை வைத்திருப்பவர்கள் யார்? என்பதை அறிந்து கொள்ள முடியும் என்றார். அவர் மேலும் கூறுகையில், இவைகள் யாவும் டொலர் பரிவர்த்தனைகள். டொலர் கொடுக்கல்வாங்கல் அனைத்தும் அமெரிக்க சமஷ்டி றிசேவ் வங்கியுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். அதனால்தான் இந்த விடயத்தை நாங்கள் அமெரிக்கப் பிரதிநிதி இங்குவந்தபோது அவரிடம் கொடுத்த சமயத்தில், இவைகள் அனைத்தையும் எம்மால் ஆராய முடியும். ஒரு டொலர் எங்காவது வைப்பிடப்பட்டிருந்தாலும், எம்மால் எங்கே எவரால் வைப்பில் இடப்பட்டுள்ளது என்பதைக் கண்டு பிடித்து விடமுடியும் என்று தெரிவித்திருந்தார். ஆனால், அதற்குச் சற்றுக் காலதாமதமாகும். ஏனென்றால் உலகம் முழுவதுமே டொலர் பரிவர்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன என்றார் அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றுக் கோளாறால் அடிக்கடி அவதியா? இதோ மருத்துவம்!

சாப்பிட்ட உணவு சரியாகச் சமிபாடு அடையாவிட்டால் வயிற்றில் பலவித பிரச்சினைகள் வரும். வயிற்றில் எரிச்சல் இருந்தால் உணவுக்கு ஒரு மணிநேரத் துக்கு முன்பு இரண்டு கரண்டி தேன் அருந்த வேண்டும் என நேற்றைய உதயனில் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியாக தேனைப் பாவிக்கும் முறைகள் பற்றிப் பார்ப்போம்.

**நெல்லிக்காயுடன் தேன்**

நெல்லிக்காய்களைத் துண்டு துண்டுகளாக்கி தேன், ஏலக்காய், ரோஜா இதழ்கள் சேர்த்து இரண்டு நாள்கள் வெயிலில் காயவைக்க வேண்டும். பின்பு ஒரு கரண்டி வீதம் காலையும், மாலையும் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் குணமாகி விடும். என்றும் இளமையுடன் இருக்க வேண்டுமென விரும்புவோர் தினமும் தேனை அருந்த வேண்டும். நாற்பது வயதைக் கடந்தவர்கள் தினமும் தேனை அருந்தலாம். ஒரு கரண்டி தேனை அருந்தி வந்தால் அரை மணிநேரத்தில் நரம்புகள் சுறுசுறுப்புடன் திகழும்.

**வெந்நீருடன் தேன்**

ஒரு கோப்பை வெந்நீரில் ஒரு கரண்டி தேன் கலந்து பின்பு அதில் அரை எலுமிச்சம் பழச் சாற்றையும் சேர்த்து அருந்தி வந்தால் உடல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும். நுரையீரலில் சேர்ந்துள்ள சளி எல்லாம் கண்காணாத இடத்துக்கு ஓடிவிடும், குடல் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் நீங்கிவிடும், குளிர்ச்சியால் ஏற்படும் சகல வியாதிகளையும் உடல் எதிர்த்து நின்று தடுத்துவிடும்.

**ஆலமரப் பாலுடன் தேன்**

ஆலமரத்திலிருந்து ஒரு கரண்டி பால் எடுத்து, அதில் ஒரு கரண்டி தேன் கலந்து அருந்த வேண்டும். அருந்தினால் வயிற்றிலுள்ள புழுக்கள் வெளியேறும், வயிற்றிலுள்ள புண்களும் குண மாகும்.

**குப்பை மேனியுடன் தேன்**

குப்பை மேனிச் செடியின் வேரை இடித்து கசாயமாக்க வேண்டும். அந்தக்கசாயத்தில் 30 மில்லி எடுத்து அதனுடன் சிறிது தேன் கலந்து அருந்தினால் வயிற்று புழுக்கள்வெளியாகும்

**ஆட்டுப்பாலுடன் தேன்**

பத்து கொன்றை மரப்பூக்களை 100 மில்லி பசும்பாலில் இட்டுக்காய்ச்சி பூநன்றாக வெந்ததும் வடிகட்டி அதனுடன் ஒரு கரண்டி தேன் கலந்து அருந்தலாம். இதனால் வயிற்றுக் கோளாறுகள், வயிற்றுப் புண், குடற்புண் ஆகியவை குணமாகும். சீதபேதியை குணப் படுத்த 100 மில்லி ஆட்டுப் பாலை ஒரு கரண்டி தேன் கலந்து அருந்த வேண்டும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இறைவனை தூய்மையான மனதோடு வணங்குங்கள்

எப்போதும் வெற்றி பெறுவது அன்பு மட்டுமே. அன்புடன் ஒப்பிடும்போது நூல்களும், அறிவும், யோகமும், தியானமும், ஞான ஒளியும் ஆகிய யாவுமே அதற்கு ஈடாகாது. வரம்பு கடந்த ஆற்றல் கொண்ட இறைவனை தூய்மையான மனதோடு பற்றிக் கொள்ளுங்கள். அவரைச் சார்ந்து நின்று வாழுங்கள். உங்களை வெல்ல எவராலும் முடியாது.

கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்பையும், உதவியையும், சேவையையும் மற்றவர்களுக்கு கொடுத்துப் பழகுங்கள். இதற்காக எதையும் எதிர்பார்க்க வேண்டாம்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 60 | 60 | 60 | 25–30 |
| கத்தரி | 100 | 80 | 120–140 | 100 | 100–120 | 80 | 80 | 40–60 |
| கரட் | 60 | 70 | 60–120 | 120 | 40–100 | 100 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 50 | 30 |
| பயிற்றை | 80 | 80 | 120 | 80 | 80–100 | 100 | 100 | 80 |
| பாகல் | 160 | 200 | 140 | 160 | 140–160 | 120 | 110 | 130 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 80 | 70 | 60 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 100 | 120 | 130 | 140 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 100 | 140 | 100 | 120 | 100 | 80–90 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 100 | 80 | 100–120 | 100 | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 60 | 80 | 60 | 35–40 |
| கீரை | 40 | 40 | 40 | 10 | 20 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 250–300 | 260 | 220 | 400 | 250 | 250 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 60 | 120 | 100 | 60 |
| வெண்டி | 120 | 70 | 80 | 80 | 100–120 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 80 | 160 | 160 | 180 | 160 | 100–120 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 | 80 | 70 | 100 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 80 | 50 | 60 | 50–60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 100 | 120–130 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 280 | 300 | 250–300 | 350 | 280 | 600 | 160 | 250 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08–10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 140 | 160 | 120 | 120 | 100 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 80 | 140 | 120 | 60 | 180–200 | 160 | 120 | 70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 800 | 700 | 600 | 500 |
| நண்டு | 200 | 300 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 450 | 600 | 600 | 500 | 600 | – |
| பாரை | 300 | 300 | 500 | 450 | – | 350 |
| சுறா | 400 | 400 | 600 | 500 | – | 400 |
| சீலா | 200 | 300 | 400 | 300 | 300 | 250 |
| விளை | 450 | 300 | 400 | 350 | – | 300 |
| முரல் | 250 | 200 | 400 | 300 | 200 | – |
| கும்பிளா | 200 | 200 | 400 | 300 | 200 | 200 |
| கிழாக்கன் | 250 | 800 | 300 | 400 | – | 450 |
| ஒரா | 250 | 300 | 350 | 350 | – | 250 |
| திரளி | 150 | 200 | 250 | 300 | 100 | 200 |
| நகரை | 150 | 200 | 200 | 300 | 100 | 200 |
| சூடை | 100 | 100 | 100 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 200 | 150 | 250 | 300 | – | 200 |
| திருக்கை | 350 | 200 | 250 | 280 | 100 | 110 |
| பாலை | 200 | 200 | – | 200 | 100 | – |
| வாழை | 70 | 100 | | 100 | 100 | 150 |
| கொய் | 100 | 100 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 100 | 200 | 200 | 250 | – | 150 |

## நாளை

ஐப்பசி–05
வியாழக்கிழமை
22.10.2015

திதி: தசமி
பி.இ.05.42
நட்சத்திரம்:
திருவோணம்
மு.ப.09.58 வரை
சுபநேரம்:
07.32-09.02 வரை
இராகு காலம்:
01.32-03.02 வரை
கேதாரகௌரி விரதம்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 5 | | | | | |
| 8 | | | | | 7 | | | |
| | | | | | 4 | | 3 | 7 |
| | 6 | | 8 | | 2 | | 1 | |
| | | 8 | | | | 2 | | |
| | 4 | | 9 | | 3 | | 6 | |
| 2 | 1 | | 6 | | | | | |
| | | | 4 | | | | | 1 |
| | | | | | 9 | | 5 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## கும்பம்




தெளிந்த நீரோடை போல தீர்க்கமாக முடிவெடுக்கும் நீங்கள் எவர் மனதும் புண்படாதபடிநடந்துகொள்ளவேண்டும் என்பதில் கவனமாக இருப்பீர்கள். 27 ஆம் திகதி முதல் புதன் 9 ஆம் வீட்டில் நிற்பதால் மாறுபட்ட அணுகுமுறையால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். தக்க நேரத்தில் உதவிகரமாக இருப்பீர்கள். சுக்கிரன் 2 ஆம் திகதி வரை ராசிக்கு 7 ஆம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதால் சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படுவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். 3 ஆம் திகதி முதல் 8 இல் மறைந்தாலும் புதனும், சுக்கிரனும் பரிவர்த்தனா யோகம் அடைவதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். பிள்ளைகள் ஆறுதலாக இருப்பார்கள். சூரியன் 9 ஆம் வீட்டில் நிற்பதால் அவ்வப்போது முன்கோபம், வீண் கவலை வந்து போகும். எவரை, நம்புவது, எவரை நம்பாமல் இருப்பது போன்ற குழப்பங்கள் வரும். எனவே கொஞ்சம் சுற்றுவட்டாரத் தைப் புரிந்து கொண்டு இடம், பொருள் ஏவல் அறிந்து பேசுவது, பழகுவது நல்லது. தந்தைக்குச் சிறுசிறு விபத்துக்கள், அதனால் மனநிம்மதி இழப்புகள் ஏற்படக் கூடும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். 5 ஆம் திகதி வரை செவ்வாய் 7இல் நிற்பதால் சகோதர, சகோதரிகள் உதவியாக இருப்பார்கள். சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். இடம், வீடு வாங்குவீர்கள். 6ஆம் திகதி முதல் செவ்வாய் 8 இல் நுழைவதால் சின்னச் சின்ன விபத்துக்கள், நெருப்புக் காயங்கள், மருந்து, மாத்திரையால் ஒவ்வாமை ஏற்படக் கூடும். குருபகவான் 7 ஆம் வீட்டில் தொடர்வதால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். முக்கியஸ் தர்கள் அறிமுகமாவார்கள். அரசியல்வாதிகளே! ஆதாரமில்லாமல் எதிர்க்கட்சிக்காரர்களை விமர்சிக்க வேண்டாம். கன்னிப் பெண்களே! கல்லூரிக் காலத் தோழியைச் சந்திப்பீர்கள். மாணவர்களே! கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கத்தைக் கைவிடுங்கள். கெட்ட நண்பர்களின் சகவாசங்களை அறவே ஒதுக்கித் தள்ளுங்கள். வியாபாரிகளே! வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். கடன் மீதிகளை அலைந்து வாங்க வேண்டி வரும். பணியாள்களால் வீண் கவலை அதிகரிக்கும். வாடிக்கையாளர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி, மர வகைகளால் அதிக இலாபமடைவீர்கள். பங்குதாரர்கள் அவ்வப்போது புலம்பினாலும் ஒத்துழைப்பார்கள். புது ஒப்பந்தங்கள், முதலீடுகளை யோசித்துச் செய்வது நல்லது. உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிக்க வேண்டி வரும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சக ஊழி யர்களின் சொந்த விடயங்களில் மூக்கை நுழைக்காதீர்கள். கலைத்துறையினரே! அயல் நாட்டு தொடர் புடைய நிறுவனங்களிலிருந்து வாய்ப்புக்கள் தேடி வரும். விவசாயிகளே! வற்றிய கிணற்றில் நீர் ஊற செலவு செய்து கொஞ்சம் தூர் வாருவீர்கள். மாற்றுப் பயிரிட்டு வருமானத்தைப் பெருக்குவீர்கள். புது நிலம் கொள்வனவு செய்வீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் மாதமிது.

**ராசியான திகதிகள்:** ஒக்ரோபர் 18, 19, 25, 26, 27, 28, 30, நவம்பர் 3, 4, 5, 6, 13, 14, 15.

**சந்திராஷ்டமம்:** நவம்பர் 7 முற்பகல்11 மணி வரை எதிலும் நிதானித்துச் செயற்படப் பாருங்கள்.

**பரிகாரம்:** மாரியம்மனைத் தரிசித்து வாருங்கள். கோயில் சிரமதானப்பணியை ஏற்று நடத்துங்கள்.



## மீனம்

முன்னுக்குப்பின் முரணாக யோசிக்கும் நீங்கள், பலரிடம் ஆலோசனை கேட்டாலும், உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்களோ, அதைத்தான் செய்வீர்கள். சூரியன் 8இல் அமர்ந்ததால் அடகு வைத்த நகையை மீட்பீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். 2 ஆம் திகதி வரை சுக்கிரன் 6இல் மறைந்திருப்பதால் சிறுசிறு விபத்துகள், வீண் செலவுகள், சண்டை சச்சரவுகள், உங்களைப் பற்றிய வதந்திகள், பழி வந்து போகும். கணவன் - மனைவிக்குள் அவ்வப்போது குழப்பங்களும், பிரச்சினைகளும் வரும். 3 ஆம் திகதி முதல் சுக்கிரன் 7 ஆம் வீட்டில் நுழைவதால் பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். வாகனப் பழுது சரியாகும். கோபம் குறையும். கல்யாணப் பேச்சு வார்த்தை நல்ல விதத்தில் முடியும். இந்த மாதம் முழுக்க புதன் சாதகமான வீடுகளில் வாசம் செய்வதால் முக்கியஸ் தர்கள் அறிமுகமாவார்கள். போட்டித் தெரிவுகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். 5 ஆம் திகதி வரை செவ்வாய் 6 ஆம் வீட்டிலேயே நிற்பதால் எதிர்ப்புக்கள் அடங்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நெடுநாள்களாக தள்ளிப்போன காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். வீடு, மனை வாங்குவது, விற்பது சாதகமாக முடியும். சகோதரர்கள் ஆதரிப்பார்கள் என்றாலும் சில நேரங்களில் போட்டி, பொறாமைகள் வரக்கூடும். ராசிக்குள் கேதுவும், 7 இல் ராகுவும் நிற்பதால் மனைவியுடன் வாக்குவாதம், வரவுக்கு மிஞ்சிய செலவுகளும் வந்து செல்லும். பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். ராசிநாதன் குரு 6இல் நிற்பதால் அவ்வப்போது வருங்காலத்தைப் பற்றி ஒரு பயம் இருக்கும். எவரையும் நம்பிப் பெரிய பொறுப்புக்களை ஒப்படைக்காதீர்கள். சில முக்கிய விடயங்களுக்கெல்லாம் நீங்களே சென்று வருவது நல்லது. அரசியல்வாதிகளே! உங்களின் செயற்பாடுகளை மேலிடம் உற்று நோக்கும். தொகுதியில் நல்ல மதிப்புக் கிடைக்கும். கன்னிப் பெண்களே! காதல் கசந்து இனிக்கும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக்கள் வரும். மாணவர்களே! நினைவாற்றல் அதிகரிக்கும். விளையாட்டில் பரிசு பெறுவீர்கள். வியாபாரிகளே! வியாபாரத்தில் கடினமாக உழைத்து இலாபம் பெறுவீர்கள். பெரிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. வேலையாள்கள் கொஞ்சம் முரண்டு பிடிக்கத்தான் செய்வார்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்தும் விதமாக கடையை விரிவுபடுத்தி நவீனமயமாக்குவீர்கள்.



இரும்பு, சிமெந்து, எண்ணெய் வகைகளால் ஆதாயமடைவீர்கள். பங்குதாரர்களிடம் வளைந்து கொடுத்துப் போங்கள். உத்தியோகத்தில் சிலர் உங்களுக்கு எதிராகச் செயற்படுவார்கள். மற்றவர்களை நம்பிப் பெரிய பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டாம். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். கலைத்துறையினரே! அவ்வப்போது கிசுகிசுத் தொந்தரவுகள் வரும். உங்களின் கற்பனைத் திறன் வளரும், விவசாயிகளே! நிலப் பிரச்சினைகளைப் பெரிது படுத்தாமல் சுமுகமாகப் பேசித் தீர்ப்பது நல்லது. எதிர்பார்த்த சலுகைகள் கொஞ்சம் தாமதமாகக் கிடைக்கும் சவால்களைச் சமாளிக்கும் மாதமிது.

**ராசியான திகதிகள்:** ஒக்ரோபர் 18, 19, 20, 21, 23, 28, 30, நவம்பர் 1, 2, 5, 6, 7, 8, 14, 15.

**சந்திராஷ்டமம்:** நவம்பர் 10, 11, 12 முற்பகல் 10 மணி வரை யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**பரிகாரம்:** கேது பகவானை தரிசித்து வாருங்கள். குருதி தானம் செய்யுங்கள்.

---

திருமண வாழ்வின் ஆரம்பமும், அதன் முடிவும் இனிமையானவைகள். அந்த ஆரம்பத்துக்கும், முடிவுக்கும் இடையில் உள்ள காலத்தை கடந்து செல்வதென்பது கடினமானது. ஒரு திராட்சை ரசத்தின் மதிப்பு அதன் பழமையைப் பொறுத்து மதிப்பிடப்படுகிறது. அதுபோல் திருமண உறவின் மதிப்பும் பெருமையும் அது பழமையடையும் போதுதான் வெகுவாக உயர ஆரம்பிக்கிறது.

பல தம்பதிகள் தங்கள் உறவு பழமையடைவதை விரும்புவதும் இல்லை, அதைக் கை விடுவதும் இல்லை. எப்போதும் புத்தம் புதிதாய் இருக்க வேண்டும் என்பதே இதன் காரணம். எப்போதும் புதுமையாக இருக்க வேண்டும் என்று விரும்பும் போது, அது புளிப்படைய வாய்ப்பில்லையே? ஒரு வீட்டில் வசிக்கும் கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வது என்பது அன்றாட நிகழ்வு தான் என்றாலும், அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தருணங்களில் முதன் முதலாகப் பார்ப்பது போன்ற பரவசத்தை உணர ஆரம்பிக்கின்றனர். பரவசப் படுத்தும் தன்மை உடைய காரியங்கள்மீது எமக்குச் சலிப்பு உண்டாக வாய்ப்பில்லை. இது தம்பதிகள் மனதில் நல்லதொரு புரிதலையும், நல்ல அனுபவத்தையும் கொடுக்கிறது.

தனக்கு மனைவியாகப் போகிறவளை நேசிப்பது ஒரு காதலனுக்கு மதுரமான அனுபவமாக இருக்கிறது. ஆனால் தனக்கு மனைவியாகி விட்டவளை திருமணமான புதிதில் நேசித்ததுபோல, பின் வரும் காலங்களில் நேசிப்பது கசப்பானதாகி விடுகிறது. இந்தச் சூழ்நிலை மிக பெரிய ஏமாற்றத்தை பெண்களிடத்தில் ஏற்படுத்துகிறது. திருமணமான புதிதில், பெண்ணின் காலில் குத்தும் முளைக், கணவன் தனது இதயத்தில் குத்தியது போல உணர்கிறான். ஆனால், ஆண்டுகள் பல கடந்த பின்னர், அதே பெண்ணின் காலில் முள் குத்தும் போது 'பார்த்து வரக் கூடாதோ' என்று பெண்ணிடன் ஆண் கோபப்படுகிறான். இதனால், பெண்ணானவள் உள்ளம் நொந்து போகிறாள்.

ஆண், அழகைக் காண்கையில் மயங்குகிறான். பெண், அன்பான பேச்சை கேட்கையில் மயங்கி விடுகிறாள். இதனால் தான் ஒரு பெண் தான் வருணிக்கப்படுவதை அதிகம் விரும்புகிறாள். இதற்கு மாறாக, ஒரு ஆண், தான் வர்ணிக்கத் தேவையான வடிவத்தை அதிகம் விரும்புகிறான். இதற்கு மாறாக நடக்கும் பொழுது குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டுவிடுகிறது.

கணவன் மனைவி உறவு என்பது, தேயிலை போன்றது. சுடுதண்ணீரில் ஊற்றப்படும் பொழுது தேயிலைத்தூளுக்குள் மறைந்து இருக்கும் தனித்தன்மை வெளிப்படுகிறது. இதே போன்று தான் தம்பதிகள் இருவருக்குள்ளும் மறைந்துள்ள தனித்தன்மையை அவர்கள் வெளிக்கொணரும் போது அவர்களின் வாழ்க்கை வலிமையுள்ளதாக, சிறப்பானதாக மாறும்.

திருமண வாழ்வின் முற்பகுதியில் தம்பதிகளுக்கிடையே உண்டாகும் பரவசத்தை விட, திருமணத்தின் பிற்பகுதியில் அனுபவத்தினால் வரும் பரவசம் ஆழமானது, ஆனந்தமானது.

வாழ்க்கை என்பது சிந்திப்பவர்களுக்கு இன்பமாக இருக்கிறது. உணர்ச்சி கொள்பவர்களுக்கு துன்பமாக இருக்கிறது. ஆகையால் சிந்தித்து வாழ்க்கையை இன்பமாக மாற்றிடு பெண்ணே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க



# மந்திரவாதியும் பாம்புக்கடி மந்திரமும்



தெலுங்காரரான மந்திரவாதி ஒருவர் மந்திரத்தைக் கூறி பாம்பினால் கடியுண்டவர்களது உடலிலிருந்து நஞ்சை இறக்கி வந்தார். இதனால் அவர் வெகு பிரசித்தம் வாய்ந்தவராகக் காணப்பட்டார். இளைஞன் ஒருவன் அவரிடம் அந்த மந்திரத்தைக் கற்றுத் தருமாறு பல காலமாகக் கேட்டு வந் தான். அவரும் பல காலமாகத் தட்டிக் கழித்து வந் தார். அவன் விடுவதாக இல்லை. ஒருநாள் அவனுடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் "தொந்தரவு பண்ணாமல் தூரப் போ..." எனத் தனது தாய் மொழியான தெலுங்கு மொழி யில் கத்தினார். தெலுங்கு மொழிதெரியாத இளை ஞனுக்கு அதன் அர்த்தம் தெரியவில்லை. "பாம்புக் கடி மந்திரத்தைத் தான் கூறி விட்டாரோ" என்று எண்ணி இதுதான் பாம்புக் கடி மந்திரமா எனக் கேட்டான் அவன்.

அவனிடமிருந்து தப்பித்தால் போதுமென நினைத்த மந்திரவாதி ஆமாம்! "இதுதான் பாம்புக் கடி மந்திரம்" எனக் கூறி விட்டார். பாம்புக்கடி மந்திரமென எண்ணி "தொந் தரவு பண்ணாமல் தூரப் போ" என்ற வசனத்தை செபிக்க ஆரம்பித்தான் அந்த இளைஞன். அது பலிக்க ஆரம்பித்துவிட்டது. திடீரென அந்த நாட்டின் அரசகுமாரிக்குப் பாம்பு கடித்துவிட்டது. மந்திரவாதியைக் கூப்பிட்டுச் சிகிச்சை அளித்தார்கள். எத்தனையோ மந்திரங்களைக் கூறியும், விஷம் இறங்குவதாக இல்லை. அரசகுமாரியின் நிலைமை மோசமானது. யாரோ ஒருவர், புதிதாக இளைஞன் ஒருவன் பாம்புக் கடிக்குச் சிகிச்சை அளிக்கிறான் என்று கூற, அரசன் உடனே அவனை அழைத்து வரச் சேவகரை அனுப்பினான். அந்த இளைஞனும் வந்து தனது மந்திரந்தை ஒரே ஒரு முறை கூற இளவரசியின் விஷம் உடனே இறங்கி விட்டது. பழைய மந்திரவாதிக்கு ஆச்சரியமாகி விட்டது. நான் மந்திரம் கற்றுத் தராத்தால் வேறு எவரிடமோ கற்று வந்துள்ளாயா? என அவர் அவனிடம் கேட்டார். "உங்களிடதான் கற்றேன்" –என்றான் அவன். மந்திரவாதி ஆச்சரியப்பட்டு மந்திரத்தைச் சொல்லுமாறு அவனிடம் கேட்டார்.

அவனும் நீங்கள் சொல்லிக் கொடுத்த மந்திரம் தான் இது என்று கூறி "தொந்தரவு பண்ணாதே..தூரப்போ.." என்றான்.

நீதி:எமது செயலில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்

# விடுகதைகளும் விடைகளும்

1. சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன?
   **வாழைப்பழம்**
2. பையில் இது இருந்தால் வேறு எதுவும் இருக்காது. அது என்ன?
   **கிழிசல்**
3. பருப்புக்கறி மணப்பதேன். படை வீரர் சாவதேன்?
   **பெருங்காயத்தால்**
4. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ அவ்வளவு விட்டுச் செல்வீர்கள் எது என்ன?
   **கால் தடங்கள்**
5. காற்றாடி பறப்பது எப்படி ? கல்வி வளர்வது எப்படி ?
   **நூலால்**
6. கறுப்பர்கள் ஆண்டு பலகாலம் ஆண்டதும், வெள்ளையர் ஆதிக்கம் ஆரம்பம். அது என்ன?
   **நரைமுடி**
7. மீன்பிடிக்கத் தெரியாதாம்; ஆனால் வலை பின்னுவானாம். அவன் யார்?
   **சிலந்தி**
8. எருக்கிலை பழுப்பதேன், எருமைக்கன்று சாவதேன்?
   **பால் வற்றிப் போனால்**
9. அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு. அது என்ன?
   **நெல்**
10. பெரிய சிக்கலான, நூல் பிரித்தெடுக்க முடியாவிட்டாலும், சுவையானவன் .அவன் யார்?
   **இடியப்பம்**



**சிறுவர், இளவல்கள் வட்டம் பகுதிகளுக்கான கதை, கவிதை, பல்சுவைத் தகவல்கள் குறித்த உங்களது ஆக்கங்களை இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். சிறப்பான ஆக்கங்களுக்குப் பரிசுகளும் உண்டு.**

# சேர்த்தெழுதுதல்

| | |
|---|---|
| 1. மூன்று+நூறு | – முந்நூறு |
| 2. வீடு+தோட்டம் | – வீட்டுத்தோட்டம் |
| 3. வகுப்பு +ஆசிரியர் | – வகுப்பாசிரியர் |
| 4. அறிவு +உரை | – அறிவுரை |
| 5. மலை+உச்சி | – மலையுச்சி |
| 6. பூ+செடி | – பூச்செடி |
| 7. கண்+நீர் | – கண்ணீர் |
| 8. கடல்+ கரை | – கடற்கரை |
| 9.வீடு+கூரை | – வீட்டுக்கூரை |
| 10. கருமை+குயில் | – கருங்குயில் |

பவிஷனா பாஸ்கரன்,
தரம் 3பி,
சென்.பெனடிக்ற் வித்தியாலயம்.

# வாழ்க்கையின் வெற்றிக்கு எண்ணங்கள் ஒருமைப்படட்டும்

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"** என்ற ஔவையார் கூற்றுக்கிணங்க, அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பெடுத்த மனிதன், மற்றைய உயிர்களினின்றும் மேம்பட்டவன். மனம் என்ற மாபெரும் சக்தி படைத்தவன். மனதைக் கொண்டிருப்பதனாலேயே நாம் மனிதர்களாகின்றோம். வளமுடன் வாழ வழி காட்டுவது அந்த மனம் தானே? இந்த மனதின் சக்தியைச் சிதற விடாமல் ஒரு குறிக்கோளுக்குள் குவித்தோமேயானால், நாம் எண்ணுகின்ற எந்தக் காரியத்திலும் வெற்றியை அடைந்து விடலாம்.

எமது எண்ணங்களைச் சிதறவிடாது எமது குறிக்கோளில் மனம் முழுவதையும் ஒரு முகப்படுத்துகின்றபோது எண்ணங்களுக்கு ஆற்றல் மிதமாகின்றது. அடுப்பில் ஒரு பாத்திரத்துள் நீர் கொதித்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பாத்திரத்தின் மூடி தள்ளியதைப் பார்த்த ஜேம்ஸ்வாட், தனது கவனம் முழுவதையும் அதில் செலுத்தி நீராவிக்குத் தள்ளும் சக்தி இருக்கின்றது என்று அறிந்து ரயில் என்ஜினைக் கண்டு பிடித்தார். அப்பிள் மரத்தில் இருந்து விழும் பழம் கீழ் நோக்கி விழுவதை அவதானித்து தனது கவனம் முழுவதையும் ஒரு முகப் படுத்திய சேர்.ஐசாக். நியூட்டன், புவியீர்ப்புச் சக்தியைக் கண்டறிந்தார். லூதர் பர்பாங் ஆண்டுக்கணக்கில் ஆராய்ச்சி செய்து செடி கொடிகளுக்கு உயிர் இருக்கின்றது என்று கண்டறிந்தார்.கணினிக்குள்தனது மூளையை ஒருங் கிணைத்த காரணத்தினாலேயே மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் உரிமையாளர், பில்கேட்ஸ் இன்று உலகத்திலேயே முதலாவது பணக்காரன் என்ற நிலையை அடைந் துள்ளார். ஒரேவிடயத்தில் தமது எண்ணங்களைச் செலுத்தியவர்களே தலை சிறந்த விஞ்ஞானிகளாக ஆகியிருக்கின்றார்கள். எனவே, எண்ணங்கள் ஒரு முகப் படுத்தப்படல் வேண்டும். சூரியனுடைய



கதிர்களை ஒரு கண்ணாடி லென்ஸ் மூலம் குவிக்கும் போது ஒளிக்கதிர்கள் ஒன்றாகத் திரண்டு லென்ஸை ஊடுருவிச் சென்று எரிக்கின்ற நெருப்பாக மாறுகிறது. லென்ஸின் கீழே வைக்கப்பட்டிருக்கும் பஞ்சை அது எரித்து விடுகின்றது. ஒரு செயல்வெற்றியடைய வேண்டுமானால், முழுமனத்தையும் அதில் செலுத்துவது, முழு ஆற்றலையும் ஒன்று குவிப்பது, முழு அறிவையும் புகுத்துவது போன்ற 3 திறன்களும் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் வெற்றி கிட்டும். முதலில் ஒரு குறிக்கோளைத் தெரிவு செய்ய வேண்டும். தன்னம்பிக்கையுடன் அந்தக் குறிக்கோளைப் பிரார்த்தனை மூலம் ஒவ்வொரு நாளும் மனம் ஒன்றிக் கேட்கும்போது மனதில் ஆழமான உறுதி ஏற்படும். பிரார்த் தனை என்ற பெயரில் எமது மன துக்கு நாமே கட்டளையிடுகின் றோம் அல்லவா? இதன் மூலம் குறிக்கோள் ஆழமாகமனதில் பதியும். அப் போது முயற்சியில் மனம் ஒன்றித்துவிடும். வாகனம் ஓட்டும் போது எப்படி மனம் ஒன்றித்து வாகனத்தைச் செலுத்துகின் றோமோ, அப்படியேதான் இதுவும். இந்த மனித உடலால் எதுவுமே செய்ய முடியாது. மனம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். அதனை வெற்றி கொள்ளுங்கள். வெற்றி என்பது நாம் விரும்பியதெல்லாவற்றிலும் வெற்றி கண்டு விடுவதல்ல. எம்முடைய தீமைகளை – தீய எண்ணங்களை – தீய ஆசைகளை –தீய செயல்களை – வெற்றி கொள்ள வேண்டும். வள்ளுவர் வழியில் தவம் என்னும் நூலிலும் தீய எண்ணங்களில் நின்று வெற்றி கொள்ளுதலே மாபெரும் வெற்றி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை யெல்லாவற்றையும் வென்று விட்டால், பிறரால் நாம் குறை கூறப்படமாட்டோம். குறை யில்லாமல் வாழுகின்ற வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கை. இந்த வாழ்க்கையுடன், நாம் கொண்ட ஒரு குறிக்கோளை நோக்கி மன ஒருமைப் பாட்டுடன் செல்லும் போது நாம் கொண்ட குறிக்கோளில் வெற்றி காணலாம். (தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றச்சாட்டு இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 21

பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குஉட்படுத்தியகுற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறித்த சிறுமி, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் சிறுமியின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அதனடிப்படையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணையின் பின்னர் அவர் பருத்தித்துறை நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில்முற்படுத்தப்பட்டார்.அதன்போது குறித்த இளைஞனை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (வ–4,108)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். ஆயர்
அருட்கலாநிதி மேதகு
**ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் எட்டாவது ஆயராக பதவி உயர்த்தப்பட்டதையிட்டு நாமும் பேருவகையோடு பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஆன்மீகப் பணி தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
இல. 212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5542

தே. இம்மானுவேற்பிள்ளை
குடும்பத்தினர்.
(கரம்பொன் அன்னை வேளாங்கன்னி மாதா கோவில் ஸ்தாபகரும், ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும்)

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

பருத்தித்துறை, ஒக். 21

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேருக்கும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இராமசாமி வீரமணி என்பவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருப்பதனால்மனிதாபிமான அடிப்படையில், அவர் கடந்த 16 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். ஏனைய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, அவர்களுக்கு விளக்கமறியலைநீடித்துஉத்தரவிட்டார் பருத்தித் துறை நீதிவான் மா. கணேசராசா. (வ–4,108)

## வீடு வாடகைக்குண்டு

யாழ் நகருக்கு அண்மையில் ஓட்டு மடம் பகுதியில் வீடு, அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு
(64244) 0774381810

## வீடு வாடகைக்கு

இல- 68 கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.
(54240) தொடர்பு : 0778393531

## விநியோகஸ்தர்கள் தேவை

" முகவரி " மாத இதழுக்கு விநியோகஸ்தர்கள் தேவை
No. 52, C.A.P.S பலாலி வீதி,
திருநெல்வேலி.(சம்பத் வங்கி அருகில்)
(415981) தொடர்பு : 0773867458




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்
2015 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகள்

சுதானந்தன் சானுசா-174 சந்திரபோஸ் பிரபாலினி -160

பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக மாணவிகள் சித்தியடைந்துள்ளதுடன் கடந்த பரீட்சைகளில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த சு.விதுர்சன் 181 (2011), உ.செந்தூரன் 171(2013), கி.மதுசன் 163 (2013) இ.புவிந்தன் 163 (2013), க.சுகிர்தன் 155 (2013), ச.கனிஸ்ரன் 164 (2014), ச.டினோசியன் 150 (2014) ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்

பழைய மாணவன்
ப.குகனேஸ்வரன் LLB (சட்டத்தரணி)

## வாங்குக் கட்டில்கள் தேவை



நல்ல நிலையில் உள்ள வாங்குக் கட்டில்கள் தேவை

தொடர்பு:0777 190 871

# நீதி அமைச்சருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஒக். 21

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சில நீதிபதிகள் சட்டத்திற்கு அப்பால் சென்று சந்தேகநபர்களுக்குதண்டனைவழங்குவதாக முன் வைக்கப்பட்ட மனுவை விசாரணை செய்த போதே, உயர்நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

கொழும்பு – மொரவக மற்றும் தங்காலை நீதிமன்றங்களில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறித்த மனுவில் கூறப்பட்டுள்ளது. சிறு குற்றங்களுக்கு நான்கு வருடங்கள் தண்டனை வழங்க வேண்டும், எனினும் சில சந்தர்ப்பங்களில் 34 மற்றும் 66 வருடங்கள் வரை தண்டனை வழங்குவதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம், நீதி அமைச்சர் விஜயதாஸராஜபக்சவைநீதிமன்றத்தில் நவம்பர் 12ஆம் திகதி தகவலளிக்குமாறு இதன்போது உத்தரவிட்டுள்ளனர். (வ)

## விஜயதசமி ஓகன் (KEY BOARD) இசை வகுப்பு

ஸப்தஸ்வரம் கலையகத்தின் விஜயதசமிக்கான ஓகன் வகுப்புக்கள் (KEY BOARD CLASS) ஆரம்பம்

ஆசிரியர் - ஸ்ரீகுகன்

வியாழன் மாலை 4 மணிக்கு
"ஸப்தஸ்வரம்"
இசைக்கலையகம்
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.

தொடர்புக்கு – 0776980573




காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
கலைவகுப்புக்களுக்கான அனுமதி வழங்கல்

சங்கீதம், பண்ணிசை, நடனம், மிருதங்கம், வயலின், யோகாசனம், தியானம் ஆகிய பயிற்சி நெறிகளில் இணைய விரும்புகிறவர்கள் எதிர்வரும் 22.10.2015 வியாழக்கிழமை விஜயதசமி அன்று பி.ப 5.00 மணி தொடக்கம் அனுமதிகளைப் பெற்று இணைந்து கொள்ள முடியுமென அறியத்தருகின்றோம்.

இல.11, கஸ்தூரியார் 1ம் ஒழுங்கை,
(உதயன் பத்திரிகை நிறுவனம் அருகில்)
யாழ்ப்பாணம்.

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ். கிளை

## பாராட்டும் வாழ்த்துக்களும்

2015 ஆம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் திறனாய்வில் சாதனை படைத்த மாணவர்கள்




| வயதுப் பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|---|
| 21 பெண்கள் | செல்வி.யோ.சுகிர்தா | உயரம் பாய்தல் | 4 |
| 21 பெண்கள் | செல்வி.யோ.சுகிர்தா | கோலூன்றி பாய்தல் | 4 |
| 17 ஆண்கள் | செல்வன். சி. தசாந்தன் | கோலூன்றி பாய்தல் | 4வர்ண விருது |

இவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் எமது கல்லூரி 'நல்லதிபர்' விருதுபெற்ற


**சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்**
B.Ed,M.Ed,D.S.M, Maths.Trd, SLPS-I




பச்சிலைப்பள்ளியில் பார்போற்ற ஓங்கிடும்
பளை மத்திய கல்லூரி இங்கு நல்லதிபர் மாபிலே
புகழ்பட உழைப்பவர் சி. பாலகிருஷ்ணன் அவர்கள்
புதுமையாம் விருது "குரு பிரதீபா" விருதினையிவ்
ஆண்டு பெற்றது பெருமையும் புகழும் சேர்க்கும்
கல்வியோடு ஒழுக்கமது கல்லூரியில் மிளிர்ந்ததால்
விருதிவரை நாடிற்று இதில் வியப்பேதும் இல்லையே
கடமையில் கண்ணாய் செயலில் வீரனாய்
திளமுழைத்த சிற்பி - இவர் சேவை நலம் கண்டு
தலை வணங்கி நிற்கின்றோம் கல்லூரி சமூகம் கூடி.

கல்லூரிச் சமூகம்
கிளி/பளை மத்திய கல்லூரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மாமா எனது தந்தையைத் தாருங்கள்

## காணாமற்போன பொலிஸ் அதிகாரியின் பிள்ளை ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஒக். 21
ஜனாதிபதி மாமா தயவு செய்து எனது தந்தையைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று காணமற்போன பொலிஸ் அதிகாரியின் பிள்ளை விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிசாய்த்துள்ளார்.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் பணிபுரிந்த பொலிஸ் அதிகாரி குணதிலக்க என்பவரே காணாமற்போயிருந்த நிலையில், இது தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால பொலிஸ்மா அதிபருக்குப் பணித்துள்ளார்.

புதையல் தோண்டுதல் தொடர்பாக ஒரு வாக்குமூலத்தைப் பெற்ற பின்னர் குறித்த பொலிஸ் அதிகாரி, ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி முதல் காணாமற் போயிருந்தார். இந்த நிலையில் காணாமற்போயிருந்த பொலிஸ் அதிகாரி தொடர்பில் கொழும்பிலிருந்து வெளியாகும் ஞாயிறு தேசிய பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

புதையல் தோண்டுதல் தொடர்பாக ஒரு வாக்கு மூலத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பொலிஸ் அதிகாரிக்கு என்ன நடந்தது, ஜனாதிபதி மாமா தயவு செய்து எமது தந்தையைக்கண்டுபிடித்துத்தாருங்கள் என்று அந்தச் செய்தி தலைப்பிடப்பட்டிருந்தது. காணாமற்போன பொலிஸ்அதிகாரியின்பிள்ளையின் கோரிக்கை தொடர்பில் அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியைப் பார்வையிட்ட ஜனாதிபதி, இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு விசேட விசாரணையை உடனடியாக மேற்கொண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணித்துள்ளார். ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய, விசாரணைகளைப் பொலிஸ் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவு ஆரம்பித்துள்ளது. (ற-4.5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 12 . 1942

மறைவு 31 . 10 . 2014

கடந்த (31.10.2014) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சபாபதி சுந்தரமூர்த்தி**
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினக் கிரியைகள் இன்று (21.10.2015) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கிளுவானை வீதி,
கோப்பாய் மத்தி. (64242)

-குடும்பத்தினர்-
0773233630

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளியம்மா செல்லச்சாமி



மாத்தளையைப் பிறப்பிடமாகவும் அரசர் கேணி இத்தாவில் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மா செல்லச்சாமி 2015.10.18 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தன் ஞானம்மா தம்பதியரின் மகளும், செல்லச்சாமியின் அன்பு மனைவியும், B.B மரியம் (குவைத்) செல்வலட்சுமி (பளை) சிவராசா (மாத்தளை) சிவகுமார் (பளை) ஜெயசோதி (வவுனியா), சிவசாந்தகுமார் (பளை) ஆகியோரின் தாயாரும் பரீட் பாலசுப்பிரமணியம், வசந்தகோகிலா, சிவராசா தயேந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2015) புதன்கிழமை மு.ப11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாத்தளை டங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(64239)

தகவல்
குடும்பத்தினர்

### திருமதி மேரி கில்டா (பேபி) ஸ்ரீபன்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி கில்டா (பேபி) ஸ்ரீபன் 19.10.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீபனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராயப்பு - றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், யாழ்ப்பாணம் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கிளின்ரன் பக்ஸ் (ஜேர்மனி), சுஜி (லண்டன்), றஜி (அனற்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சசி (ஜேர்மனி), நவஜீவா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் டனி, ஸ்ரீவ், லியோ, சுஜீவா, சுஜினா, சுஜிறா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புஸ்பம், ராணி, அருட்சகோதரி ஜெம்மா (திருச் சிலுவை கன்னியர் மடம், திருகோணமலை), லீலா, பரமானந்தம் (ஆனந்தா ஸ்ரோஸ், சில்லாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பிலிப்பையா, சின்னத்தம்பி, பிரான்சிஸ்கா, எட்வேட்ஸ், அருட்சகோதரி மேரிலூயிஸ் (திருக்குடும்ப கன்னியர்மடம்) மற்றும் இம்மனுவல், றோஸ், ஸ்ரனிஸ்லாஸ், ஜெறோம் (பிரான்ஸ்) சென்ஜேம்ஸ் (கனடா), இருதயநாயகி (லில்லி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருட் சகோதரி டொறின் (திருக்குடும்ப கன்னியர்மடம்) அவர்களின் சிறிய தாயாரும், டொறிஸ் சாந்தகுமார் (கொலண்ட்) கில்பேட் லங்ஸ்ரன் (ஜேர்மனி) ஆகியோரின் ஞானத்தாயும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (21.10.2015) புதன்கிழமை அவரது இல்லத்திலிருந்து சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
தொ.இல 077 423 0163

தகவல்:
குடும்பத்தினர்.


# கடலில் மிதக்கும் அரங்கில் ஏழு நூல்களின் வெளியீடு

### *உலக சாதனைக்கு புதிய முயற்சி*

யாழ்ப்பாணம், ஒக்.21
சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியர், திருச்செல்வம் தவரத்தினத்தின் உலக சாதனைப் பதிவுக்கான 7 நூல்களின் வெளியீட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கசூரினா கடலில் சர்வசக்தி மிதக்கும் அரங்கில் முற்பகல் 1:20 மணிக்குதிருகோணமலைகலாசார உத்தியோகத்தர் வி.குண பாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் . மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டச்செயலகத்தின் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. மாலினி கிருஷ்ணானந்தனும், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரன்ஸ், விக்ரோறியாக் கல்லூரி அதிபர் ச.சிவகுமார், காரைநகர் பிரதேச சபைச் செயலர் கு.இரத்தினராசா ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர்.

நூலாசிரியர் ஒரே தடவையில் தனது ஏழு நூல்களான ஈழத்தில் நாக வழிபாடு, மகாவாக்கியம், நீரியல் வளங்கள் (ஜீ.சீ.ஈ. உயர் தரம்), நீர்ப் புவியியல் தேசப்படம் (தரம் 6–13 வரை), புத்திமான் பலவான் (சிறுகதை), அரோகரா மாலை, பஜனைப்பாடல்கள் என்பவற்றை வெளியீடுசெய்யவுள்ளதாகக் காரைநகர் கலை இலக்கிய அறிவியல் நட்புறவாளர் வட்டம் அறிவித்துள்ளது.

இந்த நூல்களின் வெளியீட்டுரை மற்றும் மதிப்பீட்டுரையை நிகழ்த்தவுள்ளோர் விவரம் அரோகரா மாலை– தவத்திரு திருப்புகழ் வேல் சுவாமிகளும், நீரியல் வளம் –யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் துறை விரிவுரையாளர் கு.குணாளன், சிறுவர் கதை –வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ரமேஸ்கண்ணா, பஜனைப்பாடல்கள்– இந்துக்கல்லூரி ஆசிரியர் தி.மு.கலைமகள், சிவஸ்ரீ கதிர்குமார சுவாமி சுமுகலிங் கம் ஐயா, ஈழத்தில் நாக வழிபாடு–மாதகல் சென்ஜோன்செப் வித்தியாலய ஆசிரியர் பா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–ரி6)

# முன்னாள் போராளி நேற்று திடீர் சாவு

முல்லைத்தீவு, ஒக்.21
முன்னாள் பெண் போராளி ஒருவர் நேற்று திடீர் சாவடைந்துள்ளார்.

இறுதிப்போரின்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மகளிருக்குப் பொறுப்பாக இருந்த மருத்துவப் போராளியான திருமதி சசிதரன் தாருஜாவே (வயது – 29) மர்மமான முறையில் மரணடமடைந்துள் ளார்.

புதுக்குடியிருப்பு, மருதமடு, முதலாம் வட்டாரம், கைவேலியைச் சேர்ந்த இவர் முன்னாள் போராளி ஒருவரின் மனைவியும், இரு பிள்ளைகளின் தாயாரும் ஆவார்.

இறுதிப்போரின்போது தாருஜா விழுப்புண் அடைந்து உடல் முழுவதும் காயங்களுடன் வாழ்ந்து வந்தார். குறிப்பாக, கண்பார்வையையும் இழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ–சி)

# ரவி கருணாநாயக்கவா? ரவி கணேசனா? சபையில் சர்ச்சையை ஏற்படுத்தினார் பந்துல

கொழும்பு, ஒக்.21
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் நிஜப் பெயர் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் நேற்று சர்ச்சையை ஏற்படுத்தினார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன.

ரவிகருணாநாயக்கவின் உண்மைப் பெயர் ரவி கருணாநாயக்க ரவிந்திர சந்தேஷ் கணேசன் என்றும், ஹன்சாட்டில் அவ்வாறு பெயர் இல்லையென்று நிரூபிக்கப்பட்டால் தான் பதவி விலகுவதாகவும் அவர் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சின்கட்டளைகள் தொடர்பில் விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே பந்துல குணவர்தன, ரவி கருணாநாயக்கவின் நிஜப்பெயர் தொடர்பில் சர்ச்சையை எழுப்பினார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயரை, ரவி கருணாநாயக்க ரவிந்திர சந்தேஷ் கணேசன் என்று பிரயோகித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல, உறுப்பினரின் பெயரை பந்துல தவறாக உச்சரிக்கிறார் என்றும், ரவி கருணாநாயக்க என்பதே நிதி அமைச்சரின் பெயர் என்றும் சுட்டிக்காட்டினார்.

எனினும், இதை பந்துல குணவர்தன எம்.பி. ஏற்கவில்லை. தான் கூறுவது தான் சரி என்று வாதிட்டார்.

ஹன்சாட்டில், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ரவிந்திர சந்தேஷ் கணேசன் என்றே பெயர் உள்ளது. ஹன்சாட்டில் இவ்வாறு இல்லையென நிரூபித்தால் தான் பதவி விலகத்தயார் என்று லக்ஷ்மன் கிரியல்லவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல பதிலடி கொடுத்தார்.

இதனால் கொதிப்படைந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, இனவாதம் பேச வேண்டாம் என்றும், இவ்வாறு கதைப்பதற்கு தங்களுக்கு வெட்கம் இல்லையா என்றும் கேள்வி எழுப்பினார்.

ஆனாலும், பந்துல எம்.பி. ஓயவில்லை. ஒருவரின் உண்மைப்பெயரைச் குறிப்பிடுவது எப்படி இனவாதம் ஆகும். ஹன்சாட்டில் உள்ள பெயரைக்கூட இந்தச் சபையில் குறிப்பிட முடியாதா என்று வினா எழுப்பினார்.

இவ்வாறு இருவருக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றதால் சபையில் சிறிது நேரத்துக்குக் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. தனது உரையை முடித்துக்கொண்டு பந்துல, சபையில் இருந்து வெளியேறினார். சிறிது நேரத்துக்குப் பின்னர் சபைக்குள் வந்த அவர், சபாநாயகரின் அனுமதியுடன் கருத்து வெளியிட்டார்.

நான் தவறாகப் பெயரை உச்சரித்து விட்டேன். ஹன்சாட்டில் அவ்வாறு இல்லை. மனோ கணேசனின் பெயரிலுள்ள கணேசன் என்றதை ரவியுடன் இணைத்து வாசித்து விட்டேன். இதற்காக நான் கவலையடைகின்றேன் என்றார். (வ–சி)

# கனடா தேர்தலில் ஈழத் தமிழர் ஆதரவுக் கட்சி வெற்றி

றொறன்ரோ, ஒக்.21
கனடாவில் சுமார் 10 ஆண்டுகளின் பின்னர் மாற்றம் ஒன்றை நோக்கி, புதிய தலைவர் ஒருவரை கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையுடன் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளனர்.

தற்போதைய பழைமைவாதகட்சியின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நான் [illegible] எனினும் லிபரல் கட்சி யானது ஜஸ்டின்ஜ பிரதமராகக் கொண்டு தனித்து ஆட்சியமைப்பதற்கு மொத்தம் 338 ஆசனங்களில் 175 ஆசனங்களை பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்திருக்கிறது .

இதில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் லிபரல் கட்சியில் கனேடிய குடியுரிமைபெற்ற இலங்கையரரான ஹரி ஆனந்தசங்கரி தெரிவாகியுள்ளார். ஈழத்தமிழர்களின் வாக்கு இவரது வெற்றியில் கணிசமான பங்கு ஆற்றியிருப்பதாக அறியப்படுகிறது.

இத்தேர்தலில் போட்டியிட்ட 6 ஈழத் தமிழ் வேட்பாளர்களில் ஒருவர் மட்டும் வெற்றி பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் 6 ஈழத் தமிழர்கள் போட்டியிட்டனர். இதில் லிபரல் கட்சி சார்பாக ஸ்காபரோ ரூச்பார்க் தொகுதியில் போட்டியிட்ட வழக்கறிஞர் ஹரி ஆனந்தசங்கரி மட்டும் வெற்றி பெற்றுள்ளார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபை ஈசன் சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் இம்முறை தோல்வியைத் தழுவியுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2015 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

**செல்வி மரியசீலன் கஜித்தா**




அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

ற.பிரசன்னா - 149
சோ.தஜீ - 138
கு. சரண்யா - 136
ஜெ.ஜெனிகாந் - 132
ற.சுதர்சன் - 128
ப.சஞ்சயன் - 121

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**பாடசாலைச் சமூகம்**

(64156)(11,16,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி

**செல்வி வைஷ்ணவி கருணாகரன்**




அவர்கள் 2015 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததை யிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம. இவர் வாழ்வில் மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துவதுடன், இவரின் வெற்றிக்கு உரமூட்டிய அதிபர், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அப்பப்பா, அம்மம்மா, அப்பப்பா, மாமன்மார் மாமிமார், மச்சான்மார், மச்சாள், அண்ணன் நரேஸ்.**

**ஆனைக்கோட்டை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி

**ஜீவகாந்தன் கலைப்பிரியா**

**2015இல் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.**

இவரின் கல்விக்கு வழிகாட்டிய முன்பள்ளி ஆசிரியர்கள் தொடக்கம் இற்றைவரை கல்வி கற்பிக்கும் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் இவர் கல்வியில் பல சாதனைகள் நிகழ்த்த வேண்டும் என வாழ்த்துகிறோம்.

(64154)(11,15)

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

வாழ்த்துவோர்:
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவனும் சண்முகநேசன் இசைச்செல்வி தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய

**செல்வன் ச.குணாளன்**




2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 188 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 05ஆம் இடத்தினையும் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப் பெறவேண்டுமென இறைவனை வேண்டி இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் த.தயானந்தன்அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
**தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, தம்பி, தங்கை, மாமி, மச்சாள் மற்றும் உறவுகள்.**

## மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



| | | | |
|---|---|---|---|
| யோ.மதுர்சன் | - 166 | நே.மதுசாயினி | - 158 |
| ஜெ.அறிவெளினி | - 166 | பா.பிரியங்கா | - 155 |
| ஜெ.பிரியங்கன் | - 161 | ஜீ.சபீசன் | - 152 |

Best Wishes **100 புள்ளிகளிற்கு மேல் பெற்றோர்** Best Wishes

| | | | |
|---|---|---|---|
| ம.வர்ஜிதா | - 145 | ஜெ.சர்மியா | - 136 |
| பு.டிலக்சிகா | - 141 | ம.தசாங்கன் | - 129 |
| யோ.அஜிந்தன் | - 140 | கோ.கேதுசன் | - 109 |
| | | ர.ஜஸ்மி | - 102 |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஆசிரியை **திருமதி கலாரஞ்சினி கோரேஸ்டிலான்** அவர்களையும் பாராட்டிவாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகத்தினர்.**

(63562)(14,15,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிஷன்**

தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து தோற்றி 2015 நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற சாதனையாளர்கள்



**துசானி சிதம்பரநாதன்**
**171 புள்ளிகள்**



**சிவானந்தன் நவிதன்**
**157 புள்ளிகள்**



**டிலானி மனோறஞ்சன்**
**156 புள்ளிகள்**



**நர்சேந்திரன் அதிசயன்**
**155 புள்ளிகள்**

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

**கா.டினோஜா-151,**
**ஜெ.ரஜீம்-142,**
**சி.வைஷ்ணவி-141,**
**உ. துஷ்யந்-122,**
**ஜெ.ஜெதுசன்-117**

ஆகியோரைப் பாராட்டுவதுடன் இவர்களை வழிப்படுத்திய வகுப்பாசிரியர் **கிட்டிணபிள்ளை இந்திரன்** அவர்களுக்கும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றி அறிதலையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

**குடத்தனை வடக்கு**
**குடத்தனை.**

**பெற்றோர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா உதவிப் பொதுச் செயலர் இலங்கைக்கு இன்று விஜயம்

கொழும்பு, ஒக்.21

ஐ.நா அரசியல் விவகாரங்களுக் கான உதவிப் பொது செயலாளர் மிரோஸ்லவ் ஜென்கா ஐந்து நாள் விஜயமாக இன்று கொழும்பு வருகிறார்.

கடந்த மாத இறுதியில் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ-மூனுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதன் தொடர்ச்சியாகவே ஐ.நா உதவிப் பொதுச் செயலாளரின் இலங்கை விஜயம் அமைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நீண்டகால அமைதியைக் கட்டியெழுப்புவதற்காக ஐ.நா நடவடிக்கைகள் தொடர்பில் உதவிப் பொதுச் செயலாளர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் ஐ.நாவின் 70ஆவது



ஆண்டு நிறைவு மற்றும் இலங்கைக்கு உறுப்புரிமை கிடைத்து 60 ஆண்டுகள் கடந்தமை தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் ஐ.நா தினம் கொண்டாடப் படுகிறது. இந்த நிகழ்விலும் அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் மிரோஸ்லவ் ஜென்கா கலந்துகொள்ளவுள்ளார். (வ)

## சஜின் வெளிநாடு செல்ல நிபந்தனையுடன் அனுமதி வழங்கியது நீதிமன்றம்

கொழும்பு, ஒக்.21

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜீன் வாஸ் குணவர்த்தனவுக்கு 5 நள்கள் வெளிநாடு செல்ல கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

மருத்துவ தேவைக்காகவே அவர் சிங்கப்பூர் செல்ல பிரதம நீதவான் கிஹான் பிலபிடிய அனுமதியளித்துள்ளார்.

சஜீன் வாஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த உத்தரவுக்கு இலஞ்ச ஊழல்கள் ஆணைக்குழு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் சந்தேகநபர் வெளிநாடு செல்ல அனுமதியளித்துள்ள தோடு, அவரது கடவுச்சீட்டை அடுத்த மாதம் 3ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. (வ)

# நாடாளுமன்றில் இன்று பிரதமர் ரணில் விசட உரை

கொழும்பு, ஒக்.21

அவன் கார்ட் ஆயுதக்கப்பல் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிரதமர் இன்று விசேட உரையாற்றவுள்ளார்.

அவன் கார்ட் மிதக்கும் ஆயுதக்களஞ்சியம் தொடர்பான விசாரணைகள் நாடு முழுவதும் பல்வேறு அபிப்பிராயங்களைத் தோற்றுவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் நடை பெறும் அவன் கார்ட் நிறுவன நடவடிக்கைகளுக்கு அரச தரப்பும் ஆதரவளிப்பதாகப் பொது மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி மேலோங்கத் தொடங்கியுள்ளது.



மேலும் நேற்று கொழும்பில் செய்தியாளர் சந்திப்பை நடத்திய சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அவன் கார்ட் கப்பல் விவகாரம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் இன்று அவன்ட் கார்ட் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (வ)

## படை

உண்மையை வெளிக் கொணர முடியும்.

★ இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் தனியான ஓர் பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.

★ சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் உள்நாட்டு அரசியல் சாசனத்துக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

★ போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறைமையில், விசாரணைகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய, சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு அவசியமானது. எனினும் முழுமையாக உள்ளக நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறைமையில் ஈடுபடுத்தப் பட்டால், வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையேனும் உள்வாங்க வேண்டும்.

★ நாட்டில் இடம்பெற்ற பெரியளவிலான மனித உரிமை மீறல்களை அரசு பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

இந்தப் பொறிமுறை தென்னாபிரிக்காவின் நீதி மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்யப்படாமல் விசாரணை செய்யப்பட வேண்டும் அல்லது சியராலியோன் சிவில் போரில் அமைக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்று நிறுவப்பட்டு வழக்குகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

★ சனல் 4 ஊடகத்தின் ஆவணப்படத்தில் சில விடயங்கள் நாடகப் பாங்காக அமைந்திருந்தாலும், மிகைப்படுத்தப்பட்ட மொழிப் பிரயோகங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் நீதிமன்றின் ஊடாக, விசாரணை நடத்துவதற்குப் போதியளவு விடயங்கள் ஆவணப்படத்தில் காணப்படுகின்றது.

★ 2009 ஆண்டு மே 18 ஆம் திகதி வெள்ளைக்கொடி ஏந்தி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பாலசிங்கம் நடேசன் ஆகியோர் சரணடையச் சென்ற போது கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சரணடைவதற்கு உயர் மட்டத்தில் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முரண்பட்ட சாட்சியங்கள் பதிவாகியுள்ளன. எனினும் புலி உறுப்பினர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை அடிப்படையில் சட்டவிரோதமானது. இது தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்துச் சுயாதீனமான நீதி விசாரணை செய்யப்பட வேண்டும்.

★ போர் வலயத்தில் பஸ்களில் இராணுவத்தினால் ஏற்றிச் செல்லப்பட்ட பொதுமக்களைக் காணவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இராணுவத்தினர் விசாரணை நடத்துவது பொருத்தமாகாது. சுயா தீன நீதிபதிகளின் பங்களிப்புடன் நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த விசாரணைகளில் ஐ.நாவின் ஹோர்ஸ் டீ ஹொம்பக்ற் முறையில் போருக்கு வெளியே இடம்பெற்ற சர்வதேச குற்றங்களாகக் காணப்படுகின்ற, படையினரின் காவலில் இருக்கும் போது கொலை செய்யப்பட்ட அனைவரினதும் விவரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

★ குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கியோ அல்லது தண்டனை விதித்தோ குற்றச்செயல்கள் ஒப்புக்கொள்ளப் பட வேண்டும்

இவ்வாறு பரணகம ஆணைக் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (வ)

## பாடசாலை

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் தாயார் பணிப் பெண்ணாக் வெளிநாடு சென் றுள்ளார். தந்தையார் வாய் பேசமாட்டாதவர். அவர் தொழில் நிமித்தம் அநுராதபுரத்துக்குச் சென்றுள்ளார். பேத்தியாருடன் இருந்த குறித்த சிறுமி நேற்றுமுன்தினம் காலை பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

எனினும் பிற்பகல் ஆகியும் சிறுமி வீடு திரும்பாததனால் அவரைத் தேடிப் பாடசாலைக்குச் சென்ற போது, சிறுமி பாடசாலைக்கு வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அதனால் அதிர்ச்சியடைந்த சிறுமியின் பாதுகாவலர் அது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச செயலகத்தினரது உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4,21)

## ஹெரோயின்

நேற்று அந்த வழக்கு மன்னார் நீதவான் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன்போது சந்தேகநபருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டது. அதற்கு ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டார். இந்நிலையில், குற்றவாளிக்கு 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து மன்னார் நீதவான் தீர்ப்பளித்தார். (வ-4)

## மூன்று

அனுசரணையுடன் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கோரிக்கை விடுத்தார்.

அதற்கு தீர்மானத்தின் பிரதியை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (வ)

## ரவிராஜ்

தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கடற்படைச் சிப்பாய்கள் 6 பேர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர் களில் ஒரு சந்தேகநபரை அரச தரப்பு சாட்சியாக நியமிப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளதாக, பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

இதன்படி, ஏனைய 5 சந்தேக நபர்களுக்கு எதிராகவும் குற்றப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் தங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். அத்துடன் இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் முச்சக்கர வண்டியும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்து, வழக்கை எதிர்வரும் 03ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், அன்றைய தினம் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரங்களை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலைச் சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரைக் கைது செய்வதற்கு இலங்கைப் பொலிஸார், சுவிற்சர்லாந்து அரசின் உதவியை நாடியுள்ளனர்.

ரவிராஜ் படுகொலையின் முக்கிய சந்தேக நபரான சேரன் என்பவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். இவர் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்று சுவிற்சர்லாந்தில் வசித்து வருகிறார். இவர், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ரவிராஜ் படுகொலைக் குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, இராணுவ அதிகாரி ஒருவரால் வழங்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ அதிகாரி, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவம் தொடர்பாகத் தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அந்த இராணுவ அதிகாரி, வழங்கியுள்ள தகவலின்படி, பிள்ளையானிடம் கொடுக்கப்பட்ட அந்தத் துப்பாக்கி, அவர் மூலம் சேரனுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் விசாரணைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கடந்த 2006 ஆம் ஆண்டு கொழும்பு நாரஹேன்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலைக்கு முன்பாக சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## திறைசேரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் நிறுவப்பட்ட 100 நாள் அரசின் ஆட்சிக் காலத்தில் நிதி அமைச்சர் இந்த யோசனையைச் சமர்ப்பித்திருந்த போது அது நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த யோசனை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ)

## முன்னாள்

குழுவின் அனுமதிப்பத்திரமில்லாமல் சட்டவிரோதமான முறையில் ஒளிபரப்புச் சேவைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்து, அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க அனுமதிக்குமாறு கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமையாளரை மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டிருந்தது. கடந்த தவணை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் மேலதிக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் குறித்த அலுவலகம் மூடப்பட்டுள்ளதாகவும் அதனால் அவ்வலுவலகத்தில் தேடுதல் நடாத்துவதற்கு அனுமதிக்குமாறும் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த ஒளிபரப்பு நிறுவனத்தின் உரிமையாளர் எனக் கூறி இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன நபரொருவர் சட்டத்தரணிகள் மூலமாக நீதிமன்றில் முற்பட்டார். குறித்த ஒளிபரப்புச் சேவையை நடத்துவதற்கு தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை அவர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை.

இதனையடுத்து அவரைப் 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணை முறிகளில் நீதிமன்றம் விடுவித்தது. அத்துடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் விண்ணப்பிக்கப்பட்ட தேடுதல் ஆணையையும் நீதவான் பெ.சிவகுமார் வழங்கினார். கொழும்பிலிருந்து வந்திருந்த தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினராலும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினராலும் குறித்த அலுவலகம் சோதனையிடப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான ஒளிபரப்புச் சாதனங்களைப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் கைப்பற்றினர். (வ-4,103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு எதிரான சூழ்ச்சி தேசிய அரசால் நின்றுள்ளது

## அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான தேசிய அரசு காரணமாக நாட்டுக்கு எதிரான சகல சூழ்ச்சிகளும் நின்று போயுள்ளன என்று அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.



அனுராதபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மீதான நம்பிக்கை காரணமாகச் சர்வதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டு உள்நாட்டிற்குள் விசாரணைகளை முன்னெடுக்கச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது நாம் பெற்ற வெற்றியாகும். உலகில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டிருந்தது. அந்தக் கரும்புள்ளி அழிந்துள்ளது.

கடந்த அரசில் அங்கம் வகித்த மூன்று நான்கு பேர் இவை பற்றி எதனைக் கூறினாலும் தற்போதைய அரசைக் கவிழ்க்க முடியாது–என்று தெரிவித்துள்ளார். (ற)

# சமூக வலைத்தள பதிவுகளை கட்டுப்படுத்தப் புதிய சட்டம்

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

சமூக வலைத்தளங்களில் தனி நபரை இழிவுபடுத்தும் வகையிலான பதிவேற்றங்களுக்கு எதிராகப் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படவுள்ளது என்று நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அத்துடன் வழக்குகளின் கால தாமதத்தைக் குறைப்பதற்கு விசேட நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நீதிஅமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சட்டம் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தொடரின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதேபோன்று நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களை மறுசீரமைக்கும் வேலைத் திட்டங்களும் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

அத்தோடு தற்போது அதிகளவிலான வழக்குகள் மிகவும் கால தாமதம் அடைவதால் குறித்த வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமான வழக்குகளுக்கு விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் சட்டம் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் ஆராயப்பட்டன.



அத்தோடு தற்போது அதிகளவில் சமூக வலைத்தளங்களில் தனி நபரொருவரை இழிவுபடுத்தும் முகமான பதிவேற்றங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இதன் படி இவ்வாறான பதிவேற்றங்களை முன்னெடுப்போருக்கு எதிராகப் புதிய சட்டமொன்றை அரசு கொண்டுவரவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன் மோட்டார் வாகனத் திணைக்களத்துக்கான சட்டங்களிலும் திருத்தங்கள் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டுள்ளோம் – என்றார். (ற)

# வெற்றிக்கான வாய்ப்பு மகிந்தவால் பறிபோனது

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.21

சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் அரசு ஒன்று அமையும் வாய்ப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே இல்லாமல் செய்தார் என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டி உடநுவர டி.பி.விஜேதுங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கண்டியில் நடைபெற்ற இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கு வருமாறு மகிந்த ராஜபக்ச தனிப்பட்ட ரீதியில் அழைத்தார். எனினும் நான் செல்லவில்லை. தலைவர்கள் ஆதரவாளர்களின் பின்னால் செல்லக்கூடாது. தலைவர்களின் பின்னால் ஆதரவாளர்கள் செல்லவேண்டும். அதனை இயக்கக் கூடியவராகத் தலைவர் இருக்கவேண்டும்.

மகிந்தவின் செயற்பாடுகள் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசு ஒன்றை அமைக்க முடியாமல் போனது. இதனால் எனக்கும் பாதிப்பு ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்து, கட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்த பின்னர் மகிந்த கட்சியின் வெற்றிக்கு உதவுவார் என நாம் எண்ணினோம்.



அவர் அப்படிச் செய்திருந்தால், சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் வலுவான அரசு ஒன்றை அமைத்திருக்கலாம். எமது எதிரணிக்கு மைத்திரி வழிநடத்தும் நபர்கள் மீது குற்றம் சுமத்த எதுவும் இருக்கவில்லை. அவர்களை விமர்சிக்க எங்களிடமே விடயங்கள் இருந்தன. கடந்த தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் எடுத்த முடிவு தவறானது. கட்சிக்கு வாக்களித்திருந்தால் சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை அமைத்திருக்கலாம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஒதுங்கிக் கட்சிக்கு உதவினால் அந்தத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்ற முடியும். – என்றார். (ற)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் மத்தி, தோப்பு வாலிபர் அணிகள் சம்பியனாகின ஸ்ரார் வி.கழக தொடரில்





யாழ்ப்பாணம், ஒக். 21

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், 'பி' பிரிவில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியும் சம்பியனாகின.

**ஆவரங்கால் மத்தி எதிர் இளவாலை மத்தி**

நேற்றுமுன்தினம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்ற ஏ பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த வீரராக ஆவரங்கால் மத்திய அணியின் நித்தியானந்தன் தெரிவானார். 'ஏ' பிரிவில் தொடராட்ட நாயகனாக இளவாலை மத்திய அணியின் ஜெகதீசன் தெரிவானார்.

தோப்பு வாலிபர் எதிர் மோகனதாஸ் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த வீரராக அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியின் வினோதன் தெரிவானார். குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.

(ம-11-23)

# இன்றைய மோதல்கள்

**786 வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஒக். 21

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 786 விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.


இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து யங் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

(ம-23)

**மைக்கல் வி.கழகத் தொடர்**

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண அணிகளுக்கு இடையே நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதவுள்ளது.

(ம-422)



# அரையிறுதிக்குள் யங் ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஒக். 21

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 786 விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வட தாரகை அணியை எதிர்த்து யங் ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே கணிசமான அளவுக்கு ஆதிக்கம் செலுத்திய யங்ஸ்ரார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

(ம-23)

# மைலோ கிண்ணத் தொடரில் யாழ். லீக்கின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான இரண்டாம் நாள் ஆட்டங்கள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. குறித்த ஆட்டங்களின் முடிவுகள்.

முதலில் இடம்பெற்ற பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அரியாலை ஜக்கிய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறைசென்.மேரிஸ்அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)



*பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு குறித்த லீக்கினால் அண்மையில் பந்துகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தேவரையாளி இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மா.நவநீதமணி மற்றும் செயலாளர் அ.அருளானந்தசோதி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.* (ம-108)



# நியூட்டன், பொம்மர்ஸ் அடுத்த சுற்றுக்குத் தகுதி
## மைக்கல் வி.கழகத்தின் மாகாண ரீதியிலான தொடரில்

மாங்குளம், ஒக். 21

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வடமராட்சி நியூட்டன் அணியும், வதிரி பொம்மர்ஸ் அணியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

**சென்.தோமஸ் எதிர் நியூட்டன்**

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.தோமஸ் அணியை எதிர்த்து [illegible] தண்டனை உதை என்னும் வாய்ப்பு நியூட்டன் அணியைத் தேடி வந்தது. இதனால் 4ஆவது நிமிடத்திலேயே நியூட்டன் அணி சார்பாக முதல் கோல் பதிவானது. நீடிக்கவில்லை நியூட்டனின் ஆதிக்கம். 13ஆவது நிமி டத்திலேயே பழிதீர்த்தது சென்.தோமஸ். விடு வதாக இல்லை நியூட்டன். அந்த அணியின் மனோகர் 18ஆவது மற்றும் 26ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட முதல் பாதியின் முடிவில் 3:1 என நியூட்டன் அணி முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் முடிவில் 3:1 என வெற்றிபெற்றது நியூட்டன் அணி.

**பொம்மர்ஸ் எதிர் செந்தாரகை**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து செந்தாரகை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி 10ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். அக் கோலே முதல் பாதியின் முடிவுக் கோலுமாக 1:0 என முன்னிலை வகித்தது பொம்மர்ஸ். இரண்டாம் பாதியில் தனது வாய்ப்பை உறுதிப்படுத்த தீவிர முனைப்புக் காட்டியது பொம்மர்ஸ். இரண்டாம் பாதியின் 13ஆவது, 15ஆவது, 18ஆவது, 20ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களை விளாசி அமர்க்களப்படுத்தியது பொம்மர்ஸ். இதனால் ஆட்டநேர முடிவில் வதிரி பொம்மர்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகளை அள்ளினார் மத்தியூஸ்
## மக்களின் தெரிவுவிருது சங்காவிடம்




இலங்கை அணியின் தலைவரும் சகலதுறை வீரருமான மத்தியூஸ் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நடப்பு வருட விருதுகளில் 4 விருதுகளைக் கைப்பற்றியுள்ளார். அவற்றுள் சிறந்த வீரருக்கான விருதும் உள்ளடங்கும். இதன் மூலம் இந்த விருதை, தொடர்ந்து இரண்டாவது வருடமாக வென்ற பெருமையை மத்தியூஸ் பெற்றிருக்கிறார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வருடாவருடம் டெஸ்ட் ஆட்டங்கள், ஒருநாள் ஆட்டங்கள், ரி-20 ஆட்டங்கள் என அனைத்திலும் சிறந்து விளங்கும் வீரர்களைக் கௌரவிக்கும் விதமாக பல பிரிவுகளில் விருதுகளை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் நடப்பு வருடத்தின் நான்கு விருதுகளை மத்தியூஸ் வென்றுள்ளார். சிறந்த வீரர் விருதோடு, சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர், சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த ஒருநாள் ஆட்டங்களின் சகலதுறை வீரர் ஆகிய விருதுகளை மத்தியூஸ் வென்றுள்ளார்.

சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளர் விருது ஹேரத்துக்கும், சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளார் விருது அயந்த மென்டிசுக்கும், சிறந்த ரி-20 துடுப்பாட்ட வீரர் விருது குசால் பெரேராவுக்கும், சிறந்த ரி-20 பந்து வீச்சாளர் விருது நுவான் குலசேகராவுக்கும் கிடைத்துள்ளன. நடப்பு வருடத்தின் வளர்ந்து வரும் வீரருக்கான விருது குசால் பெரேராவுக்கும், மக்களின் தெரிவு விருது குமார் சங்கக்காரவுக்கும் கிடைத்துள்ளன. (ம)

# மேசைப்பந்தாட்டத்தில் சாதித்த
## வல்வை மகளிர் அணிக்குக் கௌரவம்



கரணவாய், ஒக். 21

வடமாகாண மேசைபந்தாட்டத்தில் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்ற வல்வை மகளிர் கல்லூரியைச்சேர்ந்த மாணவியரைக் குறித்த கல்லூரி கௌரவித்துள்ளது.

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்ற இந்தத் தொடரில் 21 வயதுக்கு உட்பட்ட பிரிவினருக்கான தொடரில் எஸ்.கனுஜா வெண்கலப்பதக்கத்தை வென்றிருந்தார். தவிர இதே வயதுப் பிரிவில் அ.மேரி ஆன் திரேசா மற்றும் ந.கிருஜா ஆகியோரும் 12 வயதுப்பிரிவில் மு.வைஸ்ணவி மற்றும் சபர்ணா ஆகியோரும் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். (ம-108)

# இந்துவை வீழ்த்தியது சலஞ்சர்ஸ்

கரணவாய், ஒக். 21

கொம்பாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் துடுப்பாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் உரும்பிராய் இந்து விளையாட்டுக் கழகத்தை 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய உடுவில் சலஞ்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கேதீசன் 38 ஓட்டங்களையும் ஜக்சன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உரும்பிராய் இந்து விளையாட்டுக்கழகம் சார்பில் பிரசாந் மற்றும் ரமணி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

68 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய உரும்பிராய் இந்து அணி 6 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் அருண் 3 இலக்குகளையும், ஜான்சன் ஓர் இலக்கையும் கைப் பற்றினர். (ம-108)

# நாளைக்கு இந்தியாதான் வெற்றிபெறுமாம்
## ஏனென்டா மைதானம் அப்பிடியாம்



இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. மைதானத்தின் நிலவரங்களின்படி இந்த ஆட்டத்தில் இந்திய அணியே வெற்றிபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சேப்பாக்கம் மைதானத்தில் தென்னாபிரிக்கா இதுவரை ஒரேயொரு ஆட்டத்தில்தான் விளையாடியுள்ளது. அந்த ஆட்டமும் 2002 ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது. அப்பொழுது இருந்த தென்னாபிரிக்க வீரர்களில் வில்லியர்ஸ், அம்லா ஆகிய இருவர் மட்டுமே தற்பொழுது விளையாடுகின்றனர். இதனால் கிட்டத்தட்ட மைதானத்தைப்பற்றி அறியாத நிலையிலேயே தென்னாபிரிக்கா நாளை களம் காணுகிறது.

குறிப்பிட்ட நிலவரங்கள் இந்திய அணிக்குச் சாதகமாக அமைந்த போதிலும், ஆடுகளம் பந்துவீச்சுக்குச் சாதகமானது என்பது தென்னாபிரிக்காவிடம் தொடர் செல்லக் கூடிய அறிகுறியாகவே தெரிகிறது. இந்திய அணியின் பந்துவீச்சில் குறிப்பிட்ட அளவு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு
உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கும் மேற்பட்ட

# டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண இளைஞர் யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும்
ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.

உரிய ஏற்றுமதி விலையான ரூ.1500/– & 3000/– வரையிலான

# ரூபா.150/– 350/–மட்டுமே

**2015 ஒக்ரோபர் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில்**

## (புதன், வியாழன், வெள்ளி)

நேரம் : முற்பகல் **10.00** மணி முதல் இரவு **8.00** மணி வரை

**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

ரூ. **150/-** இற்கும், ரூ. **350/-** இற்கும் விற்பனை செய்யும் ரூ. **3000/=** ஏற்றுமதி பெறுமதி கொண்ட **10** இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

**இவ்விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை.**
**சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

* மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பென்ரன் ரூ.150/=Only
* சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் ரூ.150/=Only
* அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் ரூ.150/=Only
* மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் ரூ.150/=Only
* அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.150/=Only
* அவுஸ்திரேலியா டயமன்ட் செயின் ரூ.350/=Only
* பஞ்சாப் பியூட்டி குயின் மாலை ரூ.350/=Only
* அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் ரூ.350/=Only
* கிரிஸ்டல் நெக்லஸ் செட் ரூ.350/=Only
* ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் ரூ.350/=Only
* இத்தாலிய டயமன்ட் தோடுகள் ரூ.350/=Only
* ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் ரூ.350/=Only
* ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் ரூ.350/=Only



# 99% புதிய டிசைன்கள்

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு
ரூபா . 500/– & 10000/– வரை ஆபரணங்கள்

# இடம் : வீரசிங்கம் மண்டபம்

இல.12. கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்

அனுமதி இலவசம் **0776047788**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நிறைய எண்ணெய் இருப்பினும் காற்று வீசினால் தீபம் அணையும். நல்ல செயல்கள் பல இருப்பினும், கெட்ட செயல் ஒன்றால் யாவும் அழியும்.

*— ஒரு வட மொழிக்கவிஞர்.*

# இயற்கை தருகின்ற அருங்கொடைதான் மழை



*ராஜராஜன்*

மழை பெய்வதால் அருவிகள் உருவாகின்றன. நதிகள், ஆறுகள், குளங்கள், காட்டாறுகள், சிற்றாறுகள் என்பன நீர் நிறைந்து பூமியை வளப்படுத்துகின்றன.

மழையைக் கண்டதும் புல், பூண்டு, செடி, கொடிகள், மரங்கள் யாவுமே புதுவாழ்வு பெற்றவை போன்று புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன. காய்ந்து வறண்டு இருந்த பூமியின் மேற்பரப்பில் நிலத்தைத் துளைத் துக்கொண்டு தலையைக் காட்டுகின்ற புதிய, புதிய புல் இனங்களும், செடிகளும் கோடையின் வெப்பத்துக்குப் பயந்து இது நாள் வரைக்கும் பூமிக்கடியில் ஒளிந்து இருந்தனவோ என்ற எண்ணத்தை எமக்குள் ஏற்படுத்துகின்றன.

இயற்கையின் விநோதங்களில் மழைக்கு எப்போதுமே பிரதான இடம் உண்டு. முகில்கள் தமக்குத் தேவையான நீரைப் பூமியிலிருந்து முதலில் எடுத்துக் கொள்ளுகின்றன. பின்னர் மழையாக அந்த நீரைப் பூமிக்கு வழங்குகின்றன. ஆனால் இங்கும் ஓர் அதிசயம் நிகழ் கின்றது. பூமியின் மூன்றில் இரண்டு பகுதியில் சூழ்ந்திருக்கும் சமுத்திரங்கள் உப்பு நீரையே கொண்டிருக்கின்றன. ஆனால் முகில்கள் இந்த நீரை உறிஞ்சி எடுத்த போதிலும் உப்புக் கலப்பில்லாத தூய நீரே மழையாகப் பொழிகின்றது. கடல் நீர் அதன் இயல்பு மாறாமல் மழையாகப் பொழியப்படுமாயின் இந்தப் பூமியின் கதி என்னவாகும் என்பதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கத்தான் வேண்டும்.

முற்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தார்கள். இயற்கையை விரோதிக்கின்ற துணிவு அவர்களிடம் இருந்ததில்லை. இயற்கைதான் தெய்வம் என்றும் அவர்கள் நம்பினார்கள். இதனால்தான் பஞ்சபூதங்களை அவர்கள் துதி செய்தனர்; போற்றி வணங்கினர். கற்களும் மரங்களும்கூட அவர்களது கண்களுக்குத் தெய்வங்களாகத் தெரிந்தன. அவற்றையும் அவர்கள் வணங்கத் தவறவில்லை. கடலை, அவர்கள் தமது அன்னையைப் போன்ற உரிமையுடனும், வாஞ்சையுடனும் அணுகினார்கள். அதில் கள்ளம் கபடம் எதுவும் இருக்கவில்லை. அவர்களின் மாசற்ற அன்பினால் உருகிப் போன இயற்கை அன்னை மனிதர்கள் கேட்டதை எல்லாம் தாராளமாகவே அள்ளிக் கொடுத்தாள். இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட விவசாயத்தில் அதிக விளைச்சல் கிடைத்தது. கனி மரங்கள் சுவை குன்றாத கனிகளை அள்ளி அள்ளிக் கொடுத்தன. கடல் அன்னை தன்னை நாடி வருபவர்கள் முழுத் திருப்தியுடன் திரும்பிச் செல்லும் வகையில் சகலதையும் குறைவின்றி வழங்கினாள். அப்போதெல்லாம் வாகனங்களின் புகை இல்லை. தொழிற்சாலைகளிலிருந்து புகையும், கழிவுகளும் வெளிவிடப்படவில்லை.

> **முற்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தார்கள். இயற்கையை விரோதிக்கின்ற துணிவு அவர்களிடம் இருந்ததில்லை. இயற்கைதான் தெய்வம் என்றும் அவர்கள் நம்பினார்கள். இதனால்தான் பஞ்சபூதங்களை அவர்கள் துதி செய்தனர்; போற்றி வணங்கினர்.**

கொடிய இரசாயனப் பாவனை அறவே இல்லை. மனிதர்கள் உடல் உழைப்பைக் கொண்டு சகல காரியங்களையும் மேற்கொண்டதால் நோய்களால் எளிதில் அவர்களை அணுக முடியவில்லை. இதனால் நோயற்ற வாழ்வை அவர்களால் வாழ முடிந்தது. அன்று மாதம் மும்மாரி பெய்ததாகக் கூறுவார்கள். ஆனால் இன்றோ ஆண்டுக்கு ஒரு மாரி என்பது கூட பொய்க்கும் நிலை யில் உள்ளது.

மழைப்பொழிவு அருகியதன் காரணமாக நிலத்தடி நீரின் வளம் சுருங்கிப்போய் விட்டது. இதனால் மக்கள் நீரைத்தேடி அலைந்து திரிய வேண்டியதொரு நிலை உருவாகி விட்டது. இனியொரு உலகப் போர் ஆரம்பிக்குமேயானால் அது நீருக்கானதாகவே இருக்குமென அறிவியல் மேதைகள் உறுதியாகக் கூறிவிட்டனர். அந்த அளவுக்கு நீர் அரியதொரு பொருளாக மாறிவிடப்போகின்றது. இதேவேளை அதிகரித்த இரசாயனப் பாவனை, ஒயில் கழிவுகள் ஆகியவற்றால் குடாநாட்டின் நிலத்தடி நீர் மோசமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கான மார்க்கம் வெகுதொலைவில் கூடத் தென்படவில்லை. கிடைக்கின்ற மழை நீரைக் கூட மனிதர்கள் உரிய வகையில் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. மழை நீர் சேமிப்பதற்கு எவருமின்றி வீணே கடலுடன் கலப்பதை வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமே அவர்களால் முடிகின்றது.

மேலும் இயற்கையை மனிதர்கள் மெல்ல மெல்லச் சிதைத்து வருவதால் பருவநிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.


இயற்கையின் அருங்கொடையான மழை இல்லையேல், இந்தப் பூவுலகில் எதுவுமே இயங்கமுடியாது. மழை அள்ளி வழங்குகின்ற நீர், இந்த உலகை வாழ வைக்கின்றது. சூரிய பகவான் தமது ஒளிக்கதிர்களால் உலகுக்கு உயிர் கொடுப்பதைப் போன்று, வருண பகவானும் வாழ்வு கொடுக்கின்றார். பஞ்ச பூதங்களில் ஒன்றான நீருக்கு எப்போதுமே முதலிடம் உண்டு. மழைதான் இந்த நீரை வழங்குகின்றது.

உலகிலே மழையைக் காணாத பாலைவனங்கள் ஏராளமாக உள்ளன. இயற்கையின் வஞ்சனைகளில் இதுவுமொன்று. ஒரு காலத்தில் யாழ்.குடாநாடு கூட பாலைவனமாக மாறிவிடப்போகின்றது என்று கூறப்பட்டது. இங்கு மழை வீழ்ச்சி குறைந்து காணப்படுவதே இதற்கான பிரதான காரணமாகும்.

ஆகவே எமது உயர்வும், தாழ்வும் மழையைப் பொறுத்ததே என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இதனால் மழையைப் போற்றுவோம். அதன் வரவை இன்முகத்துடன் வரவேற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க, சிந்திக்க வைத்த கார்ட்டூன் ஓவியர் சிரித்திரன் சுந்தர்






சித்திரம் ஒரு கலை மட்டுமன்றி ஒரு மொழியுமாகும். சமுதாயத்தின் பல்வேறு தேவைகளுக்கு இந்த ஓவிய மொழி பயன்பட்டு வருகிறது. இந்தச் சித்திரத்தின் ஒரு வடிவமே கார்ட்டூன் (cartoon) சித்திரமாகும். இது நையாண்டிச் சித்திரம் என தமிழில் அழைக்கப்படுகின்றது. இந்தக் கார்ட்டூன் சித்திரங்கள் ஆரம்பத்தில் இருபரிமாண சித்திரங்களாகக் காணப்பட்டன. பிற்காலத்தில் இந்தப் பண்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. 19 ஆம் நூற்றாண்டில் இதழ்கள்(சஞ்சிகைகள்) மற்றும் செய்தித்தாள்களில் நகைச்சுவையான விடயங்களைத் தெரிவிக்கும் சித்திரங்களாகக் காணப்பட்டன. பிற்காலத்தில் கார்ட்டூன் சித்திரங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுக் கொண்டன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கார்ட்டூன் சித்திரமானது பெரும்பாலும் செய்தித்தாள்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி பெற்றது. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஓப்ரிகொலட், யூனஸ், விஜயசோமா போன்ற கார்ட்டூன் ஓவியர்கள் ஆரம்பக் கால கலைஞர்களுள் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுடைய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கார்ட்டூன் ஓவியங்களை வரைந்த ஓவியராக சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்பட்ட சிவஞானசுந்தரம் கருதப்படுகிறார். 2016 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரும் சித்திரபாட தரம்11 கலைத்திட்டத்தில் சிங்கள கார்ட்டூன் ஓவியர்களுக்கு நிகராக இவரது படைப்புகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.




தமிழ்பட காதல் காட்சிகள்


1924 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கரவெட்டியில் பிறந்த சி.சிவஞானசுந்தரம், பம்பாயில் சேர்.ஜே.ஜே.கல்லூரி என்ற நிறுவனத்தில் ஓவியப்பயிற்சி பெற்றதுடன், இந்தியாவில் இருந்த காலத்தில் இராஜாராம் என்பவரிடம் உருவம் வரைதல் தொடர்பான பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்.

ரேகைச் சித்திரங்களை வரைவதில் அதிக ஆர்வம் காட்டிய இவர், பிரதிமை ஓவியங்களை தைல வர்ணத்தில் வரையும் திறனையும் பெற்றிருந்தார். இருப்பினும், கார்ட்டூன் சித்திரங்களே இவரது விருப்பத்துக்குரிய தெரிவாக அமைந்திருந்தன. இவர் "லோர்சத்த" என்ற மராட் டியப் பத்திரிகையிலும், தினகரன், விரகேசரி போன்ற இலங்கைப் பத்திரிகைகளிலும், பிளிட்ஸ் (Blitz), கொஞ்ச் (Conch) என்ற இந்திய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் கார்ட்டூன் சித்திரங்களை வரைந்துள்ளார். அத்தோடு 1962 ஆம் ஆண்டிலிருந்து 33 வருடங்கள் சிரித்திரன் என்ற நகைச்சுவை மாத இதழை நடத்தி வந்தார். இதற்கான சித்திரங்கள் முழுவதும் இவரால் வரையப்பட்டவையாகும்.

இதனால் இவர் சிரித் திரன் சுந்தர் என்று அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, தட்டா தெருச் சந்தியில் இவரது சிரித்திரன் அச் சுக்கூடம் அமைந்திருந்தது.

ஒரு பத்திரிகையில் கார்ட்டூன் ஓவியரைச் செய்தி ஓவியர் (Editorial Artist) என்று அழைப்பார்கள்.




வாசகர்கள் பத்திரிகையைப் படிக்கத் தவறினாலும் கார்ட்டூன் சித்திரங்களைப் பார்க்கத் தவறுவதில்லை. கார்ட்டூன் ஓவியர் அன்றாட அரசியலைக் கடைந்தெடுத்துச் சுவை சுருக்கமாகத் தருவதால் வாசகர்கள் சுவைத்து ரசிக்கின்றனர். கார்ட்டூன் சித்திரங்கள் வாசகர்கள் மத்தியில் பார்க்கத்தூண்டும் ஆவலை ஏற்படுத்துவதோடு, ஆழமான கருத்தினூடாகச் சிந்திக்கவும் தூண்டுகிறது. இதற்குச் சிறந்த உதாரணமாக சிங்கள கார்ட்டூன் ஓவியராக 'ஒப்ரிக் கொலட்' வாழ்ந்த காலத்தில் இலங்கை அரசியல்வாதிகள் பாம்பின் படத்தைக் கண்டு அஞ்சுவது போன்று 'கொலட்'டின் கார்ட்டூன்களைக் கண்டு அஞ்சினர்.

சிரித்திரன் சுந்தரின் கார்ட்டூன் சித்திரங்களும் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளை வெளிக்கொண்டுவருவதாகவே இருந்து வந்தன. அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழர் மீதான இன ஒடுக்குமுறை அவரது படைப்புகளில் செல்வாக்குச் செலுத்தியது. 'இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த அன்றே தமிழ் இனத்தின் உரிமைகளை உரியும் படலமும் ஆரம்பமானது. உரிமை ஒவ்வொன்றாகக் களையப்படும்போது நானும் எனது கார்ட்டூன் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தேன்' என சுந்தர் குறிப்பிடுகின்றார்.

சிரித்திரன் சுந்தரின் கார்ட்டூன் பாத்திரங்களில் "சவாரித்தம்பர்", "சின்னக்குட்டி", "மிஸ்டர் அன்ட் மிஸ்ஸிஸ் டாமோடிரன்", "மைனர் மச்சான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. இந்தப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சமூகத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதாக அமையும். குறிப்பாக மைனர் மச்சான் பாத்திரம் கட்டிளமைப் பருவ இளைஞர்களின் தவறுகளையும், மிஸ்ஸிஸ் டாமோடிரன் பாத்திரம் ஆங்கில மோகம் கொண்ட தமிழரின் வாழ்க்கையையும், விமர்சிப்பதாக இருக்க சவாரித்தம்பர் பாத்திரம் தமிழ் சமூகத்தில் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளையும் சுட்டிக்காட்டியது. இதேவேளை–இவரது சித்திரகானம் என்ற கருத்தோவியத்தொடர் பிரபல்யமான சினிமாப் படங்களைத் தலையங்கமாகக் கொண்டு சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது. கார்ட்டூன் சித்திரக் கலைஞர்களுக்கு திறமைக்குப் புறம்பாகத் துணிவும் மிக அவசியமாகும். அவர்கள் சமூக மாற்றத்துக்கு சித்திரத்தை ஆயுதமாகப் பயன்படுத்துபவர்கள் ஆவர்.

இந்த வகையில், துணிவுடனும் திறமையுடனும் படைப்புக்களை பிரசவித்த சிரித்திரன் சுந்தர் எம்மை விட்டுப் பிரிந்து 19 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், அவர் தனது படைப்புகளினூடாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய நற்பணியையும், அவரது படைப்புகளின் சிறப்புக்களையும் எதிர்காலச் சந்ததி அறியத் தருவது எமது ஒவ்வொருவரது கடமையாகும்.

**து.துசியந்தன்**
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்) யாழ்ப்பாணக் கல்வி வலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

# கற்பகவல்லியைக் கரம்பிடித்த வீரமணி ஐயா

## ஒரு காத்திரமான கலைஞர்

சரஸ்வதி வாலாயம் நிறைந்த ஒரு சாஸ்திரிய சங்கீத நடனக்கலைஞன் இன்றும் உலகெங்கணும் வாழ்ந்து கொண்டிக்கின்றார் என்றால், அத்தகு வாழ்வுக்கு வரமளித்தது கற்பகவல்லி என்ற இராகமாலிகை உருப்படியே ஆகும்.
பட்டி தொட்டியெல்லாம் எட்டி இசைபாலிக்கக் கட்டிஅரவணைத்தபாடல்கற்பகவல்லியென்ற கல்பிதமான பாடலே.

**இயலிசை**

அபாரமான கற்பனையும், ஆலிக்கும் அபிநயமும், விவரமான சங்கீதமும், வேண்டிய எதுகைமோனைச்சந்தங்களும், உபகாரமாகப் பரோபகாரம்செய்தஇணுவையூர்கலாநிதியே வீரமணிஐயா அவர்கள். இயலோடுஇசையும், இவையிரண்டுமே சோபிப்பதாய் வாயிலே ஆறாகி வரலாற்றுக்குப் பக்கமமைத்த இயலிசை வாரிதியே மகாவித்துவான், முதுகலைமாணி, இணுவையூர் ம.த.ந. வீரமணி ஐயர் அவர்கள். வாய் திறந்தால் தமிழ் உதிரும், கண்ணை மூடினாலோ இசைபெருகும், கையை எடுத்தாலோ அபிநயம் விளங்கும், வாயும்கண்ணும்கையும்சேர்ந்து விட்டாலோ கலைமகள் கடாட்சம் புரிவாள். பிறகு என்ன, பேரின்பம் ஊற்றெடுக்கும். இயலுக்கும் இசைக்கும் வீரமணி ஐயா கொடுத்த வரம் போல, வேறு எவருமே கொடுத்ததில்லை.

**பிறப்பு**

இணுவிலூரில் பேறாக வாழ்ந்தவர்களான பிரம்மஸ்ரீ ம.த. நடராஜா ஐயர், ஸ்ரீமதி சுந்தரம்பாள் தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வராக1931ஆம்ஆண்டு ஒக்ரோபர்மாதம் 15 ஆம் திகதி பிறந்தார்.

**கல்வி**

புராதன ஆன்மிகச் சிறப்புக்களைத் தாங்கிய தற்போதையஇணுவில்இந்துக்கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று, இசை நடனம் ஆகிய துறைகளில் நாலாண்டு கற்கை நெறிகளில் பயில்வதற்காகத்தமிழகம்சென்றார்.அங்குகலாகேத்திரா நடனப் பள்ளியில் சேர்ந்து புகழ்பெற்ற ருக்மணி அருண்டேல் அம்மையாரின் சீடனாகிப் பரிபூரண நடன விற்பன்னரானார். அத்துடன், இசைத்துறையிலும் புகழ்பெற்ற ஜாம்பவான்களான, செம்மங்குடி, மதுரைமணி, ரங்காச்சாரியார், தண்டபாணி தேசிகர், கல்யாண கிருஷ்ணபாகவதர், முசிறி சுப்பிரமணிய ஐயர் போன்றோரிடம் ஆங்காங்கே தனித்துவமாக இசை நுணுக்கங்களை மிகவும் பொறுமையாகவும் பணிவாகவும் கசடறக் கற்றார். இசையிலும் நடனத்திலும் தமிழகத்தில் பேரும் புகழும் பெற்றவராய் நாடுதிரும்பினார். அந்தச் சமயம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அன்னையின் அழைப்பில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் முன்னதாகப் பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிலும் மொத்தமாக 33 வருடங்கள் நடன விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கலைத்துறைக்கு உயிரூட்டினார். எந்த மதமாகினும், எந்த மொழியாகினும், எந்த மாந்தராயினும், கலைக்குப் பங்கமில்லாமல் மலையாகப் பணியாற்றினார். மலைகளைக் குடைந்து சிலையாக்கினார். சிலைகளை அழகான கலையொழுகு சிற்பங்களாக்கினார். சிற்பங்களுக்கு இசை கொடுத்தார். இசை கொடுக்க, சிற்பங்கள் உயிர்பெற்றன. உயிர்பெற்ற சிற்ப ஓவியங்களில் ஒன்று, தன்னைப் படைத்த சிற்பியையே காதலிப்பதாக வீரமணி ஐயாவின் அபாரக் கற்பனைகளை இந்தப் பாடல்மூலம் அனுபவிக்க முடியும். என்ன மாதிரியான கற்பனை, காதல் கரை புரண்டு ஓடுகிறது. சிற்பியும் அழகு, சிற்பமும் அழகு. அவற்றைப் பார்க்கும்போது யாவருமே அழகு. பாடினால் இசையும் அழகு.

**பல்லவி**

மோகன ஓவியம் நீ படைத்தாய் எந்தன்
மோகத்தைத் தூண்டியே காதல் தந்தாய்

**அனுபல்லவி**

தாகமும் கொண்டேன் நான் தழுவி
அணைத்திடவே
வேகமாய் வாராயோ வேளையில் ஓவியனே,

**சரணம்**

செங்கரும்பு கொண்டு செவ்விதழ் தீட்டி
வைத்தாய்
அங்கு தவழ் அமுதம் அருந்திட நீ வருவாய்
சங்கு தவழ் கழுத்தில் மங்கல நாண்பூட்டி
மங்கை என்னையும் இந்த மாநிலத்தில் மருவ

**கற்பகவல்லி**

திருமயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயக் கர்ப்பக்கிரகத்தில் அருள்பாலித்து அரவணைக்கும் கற்காம்பிகையாம் கற்பகவல்லியைக் கண்டு ஆனந்தித்துக் கண்ணீர் மல்கிய வீரமணி ஐயா, மனமுருகிப் பாடிய பாடல்தான் இராகமாலிகை உருப்படியான 'கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன், நற்கருதியருள் வாயம்மா' என்ற பல்லவியைக் கொண்ட தேனமுதுப்பாகு ஆகும்.
ஆனந்தபைரவி, கல்யாணி, பாகேஸ்ரீ, ரஞ்சனி ஆகிய நான்கு இராகங்களை இலாவகமாகக் கையாண்டு, பவ்வியமாக சாகித்தியத்தில் குழைத்து, பிரபல பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் இதமான குரலில் பதமாகி வீரமணி ஐயாவையும், எம்மையும் ஒருங்குசேர வணங்க வைத்த பக்தியிசைப்பாடல் இதுவாகும். உலகெங்கும் ஓங்கி ஒலிக்கும் பாடல் இதுவாகும்.

**சுட்டிபுரம்**

டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் இசைக் கச்சேரிக்காக வரணி சுட்டிபுரம் எல்லாமே மக்கள் கூட்டத்தில் மிதந்ததென்று சொல்லலாம். சீர்காழி கோவிந்தராஜனும் அவர்தம் குழுவினரோடு வீரமணி ஐயாவும் இணைந்து கொண்டனர். இவர்கள் சுட்டிபுரத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது, மாட்டு மந்தைகள் குறுக்கிட்டு வழியை மறித்து விட்டன. போகமுடியவில்லை. சுட்டிபுரம் கண்ணகியின் பரிவாரங்களோ இவையெனக்கருதியகோவிந்தராஜன் வீரமணி ஐயாவைப் பார்த்தபோது வீரமணி ஐயாவின் வாயிலிருந்து சொரிந்த பாடலிது. பாருங்கள். தேஷ் இராகத்தில் தேனாகிறது.

**பல்லவி**

சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே
கண்ணகியே
கட்டியுந்தன் கால் பிடித்தேன்.
கருணைக் கண்ணால் பாருமம்மா

**அனுபல்லவி**

பட்டிப்பசு இனங்களெல்லாம் பாலாபிசேகம்
செய்யும்
மெட்டி கொஞ்சும் பாதமலர் மேதினியில்
தாருமம்மா


**சரணம்**

பாடிப்பாடிப் பக்தி செய்து பரவசமானேனம்மா
நாடி விழிநீர் சொரிய நானுருகி
நின்றேனம்மா
தேடியுனைச் சரணடைந்தேன் தேவியே
கண்ணகியே
ஏடிலங்கும் ஏரிலங்கும் ஏழிசைத்
தமிழிலங்கும்

ஆம்! கோவிந்தராஜனின் கணீரென்ற குரலில் சுட்டிபுரம், அன்றைய தினம் இலங்கை முழுவதுமாக வரம் கொடுத்ததெனலாம்.
1957 இல், திருமயிலைக் குறவஞ்சி நாட்டிய நூலும், 1965 இல் மகாராஜபுரம் சந்தானத்தால் பாடப்பெற்ற, சாரங்கன் மருகனே எனத் தொடங்கும் இராகமாலிகை உருப்படியும், நல்லூர் நாதம் கேட்குதடி என்ற இலங்கைத் திரைப்படமான 'தெய்வம் தந்த வீடு' திரையிசைப்பாடலும், தன் மனைவியின் பிரிவு தாங்காது, 'உருகி உருகி உனை உளமாரப் பாடுவேன், அருகில் வந்தே எனக்கு ஆறுதல் தாராயோ' என்ற பாடலும் மிகவும் கனதியானவை!!!

**பக்தியிசை**

கோண்டாவில் [illegible] அம்மன், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்த சுவாமியார், இணுவில் மஞ்சத்தடி முருகன், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார், இணுவில் காரைக்கால் சிவன், இணுவில் இளந்தாரிப் பிள்ளையார், மருதனார்மடம் பல்லப்ப வைரவர், மானிப்பாய் மருதடி விநாயகர், நல்லூர் முருகன், சந்நிதி முருகன், மாவிட்டபுரம் கந்தசுவாமியார், வண்ணை வைத்தீஸ்வரர், வண்ணை வெங்கடேஸ்வரர், பொலிகண்டி கந்தவனநாதர், பொன்னாலை வரதராஜப்பெருமாள், திருக்கேதீஸ்வர நாதர், கோணேஸ்வரர், கதிர்காம முருகன், மாவிட்டபுரம்கந்தன், கீரிமலை நகுலேஸ்வரர், அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளைார், அளவோலைப் பிள்ளையார், பெருமாக்கடவைப் பிள்ளையார், குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார், நல்லூர் கைலாச பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார், பன்றித்தலைச்சி அம்மன், வல்லிபுரத்தாழ்வார், நயினைநாகபூசணி அம்மன், காரைநகர் சிவன், சுன்னாகம் ஐயனார் என முந்நூறு ஆலயங்களைப் பற்றி வரலாற்றோடு பாடல் புனைந்துள்ளார்.
சிறப்பாக , 72 தாய் இராகங்களிலும், 175 தாளங்களிலும் இசை உருப்படிகளை ஆக்கிய பெருமையை, மாம்பலம் சிவா நடராஜ் சகோதரர்களும், திருப்புன் கூர்பி.ஜி.முத்துக் குமாரசாமி, இராமநாதன் இணை தவில் விற்பன்னர்களும் வியந்து பாராட்டியமை வரலாற்றில் பதிவாகியுள்ளது.
கர்நாடக இசை, நடனம் இரண்டிலுமாக (DOUBLE DIPLOMA IN DANCE & MUSIC) டபிள் 'டிப்ளோமா' தகைமைகளைக் கொண்டு இயற்றுறையையும் அரவணைத்து இலங்கை வரலாற்றிலே 5000 உருப்படிகளையும், 500 க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களையும், 200க்கும் மேற்பட்ட பட்டங்களையும், கௌரவங்களையும்பெற்றுள்ளமையாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட நடனத்துறை வருகை தரு விரிவுரையாளராக அணி செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.
ஒருமுறை ஐயாக்கண்ணு தேசிகரின் தாளமாலிகைப் பல்லவிக்கு, வீரமணி ஐயா பொருத்தமான சாகித்தியத்தை இராக சந்தம் பொருந்தும்படியாக அமைத்து கின்னஸ் சாதனையாகப் பதிவு செய்தார்.
இத்தகு கலைமாமணி, சாகித்திய சாகரம் கவி குஞ்சரப் பாரதி, இயலிசை வாரிதி, மகாவித்துவான் [illegible] கேசரி அமரர் ம.த.ந.வீரமணி ஐயா [illegible]10.08 ஆம் திகதி இந்த உலக சாம்ராஜ்ஜியத்திலிருந்து விடைபெற்று, அந்த உலகின் அதிபதியானார்.



டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் இசைக் கச்சேரிக்காக வரணி சுட்டிபுரம் எல்லாமே மக்கள் கூட்டத்தில் மிதந்ததென்று சொல்லலாம். சீர்காழி கோவிந்தராஜனும் அவர்தம் குழுவினரோடு வீரமணி ஐயாவும் இணைந்து கொண்டார். இவர்கள் சுட்டிபுரத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது மாட்டு மந்தைகள் குறுக்கிட்டு வழியை மறித்து விட்டன. போக முடியவில்லை. சுட்டிபுரம் கண்ணகியின் பரிவாரங்களோ இவையெனக் கருதிய கோவிந்தராஜன் வீரமணி ஐயாவைப் பார்த்த போது வீரமணி ஐயாவின் வாயிலிருந்து சொரிந்த பாடலிது.

**இனிமேல்**


வடமாகாண சபை, இவரையும் இவர் போன்ற மேதாவிகளையும் முழுஅளவில் விவரமாக ஆவணப்படுத்த வேண்டும்.!!
பாடத்திட்டங்களில் இவரது இசை, நடன, நாட்டிய நாடக உருப்படிகளைப் புகுத்துதல் அவசியமாகும்!
இசையரங்குகளில் இவரது பாடல்களை எல்லோரும் மனமுவந்து பாடவேண்டும்.!!
இவரது [illegible] அளவிலான சிலையை, பொருத்தமான இடத்தில் நிறுவ வேண்டும். எப்போதாவது ஒரு நாள் அது கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்று அபிசேகமே இனி

## எமது இளம் சமூகத்தினரை உய்விக்கும்

சாம் ரமேஸ்குமார்





**சை**வமொருசமயம்கிடையாது.அதுவொரு மேன்மையான வாழ்க்கை முறை. அந்த வாழ்க்கை முறையின் புனிதத்தன்மைக்கு மேலும் வலுச்சேர்க்கும்முகமாக, சைவ வாழ்க் கையின் கனம் தாங்கிய பக்திப் பிடிப் பாக இன்று வரை எஞ்சி நிற்பவை சமய குரவர் களின் தேவா ரத் திருமுறைகள் மட்டுமே என்பதில் சைவ பக்தர்கள் பெரும் மகிழ்ச்சி கொள்கின் றார்கள் எனலாம்.

சமய குரவர்கள் என்றாலே, அதிலும் திருஞான சம்பந்தரின் அற்புதமான திருப்பதிகங்கள் எமது கல் நெஞ்சங்களையும் இறை பக்தியால் கரைத்து எம்மை எமது ஆன்மாவோடு லயமாகச் செய்யும் வல்லமை பொருந்தியது. அத னால் தான் உமாதேவியாரிடம் ஞானப்பாலையும் பரமசிவனிடம் பொற் தாளமும் முத்துச் சிவிகையும் பெற்று பரமசிவன் குடும்பத்தில் ஒருவனாக இன்றும் திருஞானசம்பந்தரால் தி கழ முடி கின்றது.

ஆதி சங்கராச்சாரியார் திருஞானசம்பந்தரை திராவிட மழலையென்றும் –சேக்கிழார் திரு ஞானசம்பந்தரை வானவர் நாயகர் மகனார் என்றும் –நஞ்சனி கண்டத்தர் தம் திருமகனார் என்றும் –அதாவது இறைவனின் மகனென்றும் போற்றியுள்ளனர். தனது தேவாரத் திருமுறை யால் சிறு வயதிலேயே ஆன்மிகப்புரட்சி செய்த திருஞானசம்பந்தரைப் போன்ற தவப்புதல் வரை இதுவரை உலகம் கண்டதில்லை. அந்த அளவுக்கு அவர் மகிமை மேலோங்கி நிற் கின்றது.

தற்கால உலகப்போக்கின் நிமித்தம், இளம் சமூகத்தினரிடம் இந்தத் திருமுறைகளைப் பக் தியுடன் படிக்கும் தன்மை வெகுவாக அருகி விட்டது. பக்தியொன்றையே குறிக்கோளாக மட்டும் சிந்திக்கத் தூண்டுவது இந்தத் திரு முறைகளே. அதை எமது மாணவச் செல் வங்கள் மத்தியில் வேரூன்றச் செய்து, இனிவரும் இளம் சமூகத்தினரை நற்பாதையில் வழிநடத்துவதற்கு பெற்றோர்களும், ஆசிரியர் களும், சமய ஆர்வலர்களும் முன்வர வேண் டும். ஏனெனில் தீமை எந்த வடிவிலும் மனி தனை ஆளலாம். அதற்கு எந்தவொரு வரை யறையும் கிடையாது. இதில் அளவுக்கதிக மாய் பலிக்கடாக்களாவது குறிப்பாக எமது இளம் சமூகத்தினரே. அதனால் நாம் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

மாணவச் செல்வங்களை மிக எளிதாக பக்தி யில் எழுச்சி கொள்ள வைப்பது திருஞான சம்பந்தரின் பதிகங்களே ஆகும். திரு நீற்றுப்பதிகம், நமச்சிவாயப் பதிகம், கோளாறு பதிகம் என்று அவர் பாடிய திருப்பதிகங்களை நாம் எண்ணிக் கொண்டே போகலாம். அதிலும் திரு நீற்றுப்பதிகம் தீமையின் மீதிருக்கும் எமது எண்ணங்களை நீறாக்கி பின்னர் எமது சித்தத்தைத் தெளிய வைத்து, எம்மை யெல்லாம் சிவமாக்கும் பதி கமாகும். மாயையெனும் சம்சாரக் கடலில் இருந்து எம்மைக் கரை சேர்க் கும் துடுப்பு என இந்தப் பதிகத்தைக் குறிப்பிடலாம்.

வளர்ந்து வரும் மாணவச் செல்வங் களை ஒன்றிணைக்கும் களமாக பாட சாலைகளும், கல்லூரிகளுமே பெரும் பாலும் பெரும் பங்கு வகிக்கின்றன. வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமை களில் பெரும்பாலான பாடசாலை களில் காலைப் பிரார்த்தனை நடை பெறுகின்றது. அங்கு வழமையாக சிவபுராணம் படிக்கப்படுகின்றது. அதனுடன் இணைத்து திருஞான சம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் அது மாண வர்கள் மத்தியில் விதையாக விழுந்து விருட்சமாகி விடும் என்பதில் எந்த வித ஐயமு மில்லை.

சைவத்தை வளர்த்த கல்விமான்களில் மானிப் பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதி பரான சிவபெருமான் மாஸ்ரர் என அழைக் கப்படும் குமாரசாமி சண்முகநாதன் வாத்தி யாரும் ஒருவர். அவர் தன்னுடைய சேவைக் காலத்தில் வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடக்கும் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகத்தை' காலம் தவறாது அவர் மாணவருக்குச் சொல் லிக்கொடுத்ததும் – மாணவர் அதைப்படித்ததும் நான் கண்டு கேட்டறிந்த விடயமாகும். திரு நீற்றால் ஒவ்வொரு மாணவனின் நெற்றியும் வாரத்தில் ஒரு முறையாவது நிறைந்திருந்தது அந்தக் கல்லூரியின் சிறப்பான அம்சமே.

இப்படிப்பட்ட முன் மாதிரியான நிகழ்வுகளை ஏனைய பாடசாலைகளும் கல்லூரிகளும் ஆர்வத்துடன் ஆரம்பித்தால் மாணவச் செல் வங்களிடம் நல்ல பக்தியையும் ஒழுக் கத்தையும் எம்மால் நிலைநாட்ட முடியும்.

தீமையெனும் புழுதியிலிருந்து எம் தேசத் தையும் எமது மாணவச் செல்வங்களையும் நாம் காப்பாற்ற வேண்டுமானால் எல்லோர் இதயங்களிலும் திருஞானசம்பந்தரின் திரு நீற்றுப் பதிகத்தால் அபிசேகம் செய்ய வேண்டும். அதுவே சைவ வாழ்க்கையிலுள்ள ஒவ்வொருவரின் புனித கடமையாகும்.

**"திருவாலவாயன் திருநீறே"**








கம்பிகளின் மொழி பிறேமின் 'காய்ந்துபோகாத இரத்தக் கறைகள்' நூல் யாழ். கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன்குழுமத் தலைவருமான ஈ.சரவணபவனால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை மானங்கனை இளங்கதிர் கலாமன்றத்தின் அனுசரணையுடன் நெல்லியடி உதயன் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் நூலை வெளியிட்டு வைக்க நூலின் முதற்பிரதியை திருமதி கணேஸ் வேலுமணி பெற்றுக் கொண்டார். அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கல விளக்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பருத்தித்துறை பிரதேச செயலரும்– கவிஞருமான இ.த.ஜெயசீலன், உதயன் பணிமனையின் நெல்லியடிக்கிளையின் பொறுப்பாளர் பா.ரகுநாதன், பருத்தித்துறை பிரதேச செய லக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரே.செல்வசுகுணா மற்றும் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சர்மிலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். நூலின் ஆய்வுரையை கவிஞர் யோ. புரட்சியும், வெளியீட்டுரையை கவிஞர் இ.த.ஜெயசீலனும், சிறப்புரையை நாடாளுமன்ற உறுப்பினரும் நிகழ்த்தினர். ஏற்புரையை நூலாசிரியர் கம்பிகளின் மொழி பிறேம் நிகழ்த்தி னார்.



### திருக்குறளை இசையோடு பாடலாகத் தொகுத்த இறுவட்டு வெளியீட்டு விழா

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரிலிருந்து வருகைதந்துள்ள சிறி என்பவர் (பாரிஸ் சிறி) 1330 குறள்களையும் சுமார் 150 கலைஞர்களின் குரலிலே இசையோடு பாடலாக தொகுத்து அதற்கான பொழிப்புரையும் இணைத்து வெளியிட்டுள்ளார். இவர் பல்வேறு இடங்களிலே இதனை வெளியிட்டு வருகின்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இந்த இறுவட்டு வெளியீட்டு விழா இடம்பெற்றது. 1330 குறள்களையும் சுமார் 150 கலைஞர்களின் குரலிலே இசையோடு பாடலாக தொகுக்கப்பட்ட இந்த இறுவட்டு சுமார் ஒன்பது மணித்தி யாலங்களைக் கொண்டுள்ளது. மேற்படி இறுவட்டு வெளியீட்டு விழாவிலே புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்ம லிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் பல உள்ளூர்க் கலைஞர்கள், கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சி.சக்திகிரீவன்
இந்து சமயப் பேரவை
யாழ்ப்பாணம்

# தமிழ்ப் புலமையாளர்கள் பல்கலையால் கௌரவிக்கப்பட வேண்டும்

உண்மையான தமிழ்ப் புலமையாளர்களைக் கௌரவிக்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஏன் முன் வரக்கூடாது. 101 ஆவது வயதில் விபுலானந்தர் நான்மணிமாலையை யாத்து வெளியிட்டுள்ள முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலத்துக்கு இலக்கிய கலாநிதி" பட்டம் வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தனக்குப் பெருமை சேர்த்துக் கொள்ளட்டும்.

இவ்வாறு முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் யாத்து வெளியிட்டுள்ள "விபுலானந்த நான்மணிமாலை'' நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி வெளியீட்டு விழா யாழ். இந்து சமயப் பேரவை தலைமைச் செயலகத்தில் சகலவித மங்கலப் பொலிவுடன் நடைபெற்றது. இந்த விழாவில் வாழ்த்துரையை பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் வழங்கினார். இந்த விழாவில் தொடர்ந்து பேசிய பேரவைக் கௌரவ செயலாளர் சி.சக்திகிரீவன் மேலும் கூறியதாவது,

ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் காலத்துக்குக் காலம் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. புறநானூற்றில் இடம்பெற்ற ஈழத்துப் பூதத்தேவனார் முதல் இற்றை வரையுள்ள தமிழறிஞர்களை உலகம் விதந்தே நிற்கிறது. ஈழநாட்டுத் தமிழறிஞர்களை தமிழ்நாட்டு அறிஞர்களும், சைவ ஆதீனங்களும் அவ்வப்போது பாராட்டிய சான்றுகள் அனேகம் உள்ளன.

யாழ்ப்பாணத்துத் தமிழறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளைக்கு பேராதனைப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 70 களில் ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கைப் பல்கலைக்கழக வளாகமாகவே செயற்பட்டது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் துணைவேந்தராக இருந்த காலத்தில் தொல்காப்பியக் கடல் பிரம்மஸ்ரீ கணேசையரின் மாணவனும் தமிழிலக்கண மாபெரும் அறிஞருமான பண்டிதர் இ.நமசிவாயத்துக்கு இலக்கண வித்தகர் பட்டமும், சைவசித்தாந்தப் பேரறிஞர் மு.ஞானப்பிரகாசத்துக்கு சித்தாந்த வித்தகர் பட்டமும் வழங்கப்பட்டன. இவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டத்தை இலக்கண கலாநிதி, சித்தாந்த கலாநிதி என்று ஏன்தான் வழங்கவில்லையோ என்பது விளங்காத புதிராகவுள்ளது. அளவையின் அளவோ அல்லது அளக்கப்பட்ட பொருளின் அளவோ குறைபாடுடையது என்பதை கல்வித்துறையில் ஆளப்புகுந்தோர் அறியாரோ?

பண்டிதர் மு.கந்தையர், பண்டிதர் சச்சிதானந்தம் போன்றோருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியமை மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியதொன்று.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் அமரர் க. நாகலிங்கம் இலக்கணத்துறையில் பல சாதனைகளைப் படைத்தவர். பல பண்டிதர்களை உருவாக்கிய சிறப்பிற்குரியவர், பல நூல்களை யாத்தவர். இவரை உயிருடன் இருக்கும்போது ஏன் கௌரவிக்கவில்லை. இது எமக்கேற்பட்ட தவக்குறை என்றே கருதுகிறோம்.

அருட்கவி.சீ.வினாசித்தம்பிப் புலவர் 100க்கும் மேற்பட்ட மரபுக் கவிதை நூல்களை வெளியிட்டவர். இவருக்கு ஏன்தான் கலாநிதிப் பட்டம் வழங்காது எம்.ஏ பட்டம் வழங்கினார்களோ தெரியவில்லை.

இன்று 101 வயதில் வாழும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் இருபதுக்கு மேற்பட்ட மரபுக் கவிதை நூல்களை யாத்து தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார். கிழக்கில் உதித்த விபுலானந்த அடிகளுக்கு நான்மணி மாலை பாடி அர்ப்பணித்துள்ளார். இவர் வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் பாலமாகவும் திகழ்கின்றார். இத்தகையவருக்கு யாழ்.பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டத்தை வழங்கி பல்கலைக் கழகத்தைப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாகக் கோருகிறோம்.

இந்தக் கூட்டத்தில் சங்கீத பூசணம் த.சிதம்பரநாதன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

ஆய்வுரையை சி.சிவஞானசேகரமும் வரவேற்புரையை சி.சிவஞானராசாவும் நிகழ்த்தினர்.

நூலைப் பேரவைச் செயலாளர் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்தார். நூலாசிரியர் விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



# அலெக்ஸ் பரந்தாமன் தந்துள்ள 'மரண வலிகள்' கவிதைத் தொகுப்பு

மகேஷ்

போர் ஏற்படுத்திய கொடிய வலிகளைத் தனக்கேயுரிய கவிதைத் திறன்கொண்டு வெளிப்படுத்தி அச்சேற்றியுள்ளார் கவிஞர் அலெக்ஸ் பரந்தாமன்.

எல்லோருக்குமான அவலம்தான் முடிவில்
அவர்களுக்குமாயிற்று
வாழவேண்டுமென்ற துளிர்ப்பும் துடிப்பும்
அவர்களை வழிமாற்றி
இன்னோரிடத்திலிருக்க வைத்தது

பறிபோன நிலமும்
வளவிலுள் பயிர் பத்தாடைகளும்
ஆடு மாடு கோழிகளும்
அயலிலுள்ள உறவினர்களுமாய்
எழுந்தவண்ணமிருந்தன அவர்களுக்கு
எந்நாளும் நினைவாய்

உச்சியிலிருந்த பகலவன்
ஊர்ந்து சரியும் நேரமதில்
அச்சொட்டாய் எழுந்து வந்து
அவர்களின் தரப்பாள் வீட்டுக்குள்
இறங்கி வெடித்தது
எறிகணையொன்று
மரணவலிகளை உணராது
மண்மடியில் அப்படியே
சிதறிய உடல்களாய்
சிந்திய இரத்தமாய்
மூச்சிழந்து முகம் மறைந்து
போனதை
இனியும் நான்
எப்படி எழுதுவேன் எனது
கவிதையில்?



என்ற ஆதங்கத்தோடு தொடங்கும் மரணவலிகள் தொகுப்பின் முதலாவது கவிதை மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து இவர் தங்கி இருந்த இடத்துக்கு அண்மையில் தங்கியிருந்த குடும்பத்தின் அநியாய அழிவை எண்ணி அழுகிறது. அது வாசகரின் உள்ளத்திலே வலியை ஏற்படுத்துகிறது.

கவிஞர் சுதந்திர முனைப்போடு முன்னைய நாள்களில் எழுதிய கவிதைகள் படைப்புகள் யாவுமே அவரை ஏளனம் செய்வதாக உணரும் வகையில், சூழ்ந்து கொள்ளும் நினைவுகளும் நிகழ்வுகளும் அவரை உறுத்துகின்றன. வலிகள் பலவிதம். அதனோடு விளையும் மரணங்களும் பலவிதம். போர் விரித்த துயரங்களால் பட்டவை எவை? பட்டுத் தெளிந்தவை எவை? என்ற வினாக்களுக்கான விடைகளைத் தேடும் வகை பொலிந்த வார்த்தைகள். கவிதைகளாகியுள்ளன.

சொத்தியும் முடமுமானோம்
சுதந்திர சிறிலங்காவில்
எந்த
சொந்தமும் பந்தமுமற்ற
சோதனை வாழ்க்கையானோம்
போர்
உத்தியைக் காட்டியதால்
உருக்குலைந்து போன வாழ்வில்
இனி
ஊன்றுகோல்களுடன் உலவுவதே
சுதந்திரம் என்பதைச்
சொல்லித்திரி

ஆடி ஆடியே எம் அயல் சிதைத்த போரின் கொடூரம், அவரைச் சுட்டெரிப்பதை சுதந்திரம் என்ற இந்தக் கவிதை சொல்லித் துடிக்கிறது.

பத்திரிகைத் துறையில் நீண்ட கால அனுபவம்கொண்டவர். இலங்கையில்




இன ஒடுக்கு முறைக்கெதிராகவும் சமூக அடக்கு முறைகளுக்கெதிராகவும் குரல் கொடுக்கும் ஓர் உன்னத படைப்பாளி கவிஞர் அலெக்ஸ் பரந்தாமன்.

கவிஞர் எழுதி ஜீவநதியின் நாற்பதாவது வெளியீடாகியுள்ள மரணவலிகள் என்ற இந்தத் தொகுப்பில் வாசிக்கப்படும் கவிதைகள் யாவுமே அனுதாபத்தோடு பார்க்கப்படக் கூடியவை அல்ல. வேதனையை எமக்குள் விளைவித்துத் தொடரும் பயணத்திற்குத் தெளிவான வழிகாட்டும் தொலைகாட்டியாகவே உள்ளன. போரால் சிதைவுற்ற உறவுகளின் நினைவுகளைத் தூண்டி எம்மைத் தீண்டும் எதிர்கால வலிகளுக்குீ ஒத்தடம் கொடுக்கும் மருந்தாகவும் இந்தத் தொகுப்பைக் காணலாம். இவரது அழுகைகள் நிரந்தரமில்லை என்றதோர் சிறுகதைத்தொகுப்பு ஜீவநதியின் 38ஆவ்து வெளியீடாக அண்மையில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனந்தா
கொக்குவில்

# கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு ஒரு மடல்...

தற்போது பாடசாலைகளில் பரிசளிப்பு விழாவுக்கான ஆயத்த நிகழ்வுகள் களைகட்டத் தொடங்கியுள்ளன.

அண்மையகாலங்களில்பலபிரபலமானஆரம்பபாடசாலைகளில் பரிசுத்தினத்தன்று அந்த நிகழ்வுகளில் பங்குபற்றும் மற்றும் பரிசு பெறும் மாணவர்கள் மட்டுமே அழைக்கப்படுகின்றார்கள். ஏனைய மாணவர்கள் அழையா விருந்தாளிகளாக வந்து பரிசளிப்பு மண்டபத்துக்குள் நுழைய அனுமதியற்றவர்களாக வெளியில் இருந்து அன்றைய தினத்தைக் கடத்தி விட்டு வீடு செல்வதும்இடம்பெற்றுவருகின்றது.பரிசுகள்இன்றிபரிசளிப்புக்கு அழைக்கப்படாததால்வராமல்விட்டவர்களும்அநேகம்.பரிசு அற்ற மாண வர்கள் பாடசாலைக்கு வரவேண்டாம் என்று கூறப்பட்ட நிலைமைகளும் உண்டு. எல்லா மாணவர்களிடமும் பரிசளிப்பு விழாவுக்கான தொகை அறவிடப்படுவது வேறுகதை.

பாடசாலை என்பது மாணவர்களுக்கு அறிவூட்டலுக்கும், வழிகாட்டலுக்கும், ஊக்குவித்தலுக்குமுரிய முதன்மையான, அடிப்படையான இடம் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. இத்தகைய கல்விச்சாலைகளில் இப்படியான நிகழ்வுகளில், மாணவர்களைப் பங்குபற்ற வைப்பது அல்லது கலந்து கொள்ள வைப்பது என்பது அதிபர் ஆசிரியர்களது தலையாய கடமையாகும்.

தற்போது பாடசாலைகளில் எந்தவொரு நிகழ்வுகளை நடத்தினாலும் மிகவும் கோலாகலமாகத்தான் செய்கிறார்கள். இந்த நிகழ்வுக்குரியசிலதேவைகளுக்காகவளமுள்ளபெற்றோர்களை, உற்றவர்களை பாடசாலை சார்ந்தவர்கள் நாடி ஓடுகிறார்கள். அவர்களும் தமது பிள்ளைகளின் நலன்கருதி பார்த்தும் பாராமல் பணமாக, பொருளாக, சேவையாக அள்ளி வழங்குகிறார்கள். கூடவே அவர்கள் இந்த நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக அழைக்கப்படுகின்றார்கள். அப்போது அந்த உறவுகள் குறையில்லாமல் உற்றார், உறவுகளுடன் வந்து கலந்து கொள்கிறார்கள். நக்கினார் நாவிழந் தார் என்பது போல பாடசாலை நிர்வாகமும் ஒன்றும் செய்ய முடியாமல் எல்லோரையும் நிகழ்வுக்கு உள்வாங்குகின்றது.

### அன்றைய தினம் வெளியில் நிற்கும் மாணவர்களின் நிலை என்ன?

நிகழ்வுக்கு மேலதிகமாக உறவுகள், அப்பாவி மாணவர்கள் என எல்லோரும் நிகழ்வு தவிர்ந்த இன்னொரு மண்டபம் அல்லது வேறொரு கொட்டகையில் இருக்கிறார்கள். அங்கே தொலைக்காட்சியில் நிகழ்வின் நேரடி ஒளிபரப்பு ஒளிபரப்பப்படுகின்றது. சில பிஞ்சுகள் ஏக்கத்தோடு டீ.வியைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் பல குழந்தைகள் அந்த நிகழ்வைப் பற்றி கவலைப் படாமல் தங்கள் பாட்டுக்கு விளையாடுகிறார்கள். அதில் இருவர் இவ்வாறு பேசிக் கொள்கிறார்கள் "டேய் உனக்கும் எனக்கும் போன முறையும் பரிசில்லை, இந்த முறையும் பரிசில்லை, இனியும் பரிசு எடுக்காட்டி ஜாலியா இந்தமாதிரி விளையாடலாம்". இது உண்மைச் சம்பவம்.

இப்படியான நிகழ்வுகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், அரசியல்வாதிகள், மதப் பெரியார்கள், ஆர்வலர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்கள் என எல்லோரும் பங்குபற்றுகிறார்கள். இவர்கள் ஏன் இவற்றைக் கண்டு கொள்ளவில்லை? இந்த நிலை சம்பந்தமாக பாடசாலை நிர்வாகத்திடம் கதைக்கும்போது இடப்பிரச்சினை என்கிறார்கள். ஒரு சாதாரண பெற்றோர் நான் மண்டபம் கட்டித்தாறன் என் பிள்ளையையும் கலந்து கொள்ள விடுங்கள் என்றா கேட்க முடியும்?

ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோருக்கும் தன்பிள்ளை யின் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் பார்த்து மகிழ ஆவல் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒரு தரப்பினர் அந்த நிகழ்வில் தொடர்பற்றவர் போல் இருப்பது பாடசாலை கல்வி முறைமையையே கேள்விக்குரியதாக்குகின்றது. புத்தகக் கல்வியை விரும்பினால் எங்கு வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் கலாசார பண்பாட்டியல் சார்ந்த, பழக்க வழக்கம் சார்ந்த, மதம் சார்ந்த ஒழுக்க நெறிமுறைகளை கூட்டாகக் கற்றுக்கொள்வது பாடசாலையில் மட்டும்தான் என்று சொன்னால் அதனை எவராலும் மறுத்துவிட முடியாது.



> நிகழ்வுக்கு மேலதிகமாக உறவுகள், அப்பாவி மாணவர்கள் என எல்லோரும் நிகழ்வு தவிர்ந்த இன்னொரு மண்டபம் அல்லது வேறொரு கொட்டகையில் இருக்கிறார்கள். அங்கே தொலைக்காட்சியில் நேரடி நிகழ்வு ஒளிபரப்பப் படுகின்றது. சில பிஞ்சுகள் ஏக்கத்தோடு டீ.வியைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் பல குழந்தைகள் அந்த நிகழ்வைப் பற்றி கவலைப் படாமல் தங்கள் பாட்டுக்கு விளையாடுகிறார்கள். அதில் இருவர் இவ் வாறு பேசிக் கொள்கிறார்கள். டேய் உனக்கும் எனக்கும் போன முறையும் பரிசில்லை, இந்த முறையும் பரிசில்லை, இனியும் பரிசு எடுக்காட்டி ஜாலியா இந்தமாதிரி விளையாடலாம்.

அண்மையில் ஒரு நிகழ்வில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கூறிய கருத்துக்களை இங்கு ஞாபகப்படுத்துவது பொருந்தும் என நினைக்கிறேன். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்று தொல்காப்பியர் கூறுவதுபோல், காலத்திற்கேற்ப பண்பாடு மாற்றமடைவது தவறல்ல. ஆனால் அவ்வாறு மாற்றமடைகின்றபோது அந்த மாற்றம் ஆரோக்கியமானதாக, அடிப்படைத் தன்மை மாறாததாக இருத்தல் வேண்டும். எமது பண்பாட்டுக் கோலங்களை அறவே அழிக்கின்ற வாழ்வியல் கோலங்கள் எமது இனத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கும்.

தற்போது பாடசாலை மாணவர்களாயிருக்கிறவர்களின் பெற்றோர்களுக்கு நன்கு தெரியும் தாம் பாடசாலைக் காலங்களில் தமது பாடசாலைகளில் இப்படியான நிகழ்வுகளில் கலந்து கொள்ளல் என்பது எந்தளவு முக்கியத் துவப்படுத்தப்பட்டது என்பது.

ஆகவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்களே, ஆர்வலர்களே, உளவியலாளர்களே, அரசியல்வாதிகளே, மதம் சார்ந்த பெரியோர்களே, இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான கருத்துக்களை துறைசார்ந்தவர்களிடம் முன்வையுங்கள்.

கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளே! அதிபர்களே! இதுபற்றிச்சிந்தித்துபாடசாலைதொடர்பானநிகழ்வுகளில் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் விதத்தில் விழாக்களை ஒழுங்கு செய்யுங்கள்.

**இன்றைய உடல், உள ஆரோக்கியமான குழந்தைகளே நாளைய சிறந்த வழிகாட்டும் தலைவர்கள்**

## கனவென்று உணர்வு கொண்டேன்

ஒரு நாளிரவு வைகறைப்போது
கையில்வளையும் கழலிற் சிலம்பும்
மெய்யிற் கலையும் மென்கழுத்தில் சிந்தாமணியும்
செவியிற் குண்டலமும் தந்தாள் ஓரணங்கு தரிசனை

சிற்றுளி கொண்டு சிற்பி செதுக்கு பொற்சிலை என்பேனோ
செங்கையிற் தூரிகொண்டு தீட்டுமாக் கலை என்பேனோ
பொற்புறுகயற் கண்ணோடு பொருது விற்புருவத்தாளின்
அற்புத அழகைச் சொல்ல ஆகுமோ நா ஒன்றாலே

விற்பிடித்து மதன்தான் வெருவுபூக் கணைக்கண்ணாளின்
மற்பொரு பார்வையாலே மயக்கந்தானதிகமாச்சே
பற்பொலி முத்துக்கள் என் பார்வையிற் பட்டதாலும்
சிற்றிடையாள் சிரித்த சிரிப்பில் நான் மயக்கமுற்றேன்

நான் என்னை மறந்தேன் அவளழகில் இன்பம் நிறைந்தேன்

நான் மானே என்றேன் அதுகானில் என்றாள்
மலரே என்றேன் அதுவாடும் என்றாள்
தேனே என்றேன் அவள் சீச்சீ என்றாள்
ஏனோ என்றேன் அதிற் பூச்சி என்றாள்

நான்பொன்னே என்றேன் அதிற் புடம் வேறென்றாள்
மின்னே என்றேன் அது மறையும் என்றாள்
கண்ணே என்றேன் அதற்கிமை காப்பென்றாள்
கனியே என்றேன் அது கரையுமென்றாள்

நான் மதியே என்றேன் அது தேயுமென்றாள்
ரதியே என்றேன் அது மதனதென்றாள்
மயிலே என்றேன் அதற்கிசை ஏதென்றாள்
குயிலே என்றேன் அதற்கொயிலேதென்றாள்

நான் கலையே என்றேன் அதன்நிலை ஓதென்றாள்
தமிழே என்றேன் அதுதான் அமிழ்தமென்றாள்
அழியாதென்றாள் என்றும் ஒழியாதென்றாள்
ஆகா என்றாள் என் அருகில் வந்தாள்

அன்பே என்றாள் அணைத்துத் தமிழின்பந்தந்தாள்
களிப்புடனே கண்ணை விழித்துக்கொண்டேன்
தயங்கிநின்றேன் அவள் மயக்கில் நின்றேன்
கனவென்றே உண்மை உணர்வுகொண்டேன்.



பா.வே. ஆ. தேவசகாயம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு

## மனிதனைப் பூரணமாக்கும்



கல்வி என்பது அலங்காரப் பொருளல்ல. அது வாழ்க்கையின் உயிர்நாடி. தோண்டத் தோண்டக் கிணறு ஊறும். கற்கக் கற்க அறிவு மேலும் வளரும். அதனாற்றான் செந்நாப் புலவர் வள்ளுவர் 'தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறும் அறிவு'–என்றார்.

தொடர்ந்து கற்றாலே அறிவு மேம்படும். நல்லவற்றைக் கற்று மக்கள் நலம் பெற வேண்டும். கல்வியின் நோக்கம் சமநிலை ஆளுமை கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதாகவும், வாழ்க்கையோடு இசைந்ததாகவும், சமுதாய எழுச்சியை மையமாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக, இயந்திரமயமானதாக, பெறுபேறுகளையும், பட்டங்களையும் மையமாகக் கொண்டதாக இருத்தல் கூடாது. உள்ளதை உள்ளபடி உணரும் பரந்துபட்ட அறிவும், எந்த நிலையிலும் எவருக்கும் அடிமைப்படாத உறுதிப்பாடும், அறிவின் மேம்பட்ட நிலைப்பாடாகும். நாளுக்கு நாள் புதுமை வளர்க்கும் நாகரிக மாறுபாடும், சமூக மேம்பாடும் கொண்டதாகக் கல்வி இருத்தல் வேண்டும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், வாழ்விப்பதற்கும் கல்வி உதவ வேண்டும்.

இப்படியான சிறந்த கல்வி நிலையை மாணவர்கள் அடைவதற்கு வெறும் பாடப்புத்தகங்கள் மட்டும் ஏற்புடையனவாகாது. பாடப்புத்தகங்களோடு மட்டும் உள்ள மாணவர்கள் வெறும் புத்தகப்பூச்சிகள் என்றே கற்றோரால் அடையாளப்படுத்தப்படுவதைக் காணலாம். பாடப்புத்தகங்கள், பாடம் சம்பந்தமான அறிவை மட்டுமே மாணவர் களுக்குக் கொடுக்கிறது.

பரந்துபட்ட கல்விப் பயன்பாடும், தெளிந்த சிந்தனையும், சமுதாய ஒருங்கிசைவும், மக்கள் நேர்த்தி கொண்ட அறிவும், உலக நிலைப்பாட்டை அறிவதற்கும் மாணவர்களுக்கு வாசிப்பு மிகவும் அவசியமானது.

உயர் கல்வி மேம்பாட்டுக்கு பொதுஅறிவு, பொது உளச்சார்பு என்பன மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. வகுப்பறைக் கல்வி மட்டும் இவற்றுக்கு ஏற்புடையனவாகா. தினசரிகளில் அரசியல் நிலை, தற்காலச் சிந்தனை, கல்வி நிலை, நவயுகம், சமுதாய நிலைப்பாடு, சமூகச் சீர்கேடுகள் பற்றி எழுதுகிறார்கள். கருத்துக்களை சான்றோர் திறம்பட வெளியிடுகிறார்கள். என்றால் அந்தத் திறமை அவர்களுடைய வாசிப்புத் திறனாலும், சிறந்த கிரகிப்பின் மூலமும் வந்ததேயன்றி வேறல்ல.

சிறந்த மேன்மையான, சமுதாய ஒத்திசைவான வழிகாட்டக்கூடிய பரந்துபட்ட அறிவைப் பெறுவதற்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள், புது வித ஆக்கங்கள் கொண்ட சிறந்த நூல்கள் போன்றவை மக்கள் அறிவு வளர்ச்சிக்கும் புதுமை நோக்குக்கும் இன்றியமையாதவையாகும். கண்டதும் கற்கப் பண்டிதனாவான் என்ற வாசகம் தவறானது. கண்ட குப்பைகளை எல்லாம் கற்றால் பண்டிதனாக முடியாது. கண்டு அது கற்கப் பண்டிதனாவான் என்பதே சரி. வாழ்க்கை முன்னேற்றத்துக்கு எது நல்லதோ, எது நல்லறிவைக் கொடுக்குமோ அதைத் தெரிந்து கற்பவனே அறிஞனாவான். கற்பது மட்டுமன்றிக் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும். அல்லது பிடித்தது பிள்ளையார், வந்ததோ குரங்கு என்ற நிலையாகிவிடும். பாலோடு நீர் கலந்து வைத்தால் பாலை மட்டுமே அருந்துமாம் அன்னப்பறவை. அதுபோல நாமும் நல்லவற்றைத் தெரிந்து கற்றுணர வேண்டும்.

மனித மேம்பாட்டுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் நவயுக மேன்மைக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் வாசிப்பு மிகவும் முக்கியமானது. அதனாற்றான் வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்று கற்றறிந்தோர் கூறினார்கள். சிறந்த நூல்களும் சிறந்த ஆசிரியர்களே. பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கும் உள மேம்பாட்டுக்கும், பொதுஅறிவுக்கும் இன்றியமையாதவை.

ஆனால், தற்போது மாணவர்களதும், மக்களினதும் மனதைக் கெடுக்கின்ற திரைப் படங்கள், தரங்கெட்ட சஞ்சிகைகளே ஏராளமாக வெளிவருகின்றன. இவை பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடேயன்றி, மாணவர், பொதுமக்கள் மனதைப் பற்றியோ, மனித விழுமியங்களைப் பற்றியோ, சமுதாய முன்னேற்றத்தை பற்றியோ சிந்திக்க வைப்பனவல்ல. இப்படியான வெளியீடுகளினால் சமுதாயச் சீர் குலைவையும், மனித நேயமற்ற தன்மையையுமே, நாம் காணக்கூடியதாக இருப்பதைச் சமகாலத்தில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கொண்டே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். ஆகவே மாணவர்கள் சிறந்த நூல்கள், சஞ்சிகைகளை வாசித்து நற்பயன் பெறவேண்டும். வாசிக்காதவன் மனதில் அறியாமை என்னும் தூசிபடியும். நூல்கள் தான் வாழ்வின் படிக்கற்கள் என்பதை உணருங்கள். நல்லவற்றை வாசித்து வாழ்வில் முன்னேற முயலுங்கள்.

நூல்கள் எங்கள் ஆசான்கள்.
நுண்ணறிவுடைய ஆசான்கள்.
புத்தகங்கள் எம் ஆசான்கள்.
தத்துவமான ஆசான்கள்.
வெள்ளைத்தாளும் கறுப்புமையுமாய்
விளக்கமளிக்கும் ஆசான்கள்
கம்பெடுக்காமல் கற்றுக்கொடுக்கும்
கண்ணியமான ஆசான்கள்.
கோவிக்காமல் கற்றுத்தரும்
கோட்டுப்போட்ட ஆசான்கள்
அந்துப்பூச்சியும், அரிகறையானும்
அரித்துத் தின்ன விட்டிடாமல்
பொத்திப் பொத்திக் காத்திடவேண்டிய
பொக்கிஷங்கள் இந்த ஆசான்கள்.
நுண்ணறிவு அடைய வேண்டின் நூலொடு பழகு
(READING MAKES A MAN FULL)

**க.பேரின்பதாசன்**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்,மன்னார்


# திருகோணமலையில் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா

ஊடகவியலாளர் சேனையூர் அ. அச்சுதன் எழுதிய 'பேச்சும் செயலும்' கவிதை நூல் வெளியீட்டு விழாவும், கலாபூஷணம் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் (சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய பிரதம குரு) அவர்களின் 'ஏக்கம்' கவிதை நூல் வெளியீட்டு விழாவும், எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கமும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கிராமிய தொழில்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் கு.குணநாதனும், கௌரவ அதிதியாக திருகோணமலை நகர சபையின் முன்னாள் தலைவர் க. செல்வராஜாவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.











"பேச்சும் செயலும்" கவிதை நூலின் முதற்பிரதியை வீரகேசரி பத்திரிகையின் திருகோணமலை முகாமையாளர் து. சஞ்சீவனும், 'ஏக்கம்' கவிதை நூலின் முதற்பிரதியை [illegible] ஹரிஓம் நா.செல்வரத்தினம் [illegible] பெற்றுக்கொள்வார்கள்.

'பேச்சும் செயலும்' நூலின் மதிப்பீட்டு உரையை சிரேஷ்ட சட்டத்தரணி ஆ. ஜெகசோதியும், 'ஏக்கம்' கவிதை நூலின் மதிப்பீட்டு உரையை ஓய்வு நிலை முதல்வர் கட்டைப்பறிச்சான் க. கனகசிங்கமும் நிகழ்த்துவார்கள்.

வரவேற்புரையை இளம் ஊடகவியலாளர் பா.விபூஷதனும் நன்றி ரையை எழுத்தாளர் திருமதி' உமாராஜன் பிரதீபாவும், நிகழ்வின் ஒருங்கிணைப்பை கவிஞர் தி. பவித்திரனும் வழங்கவுள்ளனர். (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org

# கவிமணியின் கவிதை



தமிழ்க் கவிஞர்களில் சிறப்புப் பெயருடன் சேர்த்துக் குறிக்கப்படுபவர்கள் சிலரே. முன்பு கவிச்சக்கரவர்த்தி என்னும் பெயர் பெற்றுத் திகழ்ந்தார் கம்பர். இன்று வரையில் அவருடைய காவியத்துக்கு இணை சொல்லும்படியான காவியம் எமது மொழியில் பிறக்கவில்லை. தமிழுலகில் இன்றும் கவிச்சக்கரவர்த்தியாகவே அவர் வாழ்ந்து வருகிறார்.

சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த தமிழ்ப் பெரியார் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பழைய ரீதியிலே பற்பல பிரபந்தங்களையும் பெருநூல்களையும் இயற்றியுள்ளார். அத்தோடு எண் ணற்ற தமிழ் மாணவர்களுக்கும் தமிழ்க் கல்வியை அளித்தார். இவரைக் கலைமகளின் அவதாரம் என எல்லோரும் கொண் டாடினர். அடைமொழியின்றி எவரும் இவரது பெயரை உச்சரிக்கத் துணியார். தமிழிலே எத்தனை வித்துவான்கள் இருந்தாலும் 'மகா வித்துவான் என்ற பெயர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு வருக்கே உரியதாயிற்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே தமிழுக்குப் புத்துயிரும் புதுவாழ்வும் தழைக்க வழி வகுத்து, கவிதையிலும் வசனத்திலும் தமிழின் அற்புத சக்தியை வெளியிட்டார் சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டோர் பலரிருந்தாலும் பாரதி யார் என்றால் சுப்பிரமணிய பாரதியாரே எமது கண்முன் தோன்றுகின்றார். இந்தப் புதுமைக் கவியைப் போன்றே நமக்குப் பண்பட்ட தமிழ்க் கவிதைகள் பலவற்றை நல்கி, நம்மையெல்லாம் மகிழ்வித்து வந்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவரைத் தமிழுலகுக்கு வாய்த்த கவிமணி எனத் தமிழுலகம் வாயார வாழ்த்துகின்றது. கண்ணாரக் காண ஒரு கவிஞர் எனப் பல ஆண்டுகளுக்கு முன்பே இவரைப் பாராட்டியுள்ளார் ரஸிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார்.

கவிமணி என்னும் சிறப்புப் பெயர் இவருக்கு மிகமிகப் பொருத்தமாக அமைந்துவிட்டது. (இந்தப் பெயரால் தேசிக விநாயகம்பிள்ளை அவர்களை அழைக்கக் காரணமாயிருந்த தமிழ்ச் சங்கத்தாரை நாம் என்றும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.)

உண்மையிலேயே தேசிய விநாயகம்பிள்ளை தற்காலக் கவிஞர் களிடையே தலைமணியாய்க், கவிமணி யாய்த் திகழ்ந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை, தற்காலத்துள்ள கவிஞர்களில் தலை சிறந்தவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

வாழ்க்கை முற்றும்
கனவெனக் கூறிய
மறைவ லோர்தம்
உரைபிழை யன்றுகாண்

என்று பாரதியார் கூறுமாறு போல சென்ற கால வாழ்க்கையைப் பார்க்கும் பொழுது ஒரு கனவு போலத் தோன்று கிறது. சாதாரணமாணவர்களுடைய வாழ்க்கையோ,பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போனதுவே எனப் பட்டினத்தார் சொல்வதுபோல மெல்ல மெல்ல மறைந்து போகலாம். ஆனால், கவிஞனுடைய வாழ்க்கைக் கனவுகள் அப்படியல்ல, என்றும் எமது தமிழ் மக்களுக்கு இன்பமளித்து வருவதாம்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் வாழ்க்கைக் கனவுகளை சிறப்பாக அவருடைய கவிக் கனவுகளை, முறையாகக் காண என்னுளம் அவாவியது. இந்த இருப்பின் காரணமாகவே தோன்றுகிறது இந்தக் கட்டுரை. இந்தக் கட்டுரையில் கவிமணியின் கவிக் கனவுகளில் ஒன்றைக் காண்போம்.

கவிமணி பிறந்தது 1876 ஆம் ஆண்டு. தமிழ்க் கணக்கிலே சொல்லப்போனால் தாது வருடம் ஆடி மாதம் 14 ஆம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தில் இவர் தோன்றினார். இந்தத் தாது வருடம் தமிழ் நாட்டில் பெரும் பஞ்சத்தை விளைவித்தது. தாது வருடப் பஞ்சம் என்று பின்புள்ளோர் மறவாது சொல்லி வருமாறு செய்து விட்டது இந்தப் பஞ்சம். இதனால் கொடுமையை நாம் ஓரளவு ஊகிக்கலாம். ஆயினும் இந்தப் பஞ்சம் எமது மொழிக்கு ஓர் அழகிய இலக்கியத்தையும் அளித்திருக்கிறது. அதுதான் வில்லியப்பபிள்ளையின் பஞ்சலட்சணத் திருமுக விலாசம். இந்த நூல் தாது வருடப் பஞ்சக் காட்சிகளையே பொருளாகக் கொண்டு எழுந்தது. எளிய நடையில் கவிதை தோன்றுவதற்கு இது ஒரு வழிகாட்டியாகவும் அமைந்தது.

கற்போர்களுடைய ஊன் கலந்து, உயிர் கலந்து இனிக்கும் அருட்பாக்களையும், மனு முறைகண்ட வாசகம் முதலிய அருமையான வசனங்களையும் எமக்கு அளித்து, சமரச சுத்த சன்மார்க்கத்தை இந்த நாட்டில் பரப்பிய இராமலிங்க சுவாமிகள் இந்தத் தாது வருடம் பிறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்தான் ஜோதியில் கலந்தார். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் தமிழ்ப் பயிரும் சைவப் பயிரும் தழைக்கப் பெருந்தொண்டுகள் செய்து வந்தார். திருக்குறள், தொல்காப்பியம், பெரிய புராணம் முதலிய பல தமிழ் நூல்களை அச்சு வாகனமேற்றினார். கோயில் புராணம், நன்னூல் முதலிய இலக்கிய இலக்கணங்களுக்கு உரை வகுத்தார்; இளம் குழந்தைகளுக்காக அரிச்சுவடி முதலிய பாலபாடங்களை ஆக்கி அளித்தார். சைவ நன்மக்களுக்காகத் திருவிளையாடல்புராணம், பெரிய புராணம் முதலியவற்றை வசன உருவில் அளித்தார். யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலைகள் அமைத்தார். ஏககாலத்தில் வாழ்ந்த இவ்விரு பெரியார்களால் தமிழும், சைவமும், சமரச சுத்த சன்மார்க்கமும் தமிழ் நாட்டில் சிறந்த நிலையடைந்து செழித்தோங்கி வளர ஆரம்பித்தன.

இந்தக் காலத்தில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் தமிழ்த் தொண்டு தமிழ் நாடெங்கும் சிறந்த பயனை விளைவித்து வந்தது. இவருடைய நண்பர் வேதநாயகம்பிள்ளை எளிய இனிய கவிதைகளும் வசனங்களும் ஆக்கி நமக்கு அளித்தார். கோபால கிருஷ்ண பாரதியார், கவி குஞ்சர பாரதியார் முதலியோர் கீர்த்தனைக் கவிதை கள் பாடி இசைத் தமிழை வளர்த்தனர். வயிற்றுக்கு உணவு குறையாயிருந்தாலும் சிந்தைக்கும் செவிக்கும் இனிய தமிழுணவு எமக்கிருந்தது. எனினும், இந்த ஆண்டில் ஒரு பெரிய தமிழ் மேதையை, பெருங்கவிஞனை, தமிழ்ப் பெரு வள்ளலை இழக்க நேர்ந்தது. தமிழ்க் கல்வியின் நிலைக்களமாயிருந்த பெருங் கவிஞர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இந்த மண்ணுலகில் புகழ் நிறுத்தி விண்ணுலகு எய்தினார். இந்த மகாவித்துவானின் மறுபிறவியே போன்று நமது கவிமணி அந்த ஆண்டு இந்த உலகில் தோன்றினார். இருபெருந் தமிழ்க் கவிஞர்களை ஞாபகமூட்டும் இந்தத் தாது வருடத்தை எம்மால் மறக்க முடியுமா?

கவிமணி பிறந்த குடும்பமோ பரம்பரையாகவே புலமை நிலைபெற்ற தமிழ்க்குடும்பம். ஆனால், அவர் பிறந்த நாஞ்சில் நாட்டில் தமிழ் போதிக்கும் பாடசாலைகள் அந்த நாளில் இல்லை. ஆரம்பப் பாடசாலை முதல் இளங் குழந்தைகள் கற்று வந்தது தமது தாய் மொழியாகிய தமிழையன்று; ஆட்சி மொழியான மலையாளத்தைத்தான். கவிமணியும் கலாசாலையில் மலையாளமும் ஆங்கிலமும்தான் கற்றார்.

பாடசாலைக் கல்விக்குரிய நேரம்போக எஞ்சிய பொழுதையெல்லாம் தமிழ்க் கல்வியில் போக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. கவிமணியின் பிறந்த ஊராகிய தேரூரை அடுத்த வாணன்திட்டில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மடம் ஒன்று உண்டு. கவிமணி கல்வி பயிலும் காலத்தில் சாந்தலிங்கத்தம்பிரான் என்ற ஒரு பெரியார் அந்த மடத்தின் அதிபதியாயிருந்தார். இந்தப் பெரியார் தேவாரம் முதலிய திருப்பாட்டுக்களையும், திருவிளையாடற்புராணம் முதலிய பெருநூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். இலக்கியக் கல்வியோடு இலக்கணத்திலும் சிறந்த பயிற்சியுடையவர்.

இந்தத் தம்பிரானைச் சார்ந்து தமிழ்க் கல்வியை முறையாகச் சில ஆண்டுகள் பெற்றார் நம் கவிமணி. இந்தக் கல்வியின் பயனாகக் கவிபாடும் ஆர்வமும் அவருள்ளத்தில் முளைத்தெழுந்தது.

சாந்தலிங்கர் தலைமை மடத்தின் ஆணைப்படி வேறிடம் செல்ல, அங்கே சங்கரலிங்கத் தம்பிரான் என்பவர் வந்து சேர்ந்தார்.

இவரும் கவிமணியிடம் பேரன்பு காட்டித் தமிழ் விருந்து செய்தார்.

கவிமணியின் கவிதைகளைப் பாராட்டி அந்தத் துறையில் அவருக்கு ஊக்கம் அளித்தார்.

கவிமணி பாடிய எளிய இனிய கவிதைகள் தம்பிரானின் உள்ளத்தைக் கவர்ந்தன. கவிமணியின் கவி பாடும் ஆர்வத்தை நன்குணர்ந்த சங்கரலிங்கர், தமது மடத்தின் அருகில் கோயில் கொண்டுள்ள தேவி அழகம்மையின் மீது பாடல் பாடத் தூண்டினார். கவிமணியின் கவிதைத் துடிப்பை ஒருமுகப்படுத்திய பெருமை சங்கரலிங்கரையே சாரும். இவருடைய ஆணையால் பிறந்தது அழகம்மை ஆசிரிய விருத்தம். அப்போது கவிமணிக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிருக்கலாம். இந்த ஆசிரிய விருத்தம்தான் கவிமணியின் கன்னிக் கவிதை. உதய மார்த்தாண்ட விநாயகரைக் குறித்த காப்புச் செய்யுளாகிய வெண்பா நீங்கலாகப் பத்து ஆசிரிய விருத்தங்கள் இதில் உள்ளன. கவிமணி தமது இளமையில் பெற்ற கல்விப் பயிற்சியின் ஆழம் இந்தப் பாடல்களில் நன்கு துலங்குகிறது. இவை முன்னையோர் கருத்துக்களையும் போக்கையும் பெரும்பாலும் தழுவி அமைந்துள்ளன. தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் முதலியோரது விருத்த முறையில் பாடல்கள் செல்லுகின்றன. அழகம்மை ஆசிரிய விருத்தத்தில் அவர் மேற்கொண்டு பாடிய கருத்துக்களைத் தெரிவிக்கும் ஒருசில வரிகள் வருமாறு:

ஆற்றுப் பெருக்கையொத்
தழிகின்ற செல்வத்தை
அடைவதில் விருப்புமில்லேன்;
ஆண்டியாய் வேண்டிப்
புசித்துண்டு நாடோறும்
அலைவதில் வெறுப்புமில்லேன் (2)

பொன்னையே பெண்ணையே
மண்ணையே எண்ணி என்
பொழுதெல்லாம் போக்கிவிட்டேன்:
புண்ணியச் செயலெதும்
பண்ணியான் அறிகிலேன்
பொல்லாங்கு புரியும் நெறியேன் (4)

நிலையாமைக் கருத்துக்களும் உலக இன்பத்தை வெறுத்துத் துறவை விரும்பும் மனப்பான்மையும் இந்த வரிகளிலே தரப்படுகின்றன. இவற்றைக் கவிமணியின் உளத்தொடுபட்ட எண்ணங்கள் என்று கூறமுடியுமா? கற்ற பாடத்தைத் திருப்பிக் காட்டுகிற ரீதியிலேதான் இந்தப் பாடல்களில் காணும் கருத்துக்கள் அமைந்துள்ளன. எனினும், இந்த விருத்தக்கவிகள் ஒவ்வொன்றின் ஈற்றிலும் தேரூரை இரதபுரி என்னும் புதுப் பெயரால் அழைத்து, அந்த இரதபுரியை வர்ணிக்கின்ற பகுதி மிக அழகாக அமைந்துள்ளது.

(தொடரும்)

வித்துவான்
மு.சண்முகம்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org